கல்கி

KALKI
1.3.1970
40 காசு



பாருங்கள்...வித்தியாசத்தை!

வெண்மை பளிச்சிடச் செய்வதில் இணையற்றது டினோபால்





விளைவுகளே கூறுகின்றன! துவைத்த துணிகளை அலசுவதற்குமுன் வாளியிலுள்ள தண்ணீரில் சிறிதளவு டினோபால் சேர்க்கவும். பிறகு பாருங்கள், சலவையின் வெண்மை எப்படிப் பளிச்சிடுகிறது என்று! சட்டை, புடவை, படுக்கை விரிப்பு, டவல் எல்லாமேதான்!

இத்தனைக்கும் ஆகும் செலவு, துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவு! டினோபால் வாங்குங்கள். ரெகுலர் பாக், எகானமி பாக் மற்றும் ஒரு வாளித் துணிக்கு ஒரு பாக்கெட் ஆகிய மூன்று அளவுகளில் கிடைக்கிறது.

®டினோபால் என்ற பெயர் ஜே.ஆர்.கெய்கி எஸ்.ஏ. பால் ஸ்விட்ஸர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த.பெ. 11050, பம்பாய்-20 BR

Shilpi SGI-1A/69 Tam

சௌமிய, மாசி, 18 - 1970, மார்ச் 1

கல்கி

பொருளடக்கம்

இனி வரும் தலைமுறைகளுக்கு நாம் இழைக்கும் தீமை	— 3
ராஜாஜியின் கருத்துக்கள்	— 4
என்ன சேதி?	— 6
பொன்னியின் செல்வன்	— 9
இத்தாலிய காந்தி	— 17
ராமாயணம்	— 18
சிலையைத் தேடி...	— 22
சோபா சிங்கைச் சந்திப்போம் !	— 24
ரகுபதி ராகவ	— 27
குடை ராட்டினம்	— 29
இலக்கிய எரிமலை	— 35
சாருலதா	— 37
பாராட்டு விழா	— 47
என் நிலையில் நீ இருந்தால்...	— 52
காந்தி : ஒரு குழந்தை !	— 59
ஒரு கவியின் மரணம்	— 60
விவசாயத்தில் இன்று...	— 67
வட்டமேஜை	— 68

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20	ரூ. 10
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21	ரூ. 10/50
இதர நாடுகள்	ரூ. 40	ரூ. 20


'சரண்' சிங்
ஜெயிக்கிற
கட்சி
பற்றிய
குறிப்புகள்
அரசியலைப்
புனிதப் படுத்துங்கள்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ✻ இதழ் 31

இனி வரும் தலைமுறைகளுக்கு நாம் இழைக்கும் தீமை

தீமை விளையும் என்று தெரிந்தும் மனிதன் விடாப் பிடியாகக் கெட்டதைச் செய்து வருவானேன்? இதற்குப் பதிலைக் கீதையில் காணலாம். ஆசை, கோபம் போன்ற தீவிர உணர்ச்சிகள் ரஜோ குணத்தினின்று எழுபவை. தவறு, பாவம் என்று தெரிந்தும் மனிதனைத் தகாத காரியங்களில் இவை ஈடுபடுத்துகின்றன. விஞ்ஞானம் வேறு, தொழில் நுட்பம் வேறு; விஞ்ஞானம் உண்மையை ஆராய்ந்து கண்டு பிடிப்பதில் முனைகிறது. அம்மாதிரி கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை மனிதனின் பணிகளுக்காகப் பயன்படுத்துகிறது தொழில் நுட்பத் திறன். எவற்றையெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்து பார்ப்பது இப்போதைய உலக வழியாகிவிட்டது. பிராங்க் டார்லிங் பின்வருமாறு கூறுகிறார் :

> ''தொழில் நுட்பத் திறன் நமது மனத்தை ஆட்கொண்டு விடுகிறது. அதைப் படைத்தவன், அதற்கு எஜமானன் என்பதை மனிதன் மறந்து அதன் அடிமையாகி விடுகிறான். கார்களின் வேகம் அதிகரித்துக்கொண்டே போகிறது. டிரக்குகள் பெரிதாகிக் கொண்டே வருகின்றன. ரோடுகளை அகலப்படுத்திக் கொண்டே போகிறார்கள். விவசாயமும் இயந்திர மயமாகி வருகிறது. இவற்றின் விளைவாக நடைபாதைகள் நஷ்டமாகின்றன. மரங்கள் வெட்டப்படுகின்றன. திறமையின் பெயரால் இவையெல்லாம் நடக்கின்றன.''

தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சி காரணமாகக் காற்று, நீர், மண் ஆகிய அனைத்துமே அசுத்தமாகி வருகின்றன. எதிர்காலத்தில் நமது உலகில் மனித வாழ்வு சிறப்பாக இருக்கும் என்று நம்புவதே சிரமமாகி விட்டது. தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் கர்வம் மேலோங்கிக் காணப்படுகிறது. 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்' என்ற முதுரையை மறந்து விட்டோம்.

தொழில் நுட்பத் துறையின் முன்னணியில் இருக்கும் நாடுகள் இடையறாது அசிங்கமான, விஷ மயமான கழிவுப் பொருள்களைத் தயாரித்தவண்ணம் இருக்கின்றன. பண்டங்களை வாங்கி உபயோகிப்போரின் இன்பத்துக்காக நடைபெறும் உற்பத்தியின் உப—பொருட்களே இவை. இந்தக் கழிவுப் பொருட்களை நதிகளிலும் கடல்களிலும் விடுகின்றனர். வானிலும் பரவி மழையுடன் நஞ்சாக அவை திரும்பி வருகின்றன.

அணு ஆயுதச் சோதனைகளாலும், வெடிகளாலும் ஏற்படும் அசுத்தத்தைப் பற்றி உலகம் இப்பொழுது நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறது. அவற்றின் தீமை தெளிவாகப் புலப்படுகிறது. அணுஆயுதங்களின் பரவலைத் தடை செய்வதற்கான உடன்படிக்கைகள் ஒருபுறம் உருவாகையில், அணு வல்லரசுகள் இந்தச் சாதனங்களைப் பெருக்கிக் கொண்டே போகின்றன; அவற்றைக் கைவிடுவதற்கான விவேகமோ, தைரியமோ அவற்றுக்கு இல்லை.

பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன்படுத்துவது ஓரளவு வரை சரி. ஆனால் இப்பொழுது அது பிரமாதமாகப் பரவி விட்டது. பூச்சிகளைக் கொல்வதன் பெயரால் ஜீவராசிகளிடையே உள்ள நமது சிறந்த நண்பர்களையும் அழித்து விடுவதற்கு அது காரணமாகிறது. அதன் மூலம் இப்பொழுது வாழும் மக்களின் ஆரோக்கியம் மட்டுமின்றி இனி வரக்கூடிய சந்ததிகளின் நல்வாழ்வும் பாதிக்கப்படுகிறது. தொழில்கள் வெளிப்படுத்தும் கழிவுப் பொருட்கள் நீர்நிலைகளையும், வாயு மண்டலத்தையும் அசுத்

கப்படுத்துகின்றன. மனிதனையும் அவனுடைய நண்பர்களாகிய விலங்கினங்களையும் அவை பாதிக்கின்றன. கடலிலும் தரையிலும் வாழ்கின்ற அனைத்துமே இந்தத் தீமைக்கு உள்ளாகின்றன. கழிவுப் பொருட்கள் அழிவதில்லை, இடையறாது குவிந்தவண்ணம் இருக்கின்றன. திறமையான பூச்சி மருந்துகள் எனப்படுபவை நதிகளிலும் கடல்களிலும் உள்ள நமது நண்பர்களைக் கொல்கின்றன. இதன் மூலம் நமது உணவு விநியோகம் குறைகின்றது.

இவை ஒருபுறமிருக்க, வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமே இதனால் பாதிக்கப்படுகிறது. தாவரங்களும், மனிதனும் விலங்கினங்களும் மூச்சு விட்டு உயிர் வாழ்பவை. மனிதனுக்கும் விலங்கினங்களுக்கும் தேவைப்படும் பிராணவாயுவை வாயு மண்டலம் தருகிறது. பிராணவாயுவைக் கொடுத்து விட்டுக் கரியமில வாயுவை அது ஏற்றுக் கொள்கிறது. அந்தக் கரியமில வாயு தாவரங்களின் உணவாக அமைகிறது. பிராண வாயு விடுபட்டு மனிதனும் விலங்குகளும் சுவாசிப்பதற்காகத் திரும்பவும் கிடைக்கிறது. இதுதான் இயற்கையாகவும், பரஸ்பர அடிப்படையிலும் நடந்து வரும் சேவை. இந்தச் சமவசதி நிலைமை இப்பொழுது பாதிக்கப்பட்டு வருகிறது. மூச்சு விடும் உயிரினங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஒரு காரணம். அதையடுத்துச் செடி கொடிகளும், மரங்களும் தொழில் வளர்ச்சிக்காகவும், சாலைகளை அகலப்படுத்துவதற்காகவும் அழிக்கப்பட்டு வருவதன் விளைவுகள் மற்றொரு காரணம். மேலும் நிலக்கரியும் எண்ணெயும் எஞ்சின்களையும், இயந்திரங்களையும் இயக்குவதற்கு அதிகமாகப் பயன்பட்டு வருகின்றன. இவற்றால் கரியமில வாயுவின் உற்பத்தி பெருகுகிறது. வாயு மண்டலத்தில் உள்ள பிராணவாயுவின் அளவு குறைகிறது; ஒவ்வொரு காரும் டிரக்கும் நீராவி எஞ்சினும், ஒவ்வொரு தொழில் விவசாய எஞ்சினும் வாயு மண்டலத்தில் உள்ள பிராணவாயுவை மேலும் மேலும் குறைக்கின்றன.

முன்னேற்றத்துக்கு அத்தியாவசியம் என்பதன் பெயரால், தொழில் நுட்பத் துறையின் வளர்ச்சியானது மனிதனது சுதந்திரமான மனோ திடத்தைப் பறித்துவிட்டது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், எதைச் செய்ய முடியுமோ அதைச் செய்தே தீருவது என்று ஆகிவிட்டது. இனி வரும் சந்ததிகளுக்குத் தீமை என்று தெரிந்தாலும்கூட விடாப்பிடியாக அவற்றைச் செய்கிறோம். தொழில் நுட்பத் திறனின் எஜமானனாக இருக்க வேண்டிய மனிதன் அதன் அடிமையாகி விட்டான். இவ்வளவு முன்னேற்றம் ஏற்படாத காலத்தில் மனிதன் விவேகியாக வாழ்ந்தான் எனத் தோன்றுகிறது. முன்னேற்றத்தினால் விளையும் தீமைகளைச் சமாளிப்பது எப்படி என்பதே இப்போது பிரதான வேலையாகி விட்டது.

மாங்கொட்டையை நட்டுக் கொண்டிருந்த கிழவனைக் கேலியாகக் கேட்ட கேள்வி நினைவிருக்கும். 'அது செடியாகி, மரமாகி அவன் காலத்துக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் பழம் தரும்; அப்படி இருக்க அவன் நடுவானேன் ?' என்பது கேள்வி. இனி வரும் சந்ததிகளின் நன்மைக்காகத் தான் நடுவதாகப் பதில் அளித்தான் கிழவன். நாம் இப்பொழுது என்ன செய்கிறோம்? இனி வரும் தலைமுறைகளுக்காக வேண்டி இப்பொழுது உலகை அசுத்தமாக்கி வருகிறோம். கிழவனது பதிலைத் தலைகீழாக மாற்றிச் சொல்லும் நிலைமையில் தான் பணக்கார நாடுகளும், செல்வத்தை நாடும் பிற தேசங்களும் இருக்கின்றன. இனி வரும் சந்ததிகளுக்காக நாம் செடி வைக்காமல் இருக்கலாம். ஆனால் நமது குழந்தைகளுக்கும், பேரக் குழந்தைகளுக்கும் பயங்கரமான தீமைகளை விளைவிக்கக் கூடிய காரியங்களைச் செய்யாமலாவது இருக்கலாம் அல்லவா ?

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதிய கட்டுரையின் சுருக்கம்.)


ராஜாஜியின் கருத்துக்கள்

''ஹிந்துஸ்தான் டைம்ஸ்'' தலையங்கம் பின்வருமாறு கூறுகிறது:

''பாரதீய கிராந்தி தளமும், புது காங்கிரசும் ஒப்பந்தம் செய்து கொள்ளுமுன்னர் நடந்தவற்றை யெல்லாம் கவனித்தால், அந்த ஒப்பந்தத்தில் காணப்படும் வாக்குறுதி விஷயமாக உற்சாகம் கொள்ள முடியாது. 'ஊதாரித்தனம், காலதாமதம், ஊழல் முதலியவை இல்லாத, திறமையான சுத்தமான நிர்வாகத்தை' அந்த ஒப்பந்தம் வாக்களிக்கிறது. இன்னும் பல தரப்பட்ட கொள்கைகளும் அதில் இடம் பெற்றுள்ளன. ஆனால் சென்ற சில வாரங்களாக ஸ்ரீ சரண்சிங் நடத்தி வந்த பேரங்களிலிருந்து ஒரு விஷயம் சந்தேகமறத் தெளிவுபடுகிறது. அவரது சிந்தனையிலோ, அவர் யாருடன் பேரம் நடத்தினரோ அவர்களது சிந்தனையிலோ, நியதிகள், கோட்பாடுகள், வேலைத் திட்டங்கள் முதலியவற்றுக்கு அடியோடு இடமே இல்லை.''

★

ஸ்ரீ சரண் சிங் உத்தரப் பிரதேசத்தின் முதன் மந்திரியாகும் சாதனையைப் புரிந்துவிட்டார்; பிரதம மந்திரியுடன் மதிப்பு மிக்க உறவு முறையை ஏற்படுத்திக் கொண்டுவிட்டார். இவற்றின் மூலம் அரசியல் விவகாரங்களிலேயே சாதாரண மக்களுக்கு ஓர் அருவருப்பை விளைவித்து விட்டார். எல்லா அரசியல்வாதிகளிடமும் அவர்கள் நம்பிக்கை இழந்து விடுவர். ஸ்ரீ சஞ்சிவ ரெட்டியின் நியமனப்பத்திரத்தை ஜனாதிபதி தேர்தலில் தாக்கல் செய்துவிட்டுப் பிரதம மந்திரி நடந்து



பங்களூரில் சமீபத்தில் மாத்வ யுவக சங்கக் கட்டட நிதிக்காகச் சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி இன்னிசை விருந்தளித்தார். இவ் வைபவத்தின்போது ஸ்ரீ பெஜாவர் மடம் சுவாமிகள் தம் ஆசிகளை ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்கு வழங்குகிறார்.

கொண்ட விதம் பொது வாழ்வின் கண்ணியத்துக்கும் தரத்துக்கும் முரண்பட்டது என்றால், ஸ்ரீ சரண்சிங் தமது அபிமானத்தையும் ஆதரவையும் இப்படியும் அப்படியுமாக மாற்றிக் கொண்ட சந்தர்ப்பவாதப் போக்கு உண்மை உணர்வுள்ள எல்லோரின் அருவருப்பையும் அதிகப்படுத்தி உள்ளது.

★

ஜனவரி 21ந் தேதியிட்ட ஒரு ஜெர்மன் பத்திரிகை, இந்தியாவுடன் நடந்த ஹாக்கி போட்டிகளில் ஜெர்மானிய கோஷ்டி தோல்வியடையாததற்கும், ''உலகத்திலேயே சிறந்த ஹாக்கி ஆட்டக்காரர்கள்'' என்ற பெயரெடுத்தவர்களுடன் ஈடு கொடுத்ததற்கும் பாராட்டியுள்ளது. இது இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட மறைமுகப் பாராட்டாகக் கொண்டு அதனை மிகவும் மதிக்க வேண்டும்.

★

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் பீடம் ஆட்டம் கண்டுவிட்டது. மாநில முதலமைச்சர்கள் தரக்கூடிய ஆதரவை அவர் நம்பியிருக்கிறார். ஆனால் அவர்களோ தமது பதவிகளுக்கும் பலத்துக்கும் அவரையே நம்பியிருக்கிறார்கள். ஸ்ரீமதி காந்தி தொடர்ந்து ஆட்சி செலுத்தக் கூடும். ஆனால் அவர் கையாண்ட வெற்றிகரமான சூழ்ச்சிகளின் மூலம் பொதுமக்களிடையே அவரது கௌரவம் உயரவில்லை. அதற்கு மாறாக அது பெரிதும் தாழ்ந்து விட்டிருக்கிறது.

★

தினப் பத்திரிகைகளைப் படிக்கும் வாசகர்கள் நாட்டின் பல பகுதிகளில் நிலவும் குழப்பங்களையும் அராஜகச் செயல்களையும் காணாமல் இருக்க முடியாது. ஆனால் நமது பிரதம மந்திரியும் உள்துறை மந்திரியும் மட்டும் இவற்றைப் பற்றிச் சிறிதும் சலனமடைந்ததாகத் தெரியவில்லை. அவர்களுடைய புதிய காங்கிரஸ் சாம்ராஜ்யம் வெற்றிகரமாக விரிவடைந்து வருகையில் இதைப் பற்றி ஏன் கவலை கொள்ளப் போகிறார்கள்?

★

டாக்டர் அந்தோனி கல்லிகல்லூர் இந்தியர். அவர் தத்துவத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். சமீபத்தில் போப் ஆண்டவர் அவரைத் தமது மனிதாபிமான வளர்ச்சிக் குழுவில் ஓர் அங்கத்தினராக நியமித்திருக்கிறார். இவர் சமீபத்தில் சிட்னி சர்வகலாசாலையில் உலக வளர்ச்சி மகாநாட்டைத் திறந்து வைத்தார். அவர் தமது பேச்சினிடையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

இனத்தின் அடிப்படையில் உலக மக்களைச் செயற்கையான எல்லைகள் வகுத்துப் பிரிப்பதை உடனடியாகக் கைவிட வேண்டும். ஆசிய நாடுகளிலிருந்து பத்துக் கோடி

மக்களை ஆஸ்திரேலியப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்வதன் மூலம் அந்நாடு உண்மையான அகில உலக சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதற்குப் பெரும் உதாரணமாக விளங்க முடியும். ஆஸ்திரேலியா தனது செல்வ வளத்தைப் பயன்படுத்தி ஒரு சீரான திட்டமிட்ட முறையில் பல ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை கொண்ட மக்களைத் தனது நாட்டில் குடியேற்றலாம். மனிதனுக்கு இன்று என்ன தேவை என்றால் புதுத் தத்துவக் குறிக்கோள். அதாவது பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களையும் திறந்த மனத்துடன் ஒன்றி ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் தேவை.

என்ன சேதி?

போட்டியின் பயன்

சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த வால்டர் தாம்ஸன் கம்பெனியின் பிரதம நிர்வாக அதிகாரி திரு ஸ்டட்டன், அமெரிக்காவிலும் கானடாவிலும் மற்ற மேற்கத்திய நாடுகளிலும் ரேடியோவிலும் டெலிவிஷனிலும் விளம்பரம் செய்யப்படுவதால் பத்திரிகைகளில் செய்யப்படும் விளம்பரம் பாதிக்கப்படுவதில்லை என்று கூறினார். "அதுவேதான் எங்கள் அனுபவமும்" என்று ஹிந்துஸ்தான் தாம்ஸனின் சென்னைக் காரியாலயத்தின் மானேஜர் திரு ஆர்.கே. சுவாமியும் கூறினார்.

போட்டி ஸ்தாபனங்கள் எத்தனை தோன்றினாலும் அவை ஒன்றுக்கு ஒன்று ஆரோக்கியமான போட்டி நடத்தி அவையும் வளர்ந்து நாட்டுக்கும் நன்மை பயக்கின்றன.

The following particulars regarding the ownership of the 'KALKI', the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV

1. *Place of Publication :* Madras
2. *Periodicity of its Publication :* Weekly
3. *Name of Printer and Publisher :*
   R. Ananthanarayanan
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
4. *Name of Editor :* T. Sadasivam
   Nationality : Indian
   Address : 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31
5. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.*

Sri T. Sadasivam, 20, Dr. Guruswami Mudali Road, Chetput, Madras-31. Srimathi M. S. Subbulakshmi, 20, Dr. Guruswami Mudaliar Road Chetput, Madras-31, Sri R. Ananthanarayanan, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Sri K Rajendran, 1, Fifth Street, New Colony, Lake Area, Madras-34. Sri V. Vaidyanathan 1-A/2, Tank Road, Nungambakkam, Madras-34. Sri K. R. Athmanathan, 20, Dr. Guruswami Mudaliar Road, Chetput, Madras-31. Sri V. Murali, 34/7, Gajapathy Naidu Street, Lakshmipuram, Shenoynagar, Madras-30.

1-3-70 R. Ananthanarayanan, *Publisher*

வங்கமும் சவானும்

வங்க மந்திரி சபைக்கு முதன் மந்திரியாக விளங்கும் திரு அஜாய் முகர்ஜி, வங்காளத்தில் பரவலாக விளங்கும் அராஜக நிலையைக் கண்டு மனம் வெதும்பி, "இங்கு ஓர் அநாகரிகக் காட்டுமிராண்டித்தனமான ஆட்சி நடக்கிறது" என்று பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார். இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் அட்டூழியம் அவ்வளவு தூரம் போய்விட்டது. ஆயினும், மத்திய உள் துறை அமைச்சர் திரு சவான் வங்கத்தில் அமைதி பாதிக்கப்படவில்லை என்று கூறுகிறார்.

இன்று மத்திய ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் இந்திரா காந்தி காங்கிரசுக்கு இடதுசாரி கம்யூனிஸ்டுகள் மக்கள் சபையில் ஆதரவு தருகிறார்கள் என்பதற்காக எது வேண்டுமானாலும் சொல்லி விடலாம் என்று திரு சவான் நினைக்கிறார் போலும்.

ஆனால் இவர் சொல்லி வாயை மூடுமுன், கல்கத்தாவில் சட்டசபையையே நான்கு மணி நேரம் கெரோ செய்திருக்கிறார்கள்.

மொழி வெறி

"வெறிக்கும் ஓர் அளவுண்டு!" என்று ஒரு வடநாட்டுப் பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு நினைவுபடுத்த வேண்டியிருந்த வாய்ப்பு நமது தி. மு. க. பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு கந்தப்பனுக்கு ஏற்பட்டது பற்றி மகிழ்கிறோம்.


கெய்ரோவுக்குச் சென்ற இந்திய மக்கள் சபை அங்கத்தினர்களின் தூது கோஷ்டியைச் சேர்ந்த ஒரு வடநாட்டு உறுப்பினர், கெய்ரோவிலிருக்கும் இந்திய தூதராலய அதிகாரியை ஹிந்தியில் பேசும்படி வற்புறுத்தினாராம். அதிகாரி தமக்கு ஹிந்தி தெரியாது என்று சொன்னபிறகும் வற்புறுத்தியிருக்கிறார். ஆங்கிலம் அகில உலக பாஷை. அதை நன்றாகக் கற்று அரும் பணியாற்றும் நம் தூதரக அதிகாரிகளைப் பாராட்ட வேண்டியதே கடமை. இத்தகைய வெளி உலக சுற்றுப் பிரயாணங்களுக்கு இத்தகைய குறுகிய மதி படைத்தவர்களை இந்திய அரசாங்கம் அனுப்பாமல் இருப்பதே நலம்.

இன்றைய ஜப்பானியக் குழந்தைகள் ஏன் அவர்கள் முன்னோர்களைவிட உயரமாக வளர்கிறார்கள்?

அவர்கள் உணவில் புரதம் மிகுந்திருக்கிறது



'மாடர்ன் ரொட்டி' மற்ற எந்த ரொட்டியையும் காட்டிலும் அதிகமான புரதவளத்தைக் கொடுக்கிறது.





இதோ! ஒரு சமுதாயமே உயர்ந்து வருகிறது. இன்றைய ஜப்பானியக் குழந்தைகள் முன் சந்ததியை விட சராசரி 3 அங்குலங்கள் உயர்ந்துள்ளன. உலகப் போருக்குப் பின், ஜப்பான் புரதம் நிறைந்த உணவின் பயனாய் இதை சாதித்துள்ளது. உணவில் புரதம் அதிகம் சேர்த்தால், இந்தியக் குழந்தைகளும் செழிப்புடன் வலிமையாக வளர முடியும்.

புரதச் சத்தை அதிகரிக்கவே மாடர்ன் ரொட்டியில் லைசின் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மாடர்ன் ரொட்டியில் வைட்டமின் ஏ, பி1, பி2, நயாசின் மற்றும் தாதுப் பொருள்களும் செவ்வனே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவை இந்திய உணவில் குறைவாகவே உள்ளன.


எந்த உணவுடனும் இணைந்து சுவை கூட்டுகிறது மாடர்ன் ரொட்டி. சிறந்தவையே உங்கள் குடும்பத்திற்கு உகந்தவை.

அவர்களுக்குக் கொடுங்கள் மாடர்ன்
—ஒரு மகத்தான ரொட்டி.

மாடர்ன்

இந்தியாவிலேயே
மெத்தவும் சத்துள்ள ரொட்டி.

மாடர்ன் பேகரீஸ் (இந்தியா) லிட்.
(ஒரு இந்திய அரசினர் நிறுவனம்)
பேகரீஸ்:
அகமதாபாத் . பெங்களூர் . பம்பாய் . கல்கத்தா
கொச்சி . டெல்லி . ஹைதராபாத் . கான்பூர் · சென்னை.


கடிதங்களை சீக்கிரமே தபால் பெட்டியில் போடுங்கள்
தபால் நிலையங்களில் கடைசி நிமிடத்தில் நிறைய எண்ணிக்கையில் கடிதங்கள் வந்து குவிகின்றன. இதனால் சங்கடமும் தாமதமும் ஏற்படுகிறது.
கடிதத்தை சீக்கிரமே தபாலில் சேர்த்தால், அது அன்றைய தினமே அனுப்பி வைக்கப்படும்; விலாசத்தாரருக்குத் தாமதமின்றி போய்ச் சேரும்.
கடிதத்தை இப்போதே தபாலில் சேர்ப்பியுங்கள். மாலைவரை காத்திருக்க வேண்டுமா?
இந்திய தபால்-தந்தி இலாகா
davp 69/19



பொன்னியின் செல்வன்

இருபத்தெட்டாம் அத்தியாயம்

ஒற்றனுக்கு ஒற்றன்

மௌனமாயிருந்த அரசிளங் குமரியைப் பார்த்து முதன் மந்திரி அநிருத்தர், "தாயே! ஏன் பேசாமல் இருக்கிறாய்? வந்தியத்தேவனை இன்னமும் நீ நம்புகிறாயா?" என்று கேட்டார்.

"ஐயா! அமைச்சர் திலகமே! நான் என்ன சொல்லட்டும்? இன்னும் சற்று நேரம் தாங்கள் பேசிக் கொண்டே போனால் என்னை நானே சந்தேகிக்கும்படி செய்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் இளவரசி.

"காலம் அப்படி இருக்கிறது அம்மா! யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது என்று தீர்மானிப்பது இந்த நாளில் அவ்வளவு சுலபமில்லைதான். நாலாபுறமும் அவ்வளவு விரோதிகள் சூழ்ந்திருக்கிறார்கள். அவ்வளவு மர்மமான சூழ்ச்சிகள் நடந்து வருகின்றன!" என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

"ஆனாலும் தங்களுக்குத் தெரியாத மர்மமும், தாங்கள் அறியாத சூழ்ச்சியும் இராது என்று தோன்றுகிறது. நான் அனுப்பிய தூதனைப் பற்றிய அவ்வளவு விவரங்களையும் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டாள் குந்தவைதேவி.

"அம்மணி! நான் ஆயிரம் கண்களும் இரண்டாயிரம் செவிகளும் படைத்தவன். நாடெங்கும் அவை பரவி இருக்கின்றன. பழுவூர் அரண்மனையில் என் ஆட்கள் இருக்கிறார்கள். பழுவூர் இளைய ராணியின் மெய்க் காவலர்களிலே எனக்குச் செய்தி அனுப்புகிறவன் ஒருவன் இருக்கிறான். ஆழ்வார்க்கடியானைப் போல் ஊர் ஊராக அலைந்து திரிந்து செய்தி கொண்டு வருகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சோழ நாட்டிலோ சுற்றுப்புற நாடுகளிலோ நான் அறியாமல் எந்தக் காரியமும் நடைபெற முடியாது என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆயினும், யார் கண்டது? என்னையும் ஏமாற்றக் கூடியவர்கள் இருக்கலாம். நான் அறியாத மர்மங்களும் நடைபெறலாம்!"

இவ்வாறு முதன் மந்திரி சொன்ன போது, பொன்னியின் செல்வன் இப்போது சூடாமணி விஹாரத்தில் இருப்பதும் இந்தப் பொல்லாத மனிதருக்குத் தெரியுமோ என்ற எண்ணம் குந்தவைக்கு உண்டாயிற்று. அதை அவள் வெளியிடாமல் மிகுந்த சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

அமரர் கல்கி

''ஐயா! நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனாலும் அந்த வாணர் குல வீரன் பழுவூர் ராணியின் ஒற்றனாகி யிருப்பான் என்று மட்டும் என்னால் நம்ப முடியவில்லை. அவனைத் தயவுசெய்து விடுதலை செய்து விடுங்கள்!'' என்றாள்.

''நன்றாக யோசித்துப் பார் அம்மா! அந்தப் பெண் நந்தினியிடம் மாய மந்திர சக்தி ஏதோ இருக்கிறது. சிவ பக்தன் மதுராந்தகன் அவனுடைய வலையில் விழுந்து இராஜ்யத்தில் ஆசை கொண்டான். சம்புவரையர் மகன் கந்தமாறன் அவனுடைய ஓலையை எடுத்துக்கொண்டு ஆதித்த கரிகாலனிடம் போயிருக்கிறான். பழுவேட்டரையர்களின் பரம விரோதியாயிருந்த பார்த்திபேந்திரன் இன்று





பழுவூர் ராணியின் அடிமையாகி விட்டான். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து மதுராந்தகனுக்கு ஒரு பகுதியும் ஆதித்த கரிகாலனுக்கு ஒரு பகுதியும் கொடுத்து ராஜி செய்து வைக்கவும் அவன் முன் வந்திருக்கிறான்...''



''இது என்ன அக்கிரமம்? இராஜ்யத்தை இரண்டாகப் பிரிக்கவாவது? எங்கள் குலத்து முன்னோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு ஒன்று சேர்த்துப் பெரிதாக்கிய மகா ராஜ்யம் இது?''

''இராஜ்யத்தைப் பிரிப்பதை நீ விரும்ப மாட்டாய்; நானும் விரும்பவில்லை தாயே! பத்து நாட்களுக்கு முன் இந்த யோசனையைச் சொல்லியிருந்தால் பார்த்திபேந்திரனும் பொங்கி எழுந்திருப்பான். இப்போது அவனே இந்த ஏற்பாட்டுக்கு முதன்மையாக நிற்கிறான்...''

''இது என்ன விந்தை! அந்தப் பழுவூர் ராணியிடம் அப்படிப்பட்ட மாய சக்தி என்னதான் இருக்கும்?''

''இளவரசி! அதை நான் உன்னிடம் கேட்க வேண்டும் என்றிருந்தேன். நீ என்னைக் கேட்கிறாய். போகட்டும். வந்தியத்தேவன் மட்டும் அவனுடைய மாய சக்திக்கு உட்பட மாட்டான் என்று எதனால் அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறாய்?''



"ஐயா! காரணம் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. மனசுக்கு மனசே சாட்சி என்பார்கள். வாணர் குல வீரன் அத்தகைய துரோகம் செய்ய மாட்டான் என்று என் மனத்தில் ஏனோ நிச்சயமாகத் தோன்றுகிறது."

"அப்படியானால் அதைப் பரீட்சித்துப் பார்த்து விடலாம் அம்மா!"

"எப்படி? என்ன பரீட்சை?"

"காஞ்சிக்கு ஒரு தூதனை நாம் உடனே அனுப்பியாக வேண்டும். ஆதித்த கரிகாலனுக்கு மிக நம்பிக்கையான ஆளிடம் அவசரமாக ஓலை கொடுத்து அனுப்ப வேண்டும்."

"என்ன விஷயம் பற்றி?"

"சற்று முன்னால் நந்தினியை விஷநாகம் என்று நீ சொல்லிவிட்டு அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டாய். உண்மையில் விஷ நாகத்தை விட அவள் பன்மடங்கு கொடியவள். இந்தச் சோழ குலத்தை அடியோடு நாசம் செய்து பூண்டோடு ஒழித்துவிட அவள் திட்டமிட்டிருக்கிறாள்!..."

"கடவுளே! என்ன பயங்கரம்!" என்று குந்தவை கூறியபோது அவளுடைய உள்ளக் கடல் பற்பல எண்ண அலைகளினால் கொந்தளித்தது.

"உன் தமையன் ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் அரண்மனைக்கு அழைக்கும்படி அவள் சம்புவரையர்களைத் தூண்டியிருக்கிறாள். சம்புவரையர் மகள் ஒருத்தியையும் பழுவேட்டரையர் குமாரி ஒருத்தியையும் கரிகாலனுக்கு மணம் செய்விப்பது பற்றிப் பேசி வருகிறாள். இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்து ராஜி செய்விக்கும் விஷயத்தையும் அங்கே முடிவு செய்யப் போகிறாளாம். இவையெல்லாம் வெளிப்படையான பேச்சு. ஆனால் அவளுடைய அந்தரங்கத்தில் என்ன நோக்கம் வைத்திருக்கிறாளோ, அது யாருக்கும் தெரியாது. எல்லாம் அறிந்தவன் என்று கர்வம் கொண்டிருக்கும் என்னால் கூட அவள் நோக்கத்தை அறிய முடியவில்லை."

"அதைப் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும் ஐயா?"

"ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்குப் போகாமல் எப்படியாவது தடை செய்ய வேண்டும். அதற்குத்தான் நீயும் நானும் ஓலை கொடுத்து வந்தியத்தேவனை அனுப்ப வேண்டும். நம்முடைய விருப்பத்தை மீறிக் கரிகாலன் கடம்பூர்

மாளிகைக்குப் புறப்படும் பட்சத்தில் வந்தியத் தேவனும் அவனுடன் போக வேண்டும். உடம்பைப் பிரியாத நிழலைப் போல் அவன் உன் தமையனைத் தொடர்ந்து காவல் புரிய வேண்டும். நந்தினியைத் தனியாகச் சந்திப்பதற்குக் கூட அவன் இடம் தரக் கூடாது...''

குந்தவை பெருமூச்சு விட்டாள். முதன் மந்திரி கூறுவது எவ்வளவு முக்கியமான காரியம் என்பதை அவள் உணர்ந்தாள். எல்லா விவரங்களும் அறிந்து அவர் சொல்லுகிறாரா, அல்லது இராஜாங்க நோக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு சொல்கிறாரா என்று அவளால் ஊகிக்கமுடியவில்லை.

''ஐயா! அவர்களுடைய சந்திப்பைத் தடுப்பது அவ்வளவு முக்கியமான காரியம் என்று ஏன் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''அம்மணி! வீர பாண்டிய ஆபத்துதவிகள் சிலர் சோழ குலத்தைப் பூண்டோடு ஒழிக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரிய பழுவேட்டருடைய பொக்கிஷத்திலிருந்து புதிய தங்கக் காசுகள் போய்க் கொண்டிருக்கின்றன. இதைக் காட்டிலும் இன்னும் ஏதேனும் நான் இதைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?''

''வேண்டாம்'' என்று முணுமுணுத்தாள் குந்தவை. சூடாமணி விஹாரத்தில் சுரத்துடன் படுத்திருக்கும் இளவரசனின் நினைவு அவளுக்கு வந்தது. பொன்னியின் செல்வனையும் அபாயங்கள் சூழ்ந்திருக்கலாம் அல்லவா?

''ஐயா! சோழ நாட்டுக்குக்கு விபத்துக்கு மேல் விபத்தாக வந்துகொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தாங்கள் முதன் மந்திரியா யிருப்பது அதிர்ஷ்டவசந்தான்! என் தம்பியின் விஷயமாக என்ன ஏற்பாடு செய்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''சோழ நாட்டிலுள்ள எல்லா சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் இளவரசருடைய சுக க்ஷேமத்தைக் கோரிப் பிரார்த்தனை செய்து அர்ச்சனை அபிஷேகம் நடத்தச் சொல்லியிருக்கிறேன். அப்படியே புத்த விஹாரங்களிலும் சமணப் பள்ளிகளிலும் பிரார்த்தனை செய்யப் போகிறார்கள். நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் புத்த பிக்ஷுக்கள் ஒரு மண்டலம் விசேஷப் பிரார்த்தனை நடத்தப் போகிறார்கள். வேறு என்ன செய்யலாம் என்று நீ சொல்கிறாய்?''

சூடாமணி விஹாரத்தைப் பற்றிச் சொல்லும் போது முதன் மந்திரியின் முகத்தில் ஏதேனும் மாறுதல் ஏற்படுகிறதா என்று குந்தவை கவனித்தாள். ஒன்றுமே தெரியவில்லை.

''ஐயா! சூடாமணி விஹாரம் என்றதும் ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. சூடாமணி விஹாரத்தின் மீது பெரிய பழுவேட்டரையர் ஏதோ கோபங் கொண்டிருக்கிறாராம். இலங்கையில் பிக்ஷுக்கள் இளவரசருக்கு முடிசூட்டுவதாகச் சொன்ன செய்தி வந்ததிலிருந்து அந்தக் கோபம் முற்றியிருக்கிறதாம். இளவரசர் காணமற் போனதற்குப் பழியைச் சூடாமணி விஹாரத்திலுள்ள பிக்ஷுக்களின் மீது சுமத்தினாலும் சுமத்துவார்கள். அதற்குத் தக்க பாதுகாப்பு தாங்கள்தான் செய்ய வேண்டும்'' என்று சொன்னாள்.

''உடனே செய்கிறேன், அம்மா! சக்கரவர்த்தியின் கட்டளையுடன் சூடாமணி விஹாரத்தைப் பாதுகாக்க ஒரு சிறிய சைன்யத்தையே வேணுமானாலும் அனுப்பி வைக்கிறேன். வந்தியத் தேவனைக் காஞ்சிக்கு அனுப்புவது பற்றி என்ன சொல்லுகிறாய்?''

'' ஐயா ! அவ்வளவு முக்கியமான காரியத்துக்கு வேறு யாரையாவது அனுப்புவது நல்லதல்லவா?''

'' உனக்கு மட்டும் அவனிடம் நம்பிக்கையிருந்தால் அவனையே அனுப்ப விரும்புகிறேன். அவனுடைய வீர சாகஸச் செயல்களைப் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கிறேன். எதற்கும் அஞ்சாத அஸகாய சூரனையே இந்தக் காரியத்துக்கு நாம் அனுப்ப வேண்டும். இன்றைக்கு நான் அரண்மனை முற்றத்துக்கு வந்து கொண்டிருந்தபோது என் கண்ணாலேயே பார்த்தேனே! அந்த வைத்தியனை என்ன பாடுபடுத்தி விட்டான்? நான் குறுக்கிட்டுத் தடுத்திராவிட்டால் வைத்தியர் மகன் யமனுக்கு வைத்தியம் செய்யப் போயிருப்பான்....''



(33-ம் பக்கம் பார்க்க)

இளைய பிராட்டி இதைக் கேட்டுப் பூரிப்பு அடைந்தாள். ஆயினும் சிறிது தயக்கத்துடன், ''வீரனாயிருந்தால் மட்டும் போதுமா? படபடப்புக்காரனாயிருக்கிறானே? எவ்வளவு விரைவில் சண்டை தொடங்கி விட்டான்!'' என்றாள்.

''அதற்கு வேணுமானால் பின்னோடு என்னுடைய சீடன் திருமலையையும் அனுப்பி வைக்கிறேன். நிதானமான யோசனைக்குப் பெயர் போனவன் ஆழ்வார்க்கடியான்!'' என்றார் அநிருத்தர்.

இளைய பிராட்டி தன் மனத்துக்குள், ''இவருடைய உள்ளத்தில் இருப்பதைக் கடவுளும் அறிவாரோ, என்னமோ, தெரியவில்லை! ஒற்றனுக்குத் துணையாக ஒற்றன் ஒருவனையே அனுப்பி வைக்க விரும்புகிறார் போலும்!'' என்று எண்ணிக் கொண்டாள்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

வானதியின் மாறுதல்

குந்தவை, வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து மீட்டு மறுபடியும் பிரயாணம் அனுப்புவதற்காகப் புறப்பட்டபோது, வானதி எதிரே வந்தாள். இளைய பிராட்டியின் அடிபணிந்து நின்றாள்.

''என் கண்ணே! உன்னை விட்டு விட்டு வந்து விட்டேன். இன்னும் கொஞ்சம் முக்கியமான அலுவல் இருக்கிறது. அதை முடித்து விட்டு வந்து விடுகிறேன். சற்று நேரம் தோட்டத்தில் சென்றிரு! ஓடைப் பக்கம் மட்டும் போகாதே!'' என்றாள்.

''அக்கா! தங்களுக்கு இனி தொந்தரவு கொடுக்க மாட்டேன். கொடும்பாளூருக்குப் போக விரும்புகிறேன். அநுமதி கொடுங்கள்!'' என்றாள் வானதி.

''இது என்ன, என் தலையில் நீயுமா இடியைப் போடுகிறாய்? உனக்கு என் பேரில் என்ன கோபம்? உன் பிறந்தகத்தின் மீது திடீரென்று என்ன பாசம்?''

''உங்கள் பேரில் நான் கோபங் கொண்டால் என்னைப் போல் நன்றி கெட்டவள் யாரும் இல்லை. என் பிறந்தகத்தின் பேரில் புதிதாகப் பாசம் ஒன்றும் பிறந்து விடவும் இல்லை. தாயும் தந்தையும் இல்லாத எனக்குப் பிறந்தகம் என்ன வந்தது? எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உள்ள காளி கோவிலுக்குப் பூசை போடுவதாக என் தாயார் ஒரு முறை வேண்டிக் கொண்டாளாம். அதை நிறைவேற்றுவதற்குமுன் அவள் கண்ணை மூடி விட்டாள். எனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறதல்லவா? ஒருவேளை அந்த வேண்டுதலை நிறைவேற்றாததால்தான் இப்படி என்னைப் படுத்துகிறதோ என்னமோ?''

''அதற்காக நீ அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. நானே சொல்லி அனுப்பி அந்த வேண்டுதலை நிறைவேற்றச் சொல்கிறேன்.''

''அது மட்டுமல்ல, அக்கா! என் பெரிய தகப்பனார் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறாராம். அவர் தஞ்சையைத் தாண்டிப் பழையாறைக்கு வரமாட்டார். அவர் வரும்போது நான் கொடும்பாளூரில் இருக்க விரும்புகிறேன். அவரிடம் இலங்கையில் நடந்தவற்றையெல்லாம் நேரில் கேட்க ஆசைப்படுகிறேன்!''

''இலங்கையில் நடந்தவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதில் உனக்கு என்ன அவ்வளவு ஆசை?''

''அது என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? என் தந்தை இலங்கைப் போரில் வீர சொர்க்கம் அடைந்ததை மறந்து விட்டீர்களா?''

''மறக்கவில்லை. அந்தப் பழி இப்போது நீங்கி விட்டது....''

''முழுதும் நீங்கியதாக எனக்குத் தோன்றவில்லை. யுத்தம் முடிவதற்குள்ளே அவசரப்பட்டுக் கொண்டு பெரிய வேளார் திரும்புகிறார்.''

''அவரை மறுபடியும் இலங்கைக்குப் போய்ப் போர் நடத்தும்படி சொல்லப் போகிறாயா? அதற்காகவா கொடும்பாளூர் போக வேண்டும் என்கிறாய்?''

''அவ்வளவு பெரிய விஷயங்களைப் பற்றிச் சொல்வதற்கு நான் யார்? நடந்ததைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளவே விரும்புகிறேன்....''

''ஆகா! உன் மனசு இப்போது எனக்குத் தெரிகிறது. பொன்னியின் செல்வன் இலங்கைப் போரில் புரிந்த வீரச் செயல்களைப் பற்றி உன் பெரிய தகப்பனாரிடம் கேட்க விரும்புகிறாய், இல்லையா?''

''அது ஒரு தவறா, அக்கா?''

''அது தவறில்லை. ஆனால் இத்தகைய சமயத்தில் என்னைத் தனியே விட்டு விட்டுப் போகிறேன் என்கிறாயே, அதுதான் பெரிய தவறு!''

''அக்கா! நானா தங்களைத் தனியே விட்டு விட்டுப் போகிறேன்? என்னைப்

போல் தங்களுக்கு எத்தனையோ தோழிகள். தங்கள் கருத்தை அறிந்து காரியத்தில் நிறைவேற்ற எத்தனையோ பேர் காத்திருக்கிறார்கள்......''

''நீகூட இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாயா, வானதி? என் தம்பியைப் பற்றிய செய்தி கேட்டு உன் மனம் பேதலித்து விட்டதுபோலிருக்கிறது. அந்தச் செய்தியைப் பற்றி நீ அதிகமாய்க் கவலைப்பட வேண்டாம்....''

''தங்கள் தம்பியைப் பற்றித் தங்களுக்கு இல்லாத கவலை எனக்கு என்ன இருக்க முடியும், அக்கா !''

''உண்மையைச் சொல் ! ஓடையில் நீயாக வேண்டுமென்று விழுந்தாயா? மயக்கம் வந்து விழுந்தாயா ?''

''வேண்டுமென்று எதற்காக விழ வேண்டும்? மயக்கம் வந்துதான் விழுந்தேன். தாங்களும் அந்த வாணர் குலத்து வீரருமாக என்னைக் காப்பாற்றினீர்கள்.''

''காப்பாற்றியதற்கு நன்றி உள்ளவளாகத் தோன்றவில்லையே ?''

'' இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல ; ஏழேழு ஜன்மத்திலும் நன்றியுள்ளவளாயிருப்பேன்.''

''இந்த ஜன்மம் இத்துடன் முடிந்து போய் விட்டது போல் பேசுகிறாயே ? நான் சொல்கிறேன் கேள், வானதி ! வீணாக மனத்தை வருத்தப்படுத்திக் கொள்ளாதே! அருள்மொழிவர்மனுக்கு அபாயம் எதுவும் வந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. சற்று முன் அரண்மனை முற்றத்தில் கூடியிருந்த ஜனங்களுக்குச் சொன்னதையே உனக்கும் சொல்லுகிறேன். அன்றொரு நாள் காவேரித் தாய் என் தம்பியைக் காப்பாற்றினாள். அது போல் சமுத்திர ராஜனும் அவனைக் காப்பாற்றியிருக்க வேண்டும். சீக்கிரத்தில் நல்ல செய்தியை நாம் கேள்விப்படுவோம்.''

''எந்த ஆதாரத்தைக் கொண்டு இவ்வளவு உறுதியாகத் தைரியம் சொல்கிறீர்கள், அக்கா !''

''என் மனத்துக்குள் ஏதோ ஒன்று சொல்லுகிறது. என் அருமைத் தம்பிக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் அது என் உள் மனத்துக்குத் தெரிந்திருக்கும். நான் இப்படிச் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்.....''

''மனம் சொல்வதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை, அக்கா! உள் மனத்திலும் நம்பிக்கை இல்லை; வெளி மனத்திலும் நம்பிக்கை இல்லை!''

''அது எப்படி நீ மட்டும் அவ்வளவு தீர்மானமாகச் சொல்லுகிறாய்?''

''என் உள் மனத்திலும் வெளி மனத்திலும் சில நாட்களாக ஒரு பிரமை தோன்றிக் கொண்டிருந்தது. தூக்கத்தில் கனவிலும் தோன்றியது; விழித்துக் கொண்டிருக்கும்போதும் சில சமயம் அப்படிப் பிரமை உண்டாயிற்று.''

''அது என்ன, வானதி?''

''தண்ணீரில் தங்கள் தம்பியின் முகம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. என்னை அழைப்பதுபோலவும் இருந்தது. கனவிலும் இந்தப் பிரமை அடிக்கடி ஏற்பட்டு வந்தது....''

''அதை ஏன் பிரமை என்று சொல்லுகிறாய் ? நமக்கு வந்திருக்கும் செய்திக்கும் உன்னுடைய மனத் தோற்றத்துக்கும் பொருத்தமாக இருக்கிறதே!''

''இன்னும் முழுதும் கேட்டால் அது எவ்வளவு பைத்தியக்காரப் பிரமை என்பதை அறிவீர்கள். ஓடையில் மயக்கம் போட்டு விழுந்தேனல்லவா? அப்போது நான் நாகலோகத்துக்கே போய்விட்டேன். அங்கே ஒரு திருமண வைபவம் நடந்தது....''

''யாருக்கும் யாருக்கும் திருமணம்?''

''அதைச் சொல்ல விருப்பமில்லை, அக்கா! மொத்தத்தில் மனத்தில் தோன்றுவதிலும் கனவில் தோன்றுவதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. கண்ணால் காண்பதையும் காதால் கேட்பதையும்தான் இனிமேல் நம்புவது என்று தீர்மானித்திருக்கிறேன்.....''

''வானதி ! நீ சொல்லுவது முற்றும் தவறு. கண்ணால் காண்பதும் காதினால் கேட்பதும் சில சமயம் பொய்யாக இருக்கும். மனத்துக்குள் தோன்றுவதுதான் நிச்சயம் உண்மையாயிருக்கும். கதைகள் காவியங்களிலிருந்து இதற்கு எத்தனையோ உதாரணங்கள் நான் உனக்குச் சொல்லுவேன்....''

''பிறகு ஒரு சமயம் கேட்டுக் கொள்கிறேன், அக்கா ! இப்போது எனக்கு விடை கொடுங்கள்!'' என்றாள் வானதி.

இளவரசி குந்தவைக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. இந்தப் பெண்ணுக்கு இவ்வளவு தைரியமும் பிடிவாதமும் இரண்டும் எப்படி ஏற்பட்டன என்று ஆச்சரியப்பட்டாள்.

''வானதி ! இது என்ன அவசரம்? அப்படியே நீ கட்டாயம் ஊருக்குப் போக வேண்டுமென்றாலும், சில நாள் கழித்துப் புறப்படக் கூடாதா? இப்போது நாடெங்கும் ஒரே குழப்பமாயிருக்குமே? உன்னைத் தக்க பாதுகாப்புடன் அனுப்பி வைக்க வேண்டாமா?''

''எனக்கு என்ன பயம், அக்கா ! கொடும்பாளூரிலிருந்து என்னை

அழைத்து வந்த பல்லக்குத் தூக்கிகளும் காவல் வீரர் நால்வரும் ஒரு வேலையு மின்றி இத்தனை காலம் இங்கே தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களோ என்னைத் திரும்ப அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள்.....''

''அழகாயிருக்கிறது! உன்னை அப்படி நான் அனுப்பி விடுவேன் என்று நினைக்கிறாய் ?''

''உங்களை நான் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன், அக்கா ! எனக்குப் பயம் ஒன்றுமில்லை. கொடும்பாளூர் வானதியை இந்த நாட்டில் யாரும் எதுவும் செய்யத் துணிய மாட்டார்கள். அதிலும் இளையபிராட்டியின் அன்புக்குகந்த தோழி நான் என்பது யாருக்குத் தெரியாது? ஒரே ஒரு காரியத்துக்கு மட்டும் அநுமதி கொடுங்கள். போகும் போது அந்தக் குடந்தை ஜோதிடரின் வீட்டுக்கு இன்னொரு தடவை போய் அவரைச் சில விஷயங்கள் கேட்க விரும்புகிறேன். அவ்விதம் செய்யலாமா ?''

''அவரிடம் எனக்குக்கூட வர வேண்டும் என்று ஆசைதான். ஆனால் நீ இவ்வளவு அவசரப்படுகிறாயே?''

''இல்லை, அக்கா ! இந்தத் தடவை அவரை நான் தனியாகப் பார்த்து ஜோதிடம் பார்க்க விரும்புகிறேன்...''

குந்தவை மூக்கின்மீது விரலை வைத்து அதிசயப்பட்டாள். இந்தப் பெண் ஒரு நாளில், ஒரு ஜாம நேரத்தில் இவ்வளவு பிடிவாதக்காரியாக மாறி விட்டது எப்படி என்று இளவரசிக்குப் புரியவேயில்லை. அவள் பிரயாணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற முடிவுக்கு வந்தாள்.

''சரி, வானதி! உன் விருப்பம் போலச் செய்யலாம். நீ பிரயாணத்துக்கு வேண்டிய ஆயத்தம் செய். அதற்குள் சிறையிலிருக்கும் அந்த வாணர் குலத்து வீர குமாரனை விடுதலை செய்து விட்டு வருகிறேன்'' என்றாள்.

(தொடரும்)

நானூறு கால் பூச்சி

பாம்பு போன்று காட்சியளிப்பினும் பிராணிகளிலேயே அப்பாவியான பிராணி ஒன்று உண்டென்றால் அது இம் மரவட்டைகளாகத்தான் இருக்க முடியும். மரவட்டையின் உடல் வளையம் போன்ற பகுதிகளால் இணைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, பாமர மக்கள் இம் மரவட்டையை ''ஆயிரங்கால் பூச்சி'' என்று கூறுவர். ஆனால் உண்மையாகவே இந் நீண்ட மரவட்டைக்கு சுமார் 200 ஜோடி கால்கள் வரைதான் உள்ளன. மரவட்டை நகரும்போது உற்றுக் கவனிப்பின், இது தன் கால்களை அலை அலையாக நகர்த்திச் செல்லும். மரவட்டையின் தலையின் முன்னால் மீசை முடி போன்ற இரண்டு உறுப்புகள் காணப்படும். இவைகளுக்கு உணர் கருவிகள் என்று பெயர். ஊர்ந்து செல்லும்போது மரவட்டை தன் உணர் உறுப்புகளைத் தரையில் தொட்டுத் தொட்டு நிலத்தின் வாடையை அறிந்து அதற்கேற்றாற் போன்று தன் உடலை அசைத்துத் தான் போகும் இடத்துக்குச் செல்லுகிறது. இம் மரவட்டைகள் அழுகிய இலைகளையும், மக்கிய மண்ணையும், செடிகளின் வேர்களையும் உண்டு வாழ்கின்றன. ஊர்ந்து சென்று கொண்டிருக்கும் இம் மரவட்டையை ஒரு குச்சி கொண்டு மெதுவாகத் தட்டி விட்டால் போதும் உடனே தன் உடலைத் தரைச் சக்கர வெடி போன்று வட்டமாகச் சுருக்கிக் கொண்டு அசையாமல், இறந்ததைப் போன்று காட்சி கொடுக்கும். சிறிது நேரம் கழித்துத் தனக்கு ஆபத்து நீங்கி விட்டது என்பதை அறிந்த மரவட்டை, மெல்லத் தன் உடலை நிமிர்த்தித் திரும்பவும் ஊர்ந்து செல்ல ஆரம்பிக்கும். தைரியமாக இம் மரவட்டையைக் கையில் எடுத்தால் தன் உடலைச் சுருக்கிக் கொண்டு அதே சமயத்தில் தன் உடலின் பின்பகுதி வழியாகத் தன் கழிவுப் பொருளை நம் கையில் வெளியேற்றும். நாம் அசிங்கப்பட்டு உடனே பொத்தென்று மரவட்டையைக் கீழே போட்டு விடுவோம். இந்த வகையிலும் மரவட்டை தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. மேலும் மரவட்டையைக் கையில் எடுத்தவுடன் அதன் உடலின் ஒவ்வொரு வளையத்திலிருந்தும் உடலின் பக்க வாட்டில் துர்நாற்றமுடைய மஞ்சள் நிற எண்ணெய் போன்ற திரவத்தைக் கசியச் செய்யும். இத் திரவம் நம் தோலில் பட்டவுடன் அரிப்பு எடுக்க ஆரம்பித்துவிடும். இவ்வாறாகவும் மரவட்டை தன் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளுகிறது.

பகலில் இம் மரவட்டைகள் சாதாரணமாகத் தென்பட்டாலும் இரவில்தான் பெருங் கூட்டமாக இரை தேடப் புறப்படுகின்றன. பகல் நேரங்களில் கற்களுக்கடியிலும், மரப் பொந்துகளிலும் கூட்டமாகச் சேர்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளுகின்றன.

மரவட்டைகள் எவ்வாறு நேரத்தை அறிந்து கொள்ளுகின்றன என்பது புரியாத புதிராகவும், வியப்பாகவும்தான் உள்ளது. மாலையில் காற்றின் ஈரம் அதிகரிப்பதையும், வெப்பநிலை குறைவதையும் அறிந்து தங்கள் இருப்பிடங்களிலிருந்து மரவட்டைகள் வெளியே வருகின்றன என்று கருதப்படுகிறது.

- ஆன்டனி பேகில்



Bensons 286C/3/TAM

உங்களுக்கு சுவையுள்ள, கெட்டியான, ஸ்ட்ராங்கான மற்றும் உடனே தயாராகும் காபி வேண்டுமா...

இதோ

ப்ரூ

இருக்கிறது



ப்ருக் பாண்ட்

ப்ரூ

இன்ஸ்டன்ட்

காபி சிக்கரி ப்ளெண்ட்

கெட்டியான, ஸ்ட்ராங்கான
காபி-சிக்கரி கலவைதான் ப்ரூ.
உடனடியாக தயாராகிவிடுகிறது!
புத்துணர்ச்சியளிக்கும்
மிகச் சிறந்த பானம்.

[இத்தாலிய காந்தி எனப் புகழ்பெற்ற டானிலோ டோல்ஸி இப்போது புதுதில்லி வந்திருக்கிறார். தமிழ் நாட்டிலுள்ள காந்தி கிராமத்துக்கும் செல்லவிருக்கிறார்.]

இத்தாலிய காந்தி

காந்திஜியின் சத்தியம், அகிம்சை, பிறருக்காகவே வாழ்வது ஆகிய கொள்கைகளை அயல்நாடுகளிலும் பலர் பின்பற்றியதன் காரணமாக அவர்களையும் மக்கள் 'காந்தி' என்றே அன்புடன் அழைத்து வரலாயினர். மார்ட்டின் லூதர் கிங்கை அமெரிக்கக் காந்தி என்றும் லூதுலி என்பவரை ஆப்பிரிக்கக் காந்தி என்றும் கான் அப்துல்கபார் கானை எல்லை காந்தி என்றும் அழைத்தனர். இதேமாதிரி இத்தாலியில் ஒரு காந்தி இருக்கிறார். இவர் பெயர் டானிலோ டோல்ஸி. இவர் இப்போது புதுதில்லிக்கு வந்திருக்கிறார்.

ரோமியோ, முசோலினி, மாபியா ஆகிய இத்தாலியத் தலைவர்கள் எல்லோரும் பலாத்காரத்தில் நம்பிக்கை உடையவர்கள். இவர்களைப் பெற்ற இத்தாலிய நாடு ஒரு காந்தியையும் பெற்றிருக்கிறது.

மகாத்மா காந்தி வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற சமயத்தில் ஸ்விட்ஸர்லாந்தில் ரோமெய்ன் ரோலந்தைச் சந்திக்கச் சென்றார். அப்போது டோல்ஸி ஆறு வயதுப் பையன். அச்சிறு வயதிலேயே இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் பற்றி டோல்ஸி அறிந்திருந்ததுடன் காந்திஜியின் கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தான். காந்தியை எப்படியும் காணவேண்டும் என்று தன் தகப்பனாரை அழைத்துப் போகச் சொல்லி வற்புறுத்தினான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவர் போய்ச் சேரச் சில மணி நேரங்களுக்கு முன்புதான் காந்திஜி அந்நகரை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார்.

டோல்ஸி இதன்பின் காந்திஜியைச் சந்திக்க முடியவேயில்லை. காந்திஜியைப் பற்றி வெளியான புத்தகங்களை யெல்லாம் வாங்கிப் படிப்பதில் இவர் ஆர்வம் காட்டினார். இவர் 1924ல் ஸிஸிலியில் டிரிஸ்டே என்ற இடத்தில் ஒரு ரயில்வே அதிகாரியின் மகனாகப் பிறந்தார். ரோமிலும் மிலானிலும் இவர் சிற்பக் கலையைப் பயின்றார். சிலைகளைக் கல்லிலிருந்து உருவாக்குவதைவிட மனிதர்களை மனிதர்களாகவே உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அக்காலத்திலேயே ஏற்பட்டு விட்டது. டிராபெட்டோ என்ற இடத்தில் மக்கள் வறுமையில் வாடுவதைக் கண்டு அவர்கள் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்றே அவர்களுக்குச் சேவை செய்ய அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

கையில் காசில்லாமலேயே பணத்தை நன்கொடையாகப் பெற்று ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்தினார். இங்கு அநாதைகள் பராமரிப்பு, வறுமை நிவாரணப் பணி முதலியவை நடைபெற்றன. இந்த ஆசிரமத்துக்குப் பெயர் 'பார்கோ டி டியோ' என்பது. அதாவது 'கடவுளின் இல்லம்' என்று அர்த்தம்.

சில நியாயமான வசதிகளை நகரசபை செய்து கொடுக்கவில்லை என்பதற்காக இவர் உண்ணாவிரதம் இருந்தார். அந்தக் கிராம மக்கள் அவரே உணவு அருந்தாத போது தங்களுக்கும் சாப்பாடு தேவையில்லை என்று உண்ணாவிரதம் இருந்தனர். ஸிஸிலி மக்களே இவரை ஸிஸிலி காந்தி என்று அன்புடன் அழைக்கலாயினர். இவருக்கு அப்போது இத்தாலிய பாஷை தவிர வேறு பாஷை தெரியாது. அபூகேப்டினி என்கிற பள்ளி ஆசிரியர் 'சத்திய சோதனை'யை (காந்திஜி சுயசரிதை) இத்தாலியில் மொழிபெயர்த்திருந்தார். அது டோல்ஸிக்கு மிகப் பயன்பட்டது. இவர் யுத்தத்தைக் கடுமையாக ஆட்சேபிப்பவர். இவருக்குப் பதினேழு வயது நடக்கும்போது ஸிஸிலியில் கட்டாய ராணுவ சேவை வற்புறுத்தப்பட்டது. இவர் அதில் சேர மறுத்து அதற்கான தண்டனையைப் பெற்றார்.

நம் நாட்டில் சம்பால் கொள்ளைக்காரர்கள் என்றிருந்தார்களே அதேபோல் ஸிஸிலியில் மாபியா என்ற ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் இருந்தனர். இவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். கொலை செய்வது சர்வ சாதாரணம். இவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். டோல்ஸி இவர்களுடன் சென்று தங்கி அவர்களைத் திருத்தி நேர்மையான வாழ்க்கையை நடத்தத் தூண்டியது அபார சாதனையாகும்.

1958ல் டோல்ஸிக்கு லெனின் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. மேற்கு ஸிஸிலியில் ஐந்து கல்வி ஸ்தாபனங்களை ஏற்படுத்த இந்தப் பரிசுத் தொகை பயன்பட்டது.

இவர் விடியற்காலையில் நான்கு மணிக்கே எழுந்து விடுகிறார். இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் படுக்கிறார். அதுவரை ஓயாத பொதுப் பணிதான். இருபதாவது நூற்றாண்டின் இலட்சியஞானி என்று ஆல்டஸ் ஹக்ஸ்லி இவரைப் புகழ்ந்திருக்கிறார்.

—ரஜன்





ராமாயணம்

ராஜாஜி

46. கம்ப சித்திரம்

தோட்டத்தில் மேய'வந்த ஒரு கழுதையைத் தடியாலடித்து ஓட்டுவதுபோல் சூர்ப்பனகையைத் துரத்தி விட்டார்கள். வால்மீகி இந்த நிகழ்ச்சியை வெகு சுருக்கமாகச் சிக்கல் ஒன்றுமின்றி எழுதி விட்டார்.

கம்பர் இந்தச் சங்கதியை அவ்வளவு சுலபமாக முடித்து விடவில்லை. சூர்ப்பனகை பட்ட பாட்டை ஒரு பெரிய தனி நாடகமாக்கி அதில் எல்லாவித ரஸங்களையும் தீட்டி விட்டிருக்கிறார். சூர்ப்பனகைப் படலம் கம்ப ராமாயணத்துக்குள் ஒரு தலைசிறந்த படலம். அதன் அலங்கார அழகுகளை நண்பர்களுக்கு எடுத்துக் காட்டுவதில் டி. கே. சி. அவர்கள் தெவிட்டு அடைய மாட்டார்.

ஆற்றங்கரைப் படுகையில் ராமன் உட்கார்ந்துகொண்டு அங்கு ஓர் அன்னம் மெள்ள நடந்துகொண்டிருந்ததைப் பார்த்து விட்டுச் சீதையைப் பார்த்தான். அவளும் நடந்து கொண்டிருந்தாள். இரண்டு நடையும் ஒன்று போல் இருந்ததைக் கண்டு ஒரு புது மகிழ்ச்சி உண்டாகி, அந்த மகிழ்ச்சி ராமன் முகத்தில் ஒரு புன்முறுவலாயிற்று. அதற்குப் போட்டியாகத் தேவியும் அவ்விடம் கொஞ்ச தூரத்தில் ஒரு யானை வந்து தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பிப் போய்க் கொண்டிருந்ததை நோக்கி, அவளும் தன் கணவன் அழகை நினைத்துப் புன்னகை பூத்தாள். இவ்வாறு பஞ்சவடி ஆற்றங்கரையில் பகவான் கண்ணன் சொன்னபடி ''கருமத்துக்கு விரோதப்படாத துறையில்'' காதல் உணர்ச்சி சென்று கொண்டிருந்த சமயத்தில் விதியின் சூழ்ச்சியானது சூர்ப்பனகையை, தன் பாட்டுக்குக் காட்டில் திரிந்து கொண்டிருப்பவளை அதை விட்டு, ராமனண்டை போகச் செய்தது.

வைகலும் தமியன் அவ்
வனத்துள் வைகுவான்,
நொய்தின்இவ் வுலகெலாம்
நுழையும் நோன்மையன்,
வெய்யதோர் காரணம்
மேவி உண்மையின்
எய்தினன் இராகவன்
இருந்த சூழல்வாய்.

அரக்கர்களைத் தீர்ப்பதற் கென்றே பாற்கடலை விட்டுத் தசரதன் மகனாக வந்த ஆண்டவனைக் கண்டவுடன் சூர்ப்பனகை, ''இந்த அழகிய உருவம் மன்மதனா, இந்திரனா, மகாதேவனா, மகா விஷ்ணுவா!'' என்று யோசித்தாள். ''மன்மதனுக்கு உடலில்லையே, இந்திரனுக்கு ஆயிரம் கண்களாயிற்றே, மகாதேவனுக்கு நெற்றியில் ஒரு கண்ணுண்டே, இவனுக்குக் கைகள் நான்கு இல்லையே, இவன் இந்திரனுமல்ல, பரமசிவனுமல்ல, விஷ்ணுவுமல்ல. ஒருவேளை பரமசிவனால் சாம்பலாகிய மன்மதன்தான் தவம் செய்து மறுபடியும் உடல் சம்பாதித்திருக்கிறானோ?'' என்று ஆலோசித்தாள்.

கற்றையஞ் சடையவன்
கண்ணிற் காய்தலால்
இற்றவன் அன்றுதொட்(டு)
இன்று காறுந்தான்
நற்றவம் இயற்றி, அவ்
அனங்கன் நல்உருப்
பெற்றனனாம்எனப்
பெயர்த்தும் எண்ணுவாள்

''இந்த அழகான புருஷன் ஏன் வீணாகத் தன் உடம்பை வருத்திக் கொண்டு விரதம் நோற்கிறான்? செந்தாமரை போன்ற கண்களை உடைய இவன் ஏன் தவம் செய்து கொண்டு காலத்தை வீணாக்குகிறான்?'' — இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டு ராமனைப் பார்த்து நின்றாள். கண்களை அவனை விட்டு வேறு பொருள்களின் மேல் செலுத்த முடியாமல் நின்றாள். என்ன செய்வது என்று யோசித்தாள். ''இவன் என் உருவத்தைக் கண்டு என்னை வெறுப்பான். நான் மாறுவேஷம் போட்டுக் கொண்டு இவனண்டை போக வேண்டும்'' என்று எண்ணினாள். மாயத்தால் தன்னுடைய அரக்கி உரு



வத்தை மறைத்துக் கொண்டு மிகச் சுந்தர வடிவம் எடுத்துக்கொண்டாள். "குயில் தொடர் குதலை" மொழியும், "கொவ்வைச் செய்ய" வாயும் உடைய "மயில் தொடர் இயலி" யாய்த் தன்னை மாற்றிக் கொண்டு,

திங்களில் சிறந்தொளிர்
முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினில்
பொலியத் தோன்றினள்.

தேவலோகத்துக் கற்பக மரத்தில் ஏறி வளர்ந்த ஒரு பொன் கொடியைப் போன்ற மேனியும், காம வெறியூட்டும் இதழ்களும், முத்துக்களைப் போன்ற பற்களும், மான் விழியும் கொண்டு, "மயில் வந்ததென" வந்தாள். நூபுரமும் மேகலையும் செய்த ஒலியானது ஒரு பெண் வருவதை ராஜகுமாரனுக்குத் தெரிவித்தது.

ராமன் பார்த்தான். எல்லை கடந்த அழகைப் பெற்ற ஒரு ஸ்திரீ வந்து நிற்பதைக் கண்டான். ராமனுடைய பாதங்களைத் தொட்டுப் பணிந்தாள். பிறகு சிறிது நாணத்தோடு எட்டி நின்றாள்.

"உம் வரவு நல்வரவு ஆகுக. வெகு தூரத்திலிருந்து வந்திருக்க வேண்டும். உம் ஊர் எது? உம் பெயர் என்ன? உம் உறவினர் யார்?" என்று ராமன் கேட்டான்.

"நான் பிரம்மாவின் பேரனுக்குப் புதல்வி. குபேரனுடைய தங்கை. வெள்ளிமலையை எடுத்த ராவண மன்னனுக்கு உடன் பிறந்தவள். காமவல்லி என்ற கன்னி" என்று கூறினாள்.

"என்ன காரியத்தை உத்தேசித்து இங்கே வந்தது?" என்றான்.

"பெண்கள் தங்கள் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்வதற்கில்லை. ஆயினும் நான் சொல்லுகிறேன். காமதேவன் என் உள்ளத்தைத் துன்புறுத்துகிறான். நீ என்னைக் காக்க வேண்டும்" என்றாள்.

ராமனுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. அவள் மேலும் சொல்லிக் கொண்டு போனாள்.

"என்னைக் கந்தர்வ விவாக முறையில் மனைவியாக்கிக் கொள்வாய். அந்த முறை 'காதலில் கலந்த சிந்தை கொண்ட மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும்' மறைகளே வகுத்துக் கூறும். இது நடந்து விட்டால் எனக்குச் சந்தோஷம் தருவதுடன் என் அண்ணன் ராவணனுக்கும் உனக்கும் நல்ல சிநேகம் ஏற்பட்டுப் போகும். இந்த வனத்தில் நீ தனியாக இருக்கிறாய். ராக்ஷசர்கள் உன்னைத் துன்புறுத்துவார்கள். நீ முனிவர் கூட்டத்தில் ஒருவனாக இருப்பதால் காரணமின்றியே அவர்கள் உன்னைத் தொந்தரவு செய்வார்கள். நீ என்னை உடனே மணந்து விட்டால் அந்த அபாயம் நீங்கும். அது மாத்திரமல்ல. அதன் பயனாக அந்தப் பலவான்கள் உன்னுடைய வேலைகளையெல்லாம் செய்யத் தயாராய் இருப்பார்கள். இதை யோசிப்பாயாக" என்று நீதி சாஸ்திரத்தையொட்டிச் சொன்னாள் சூர்ப்பனகை.

ராமன் பெருஞ் சிரிப்புச் சிரித்தான்.

"அரக்கர்களுடைய கருணையையும் ஓர் அழகிய புது மனைவியையும் நான் பெற்றுவிடுவேன் அல்லவா? உன்னோடு சுகமாக எங்கு வேண்டுமானாலும் உல்லாசமாகத் திரியும் சௌகரியத்தையும் பெறுவேனல்லவா? மிகச் சரி! அயோத்தியை விட்டு நீங்கி நான் செய்த தவம் இன்று நல்ல பயன் தந்தே விட்டது!" என்று சொல்லித் தன் வெண்மையான பற்கள் விளங்க வாய் திறந்து சிரித்தான் ராமன்.

ஜானகி இந்தச் சமயத்தில் செடிகளுக்கிடையில் வந்துகொண்டிருந்தாள்.

லக்ஷ்மி தேவியே இந்தப் பூமியில் அவதரித்த பூங்கொடிபோன்ற சீதை ராமன் இருந்த இடம் வந்து கொண்டிருந்ததை சூர்ப்பனகை பார்த்தாள். சீதையின் அழகைக் கண்டு வியந்தாள்.

காமத்தால் பீடிக்கப்பட்ட அரக்கிக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"இதோ வருகிறாளே இந்தப் பெண் ஒரு மாய வித்தை செய்யும் ராக்ஷச ஸ்திரீ. இவள் உன்னை ஏமாற்றுவாள். ஜாக்கிரதை! இவள் உருவம் இது வன்று; இவள் பச்சை மாமிசம் தின்னும் அரக்கி. இவளைத் தூரத் தள்ளு" என்றாள்.

ராமன் மறுபடியும் சிரித்தான். "நீ எவ்வளவு அறிவாளி! இவளை நீயல்லவா சரியாகக் கண்டுகொண்டாய்" என்றான்.

இதற்குள் சீதை ராமன் பக்கத்தில் வந்துவிட்டாள். சூர்ப்பனகைக்கு ராமனுடைய பரிகாசம் தெரியவில்லை. அவளுடைய காம வேதனை அவளுடைய மூளையை முற்றிலும் அழித்துவிட்டது. சீதையைப் பார்த்துச் சீறினாள்:

"நீ ஏன் இந்த வீரனண்டை வருகிறாய், அரக்கி?"

"நீயிடை வந்ததென்னே,
நிருதர்தம் பாவை!"


என்று கோபத்தோடு. "தூரப் போ!" என்று அதட்டிச் சொன்னாள்.

சீதை இதுவென்ன விபரீதம் என்று ஒன்றும் விளங்காமல் நடுங்கி மேகத்தை மின்னற்கொடி தழுவுவது போல் சக்கரவர்த்தித் திருமகனுடைய தோளைத் தழுவிக் கொண்டாள். **(தொடரும்)**

சிலையைத் தேடி.. 22

கதை: வாண்டுமாமா






தவிப்போடு—தாங்கமுடியாத வியப்போடு அருகே ஓடிச் சென்று பார்த்த நிலாவின் நிலையை எப்படி வர்ணிப்பது? அவளுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது.
புத்தர்.. தங்கத்தினாலான புத்தர் சிலை. நான் கண்டு பிடித்து விட்டேன். ஆஹா..நான்.. நான்.. ஐயோ! இந்தச் சிலை என்ன— அழகு! எத்தகைய சாந்தம் நிறைந்த புன்னகை! ஆஹா...
சீனாவிலிருந்து சிலையைக் கடத்தி வந்த கப்பல் இலங்கை அருகே வந்ததும் காளியின் உக்கிரத்தினால் கப்பல் புயலுக்குப் பலியாகிவிட்டது. அந்நிலையிலும் சிலை மேல் கொண்ட ஆசையால், உயிர் பிழைத்த ஒருவன் அதை இந்தக் கடல் குகைக்குள் கொண்டு வந்து பத்திரப் படுத்தி விட்டுப் போயிருக்கிறான். பிறகு அவனால் அதை மீட்க இயலவில்லை. அவனது ரகசியக் குறிப்புகள், செய்திகள் தான் அதைத் தேடிப் பலர் அலைவதற்கு வழி செய்து தந்திருக்கிறது...............
இம் மகிழ்ச்சியைத் தம்பி ரவியோடு பகிர்ந்து கொள்ளத் துடித்த நிலா விரைந்து செயல்படலானாள்.
ரவியைக் கூட்டி வந்து காட்ட வேண்டும். பிறகு குண வர்த்தனா, நீசன் ஆகியோரின் உதவியோடு இதை இங்கிருந்து கரைக்குக் கொண்டு போக வேண்டும்.
நீரினுள் பார்த்த மர்ம உருவத்தின் நினைவு வந்தது நிலாவுக்கு. ஆனால் அதைப் பற்றிய தடயம் ஏதும் கிடைக்கவில்லை......
ரவி.. ரவி! எங்கே இருக்கிறாய் நீ?... அவனைக் காணவில்லையே. ஏதோ ஒரு மூலையில் தேடிக் கொண்டிருப்பான்.
ரவி சென்ற பக்கம் நீந்திச் சென்றாள் நிலா.. அந்த வளைகுடாவின் வாயிலில் விசைப் படகு நிற்பதைக் கண்டாள்....
அந்த வடநாட்டுக்காரரின் கப்பல் தான். நீரில் மூழ்கித் தேடும் சாதனங்கள் அணிந்த அந்த உருவம் கப்பலில் ஏறுகிறதே. நான் கடலுக்குள் பார்த்த உருவம் அது தானோ? ஐயோ ரவியைக் காணோமே.
வெகு நேரம் காத்திருந்தும் ரவி வரவில்லை. நிலாவைக் கவலை கௌவிக் கொண்டது.
ஒரு வேளை ரவி அவர்களிடம் சிக்கியிருப்பானோ? அவர்கள் அவனைக் கப்பலில் கட்டிப் போட்டிருப்பார்களோ? அப்படித்தானிருக்க வேண்டும். அதனால் தான் இத்தனை நேரமாகியும் ரவியைக் காணவில்லை. ரவி என்ன ஆனான் என்பதை அறிந்தாக வேண்டும்....

சோபாசிங்கைச் சந்திப்போம்!

தி.சா.ராஜு

- ☐ சோபா சிங்குக்கு ஊக்கம் தரும் மலையும் நதியும்
- ☐ ஸ்ரீ சோபா சிங்.
- ☐ சோபா சிங் தீட்டிய குருநானக் ஓவியம்.
- ☐ ஓவியரின் இல்லம்.





ஒரு பிரதேசத்தின் தட்ப வெப்பம், நில வளம், அந்த மண்ணிலுள்ள ஏற்ற இறக்கம் அனைத்தும் அங்கு வாழும் மக்களின் இயல்பைப் பாதிக்கும். உண்மையான கலை அந்த வாழ்வை நிதரிசனமாகச் சித்திரிக்கவும் செய்யும். பாஞ்சாலத்தின் குளிரும் வெப்பமும் தீவிரத் தன்மை உடையன. அவர்களுடைய வாழ்க்கையும் அவ்வாறே.

ஹீர் — ராஞ்சா; ஸஸி — புன்னு; ஸோ(ஹ்)னி — மஹிவால் ஆகிய பாஞ்சாலக் காதலர்கள் பாரசீகத்து லைலா மஜ்னுவைப் போன்றவர்கள். கவிஞர் வாரிஸ்ஷா எழுதிய 'ஹீர்' பஞ்சாபி இலக்கியத்தில் சிறப்புமிக்க ஒன்றாகும். செனாப் நதிக் கரையின் இருமருங்கிலும் வாழ்ந்த ஸோஹ்னி—மஹிவால் ஜோடியின் கதை பாஞ்சாலத்தில் நாடோடி இலக்கியமாகத் திகழ்கிறது. அந்த அமரக் காதலர்களை ஓவியர் ஒருவர் வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார். அந்தப் படம் ரசனை மிக்க செல்வந்தர்கள் வீட்டில் பளபளக்கும் சட்டங்களினிடையில் காணப்படும். மூலைக் கடைகளில் சுவரில் ஆணி அடித்தும் பொருத்தப்பட்டிருக்கும். அதைக் காணும் போதெல்லாம் அழியாத காதலுக்குப் பாஞ்சால மக்கள் செலுத்தும் அஞ்சலி இது என்று தோன்றும். அதை வரைந்த ஓவியரைப் பல்லாண்டுகளாகக் காணத் தவித்துக் கொண்டிருந்தேன். அண்மையில் வாய்ப்புக் கிட்டிற்று.


பட்டாண்கோட்டிலிருந்து ஜோகிந்தர் நகருக்குப் பொம்மை ரயில் செல்லுகிறது. அதில் ஏறினால் ஐந்து மணி நேரப் பயணத்துக்குப் பிறகு 'பஞ்ச் ருகி' என்ற ரயில் நிலையத்தை அடையலாம். அங்கிருந்து ஓவியர் வசிக்கும் 'அந்தரேடா' இரண்டு மைல் தொலைவில் உள்ளது. மக்கள் தொகுதியிலிருந்து தனித்தும், அதே சமயத்தில் இயற்கை எழிலின் மத்தியிலும் அவர் வசிக்கிறார். சிறிய அழகிய வீடு. சுற்றிலும், மலைப் பகுதியில் மட்டும் தழைக்கக் கூடிய சிறப்பான கனி வகைத் தருக்கள். செய் குளம், சிமிட்டிப் பெஞ்சு, பதுமைகள். வீட்டின் முகப்பில் 'நலம் வளர்' ('Grow more Good') என்ற புது முறை வாசகம் காணப்படுகிறது. வெளி வராந்தாவில் சில ஓவியங்களும், பெரிதாக்கப்பட்ட புகைப்படங்களும். முல்க்ராஜ் ஆனந்த், ஆர்ச்சர், ரந்தாவா ஆகியோர் எதையோ வியப்புடன் பார்த்து நிற்கிறார்கள்.

ஓவியர் சோபாசிங் பாஞ்சாலத்தின் குருதாஸ்பூர் மாவட்டத்தில் பிறந்தவர். முதலாவது உலகப் போரில் பங்கு பெற்றவர். பிறகு அன்றையப் பஞ்சாபின் தலைநகராக விளங்கிய லாஹோரில் சித்திரம் எழுதுவதை வாழ்முறையாக மேற்கொண்டார். இசைபட வாழ்ந்தார். பாரத நாட்டையே உலுக்கிய பிரிவினை வந்தது. தமது உயிரினும் இனிய கலைக் கருவூலங்கள் கண் முன்பு எரிந்து போவதைப் பார்த்து விட்டுத் தில்லிக்கு வந்து சேர்ந்தார். அங்கு சில ஆண்டுகள் அற்புதமான ஓவியங்களை வரைந்தார்.

மும்தாஜ் மஹாலின் இறுதிப் பயணம், உம்மர்கையாமின் காவிய உருவகம் ஆகியவை காண்போரைப் புதிய உலகத்துக்கு இட்டேகியிருக்கின்றன. மனித வாழ்க்கையின் மூன்று பருவங்களைச் சித்திரித்த இவரது ஓவியம் ஜனாதிபதியின் பரிசைப் பெற்றது. இவருடைய சிறந்த ஓவியப் படைப்புகள்

"சுதந்திரத்தின் விலையைக் கொடுக்க நாம் முன் வந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதன் பலனை எல்லோரும் உடனடியாகத் துய்க்கவேண்டும் என்ற வெறி நம்மை ஆட்கொண்டிருக்கிறது" - இப்படிக் கூறும் சிந்தனையாளர் சோபாசிங் ஓவிய மேதையுமாவார். ★





சண்டிகர் சித்திரசாலையிலும், அமிர்தசரஸ் சீக்கிய மியூஸியத்திலும் உள்ளன.

பாரதத் தலைநகரின் பரபரப்பான வாழ்க்கையில் சலிப்புற்று இவர் இமாசலப் பிரதேசத்தில் குடிபுகுந்தார்.

மெலிந்த சிவப்பான உருவம். நீளமான கைகளும், விரல்களும். நாசி நீர்க்கமானது. கண்களில் ஆழமான பார்வை. வாரி ஒழுங்கு செய்யப்படாத தலைமயிர், தாடி. அவர் அசையாமல் உட்கார்ந்திருந்தாலும் உடலுக்குள் ஓர் அசாதாரணத் துடிப்பு.

"நீங்கள் இந்த ஓவியக் கலையை வாழ்முறையாகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் கூற முடியுமா?" நான் பணிவுடன் அவரை வினவுகிறேன்.

அவருடைய முகத்தில் ஒரு விளையாட்டுப் புன்னகை. "இந்தக் கேள்வி, ஒரு கழுதையைப் பார்த்து நீ ஏன் கழுதையாக இருக்கிறாய் என்று கேட்பதைப் போலிருக்கிறது. கழுதை வேறு என்னவாக இருக்க முடியும்?"

மேதைகளுக்கே உரித்தான நகைச்சுவை உணர்ச்சியுடன் அவர் பதிலிறுக்கிறார்.

"அதற்கில்லை, இந்தத்துறையில் தங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டதற்குத் தங்களுடைய பாரம்பரியமும் ஒரு காரணமா என்று அறிய விரும்புகிறேன்."

"ஆமாம். என் பெற்றோர்கள் இருவருக்குமே ஓவியக் கலையில் சிரத்தை இருந்தது."

"தாங்கள் இந்த ஊரை இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம்? பெரிய நகரங்களில் வசித்தால் தங்கள் பணி இன்னும் சிறப்புறுதா?"

ஸ்ரீ சோபாசிங் தலையை அசைக்கிறார். "பொருளாதார ரீதியில் அது நிறையப் பலன் தரும். ஆனால் கலைஞனின் வாழ்க்கையில் பொருளாதாரம் ஒரு சிறு பகுதிதான். இங்கே வருமானம் குறைவு, செலவும் அதிகமில்லை. ஸ்ரீமதி நோரா ரிச்சர்ட் என்னை இங்கு வந்து தங்கும்படி வற்புறுத்தினார்." சுவரில் தொங்கும் ஒரு முதிய அன்னையின் ஓவியத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

காலம் சென்ற பேராசிரியர் ரிச்சர்ட், லாஹோர் இஸ்லாமியக் கல்லூரியில் பணி புரிந்தார். கணவருடைய மறைவுக்குப் பிறகு இங்கிலாந்து திரும்பிய நோரா, மனத்தில் அமைதி பெறும் பொருட்டுத் தமது துணைவர் பணிபுரிந்த நாட்டுக்கே திரும்பி வந்தார். தூய கதராடை அணிந்து மக்களின் சேவையையே வாழ்முறையாகக் கொண்டார்.

"அம்மையார் நிரம்ப வயதானவர் போல் காணப்படுகிறாரே!" நான் வியக்கிறேன்.

"ஆமாம். தொண்ணூற்று மூன்று வயதாகிறது. ஆனால் இந்தப் பிராயத்திலும் அவரிடம் காணப்படும் நாட்டுப் பற்று, மக்கள் சமுதாயத்தில் அவருக்குள்ள நம்பிக்கை, அன்பு ஆகியவை என்னைப் பிரமிக்க வைக்கின்றன."

கலைக் கூடத்தின் சுவர்களில் மாட்டியிருக்கும் சீக்கிய சமயக் குருக்களின் ஓவியங்களை ஆவலுடன் நோக்குகிறேன். "இவற்றின் பிரதிகள் சண்டி நகரிலும் அமிர்தசரஸிலும் இருக்கின்றன அல்லவா?"

''ஆமாம், சிரோமணி குருத்வாரா பிரபந்தக் அமைப்பினர் எல்லாச் சீக்கிய சமயக் குருக்களின் உருவங்களையும் தர நிர்ணயம் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்கான முயற்சிகளைச் செய்கிறேன். பாபா நானக்கின் ஐந்நூறாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறதல்லவா ?''

'' அப்படியானால் இந்தக் குருமார்களுக்கு ஆதார பூர்வமான ஓவியம் கிடையாதா ?''

ஸ்ரீ சோபா தலையசைக்கிறார். ''அதற்கு அவர்களுக்கு நேரம் எங்கு இருந்தது? மேலும் பஞ்சாபிகளுக்கே கலை உணர்வு மிகவும் குறைவு. அவர்கள் சரீர உழைப்புக்கு அஞ்ச மாட்டார்கள். நன்றாக உண்ணவும், உடுக்கவும் செய்வார்கள். வாழ்க்கை வசதிகள் எல்லாம் வேண்டும். ஆனால் கலைப் பொருளுக்காகச் செலவு செய்ய மாட்டார்கள்.''

நண்பர்களின் நகைப்பில் நானும் கலந்து கொள்ளுகிறேன். ''கவிஞர் அம்ருதா ப்ரீதம் கூட இப்படித்தான் கூறுகிறார். அவரது கவிதைகளைப் படிப்பவர்கள் மிகவும் குறைவாம்.''

''வாஸ்தவம். அம்ருதாவின் கவிதைகளின் ஹிந்தி மொழிபெயர்ப்பினால்தான் அவருடைய ஜீவனமே நடக்கிறது. அவருடைய கவிதைகள் பாகிஸ்தான் பஞ்சாபில் பிரபலமாக உள்ளன என்றால் சிலருக்கு வியப்பாயிருக்கும். ஆனால் உண்மை. மேலும் கலைக்கு வேலி என்று ஏதும் கிடையாதல்லவா?''

'' நீங்கள் கூறுவது எனக்கு முற்றிலும் உடன்பாடு.'' நான் கூறுகிறேன்.

ஓவியர் சாளரத்தின் வழியாகத் தென்படும் பசுங் குன்றுகளை ஆவலுடன் பார்த்து விட்டுத் தணிந்த குரலில் பேசுகிறார்: ''குருமார்களின் உருவங்களைத் தர நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கருத்து எனக்குப் பிடிக்கவில்லை. அது கலைஞனின் கற்பனைக்குக் கடிவாளம் போடுகிறது. அதுவும் அவர்கள் ஓவியங்களுக்குச் சமய, அரசியல் வர்ணம் தீட்ட வேண்டும் என்கிறார்கள். உதாரணமாக எல்லாக் குருமார்களின் தலையிலும் பாகைகள்தான் இருக்க வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். அது சரித்திர உண்மைக்கு முற்றிலும் மாறானது. தலைப்பாகை அணியும் வழக்கத்தைக் கொண்டு வந்தவர் பத்தாவது குருவான கோவிந்தர். அவருக்கு முந்தியவர்கள் எல்லாம் தலையில் தொப்பியைத்தான் அணிந்திருந்தார்கள். இதை எடுத்துச் சொன்னால் சிரோமணிக் குழுவினருக்குக் கோபம் வருகிறது.''

''எனக்குப் பந்தா பஹாதுரின் படம் ஒன்று வேண்டும். அவருடைய ஓவியத்தை ஸர்ஹிந்த் ஸாஹிப்பில்கூடத் தேடினேன், கிடைக்கவில்லை.''

முகத்தில் வியப்புக் குறி தோன்ற என்னை ஏறிட்டுப் பார்க்கிறார் ஸ்ரீ சோபா. கூட வந்த நண்பர், சீக்கிய சமய வரலாற்றைப் பற்றி நான் ஆராய்ந்தும், எழுதியும் வருவதையும், அதற்காக அந்தச் சமயத் தொடர்புள்ள இடங்களுக்கெல்லாம் யாத்திரை போய் வருவதையும் அவருக்குக் கூறுகிறார்.

ஓவியர் தமது வலது கையினால் தொடையில் தாளம் போடுகிறார். ''இந்தச் செய்தி எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஏழாவது குருவுக்கும், ஒன்பதாவது குருவுக்கும் என்ன உறவு என்ற வரலாறுகூட இன்றையச் சீக்கியர்கள் பலருக்குத் தெரியாது. தென்னாட்டைச் சேர்ந்த ஒருவர் சீக்கிய சமய வரலாற்றில் சிரத்தை கொண்டிருப்பது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தருகிறது.''

''ஏன்? நான் இந்தியன் இல்லையா ? பெரியாழ்வார் எவ்வளவு உயர்ந்தவரோ, அதே தரத்துக்குப் பாபா நானக்கும், பக்கிரி கபீரும் காணப்படுகிறார்கள்.''

'' கட்சி அரசியல் நம்மைக் குட்டிச் சுவராக்கி விட்டது. முன்னாளில் ஒரே குடும்பத்தில் ஒரு குழந்தை ஹிந்துவாகவும் மற்றது சீக்கியனாகவும் இருந்தது பாஞ்சாலத்தில் ! ஹிந்து சீக்கியர்களிடையே திருமண உறவுகள் இருந்தன. இன்று ஹிந்துக்கள் தங்களுடைய தாய்மொழியே பஞ்சாபி அல்ல என்று ஜனத்தொகை கணக்கெடுப்பவர்களிடம் கூறுகிறார்கள். ஹிந்து சமயத்தைப் பாதுகாக்க வந்த சீக்கியர்கள் இன்று அவர்களைப் பகைக்கிறார்கள். இவை எல்லாம் நன்மைக்கா ?'' அவர் வருத்தத்துடன் பேசுகிறார்.

''தங்களைப் போன்ற தீர்க்கதரிசனமுள்ள மேதைகளே இந்த நிலையைச் சீர்திருத்த வேண்டும்.'' நான் பணிவுடன் கூறுகிறேன்.

''நம்பிக்கை இழக்கக் கூடாது என்று தான் என் உள்ளத்தில் ஏதோ ஒன்று சதா கூறுகிறது. ஆனால் நடைமுறை நிகழ்ச்சிகள் முற்றிலும் மாறாக இருக்கின்றன. இந்த நாட்டில் மிகப் பெரிய தியாகிகள் தோன்றிச் சீர்கெட்ட வாழ்வைத் திருத்தியிருக்கிறார்கள். ஆனால் அதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும். சுதந்திரத்தின் விலையைக் கொடுக்க நாம் முன் வந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதன் பலனை எல்லோரும் உடனடியாகத் துய்க்க வேண்டும் என்ற வெறி நம்மை ஆட்கொண்டிருக்கிறது.''

என்னுடைய உள்ளத்தில் புதிய வெளிச்சம் உண்டாகிறது.

''காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்துக்கு முன்னோடியாக நாம்தாரி சீக்கியத் தலைவரான பாபா ராம்தாஸ் வாழ்ந்தார். வெள்ளையர் நிறுவிய ரயில், சாலை, தபால் வசதிகளைக்கூட அவர் உபயோகிக்க மறுத்தார். முழுக்க முழுக்க சாத்வீகச் சட்ட மறுப்பைப் பிரசாரம் செய்தார். அவரைப் பற்றி இந்தத் தலைமுறையில் எத்தனை பேருக்கு நினைவு இருக்கிறது?'' ஸ்ரீ சோபாவின் குரல் தழுதழுத்தது.

விடைபெற எழுந்து நிற்கிறோம்.

''பேராசிரியர் கண்டா சிங், ஸ்ரீ ரந்தாவா ஆகியோர் நீங்கள் கேட்ட ஓவியத்தை விரும்பி எழுதியிருக்கிறார்கள். பந்தா பஹாதுரைப் பற்றி நிறையப் படித்தபிறகு அவரது ஓவியத்தை வரைவது எனக்குச் சாத்தியமாக இருக்கும். உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.''

மீண்டும் அவரை வணங்கி விட்டுத் திரும்புகிறோம். சிறந்த ஓவியர் ஒருவரை மட்டும் அன்றி அடக்கம் மிகுந்த ஒருவரை, தூய சிந்தனையாளரைத் தரிசித்த மன நிறைவு என் உள்ளத்தில் உதிக்கிறது.

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

18


சத்தியம் என்பது பல கிளைகள் கொண்ட மரம். வாய்மை மட்டும் அல்ல சத்தியம்; எண்ணத்திலும் உண்மை வேண்டும். உண்மை என்பது பௌதிக உலகத்தில் நாம் வைத்துக் கொண்டிருக்கும் உண்மை மட்டுமல்ல; பேருண்மை. மெய்ப் பொருள் என்கிற பேருண்மை. அதாவது கடவுளேயாகும். கடவுளுக்குக் குணங்களும் இலக்கணங்களும் ஆயிரக் கணக்கில் சொல்லுகிறார்கள். அவை அனைத்தும் என் மனத்தைக் கவர்ந்தாலும் சத்தியம் ஒன்றே நான் வழிபடும் மூர்த்தி. அந்த மூர்த்தியை நான் இன்னும் முற்றிலும் காணவில்லை. காண முயன்று வருகிறேன். அதற்காக வேறு எதையும் பொருட்படுத்தாமல் இழந்துவிடச் சம்மதப்படுவேன் — உயிரும் உட்பட. இதற்கு வேண்டிய உறுதியை ஆண்டவன் அருள்வாராக! பூரண உண்மையைக் காணும் வரையில் நான் கண்ட உண்மையே உண்மை என்று கருதிக் கடமைகளைச் செய்து கொண்டு போக வேண்டும். சம்பூரண உண்மையைக் காணும் வரையில் ஔபாதிக உண்மைதான் எனக்கு வழிகாட்டும் தீபமாகும். அதுவே என் யுத்தங்களில் கத்தியும் கேடயமும் ஆகும். அதுவே என் நடைபாதை. இந்தப் பாதை கத்தி முனையைப் போன்றது. இந்த ஒடுக்கமான பாதையே நான் கண்ட பாதைகளில் தாமதமும் தவறுமின்றி நேர் போய்ச் சேரும் பாதை. பிழை பலவாயினும் இமயம் போன்று பெரிதாயினும் நேர் வழியில் போகும்வரையில் எனக்கு அது சிறிதாகவே படும். குற்றத்தின் கேடின்றித் தப்பும் வழி அதிலேதான் உண்டு. யாத்திரை தடைபடுவதில்லை. இப்படி நேர் வழியில் செல்லும் யாத்திரையில் சம்பூரண உண்மையே, மெய்ப் பொருளே ஒவ்வொரு சமயம் காட்சியும் தந்திருக்கிறது. மெய்ப்பொருள் ஒன்றே உண்மை, மற்றதனைத்தும் பொய் என்பதை இந்த யாத்திரையில் கண்டு கொண்டு வருகிறேன்.


இன்னும் ஒன்று கண்டு வருகிறேன். நான் செய்வதைச் சிறு குழந்தையும் செய்யக்கூடும். உண்மைப் பயிற்சிக்கு வேண்டிய கருவிகள் மிக எளியவை. அகம்பாவிகளுக்கு அந்தக் கருவிகள் மிக கஷ்டம். குற்றம் அறியாத குழந்தைக்கு மிகச் சுலபம். உண்மையை நாடுகிறவனுக்குக் கர்வம் கூடாது. தன்னைத் தூசிக்குச் சமானமாகப் பாவிக்க வேண்டும். தூசியைக் காலில் துவைத்து உலகம் நடக்கிறது. ஆனால் உண்மையைக் காதலிப்பவன் அந்தத் தூசியின் கீழ்த் துவைபட்டு நிற்கும் தூசியாகத் தன்னைக் கருத வேண்டும். அப்போதுதான் மெய்ப் பொருள் நமக்குக் காட்சி தரும். (சுய சரிதம்)

கடவுளைப் பகுத்தறிவைக் கொண்டு காண முடியாது. வாதித்துக் காண முடியாது. பக்தியினால்தான் காண முடியும். கண்ட பின்னும் கூட, பக்தியைக் கொண்டுதான் காட்சியை நிறுத்திக் கொள்ள முடியும். சிருஷ்டி அமைப்பில் வேறு மார்க்கம் இல்லை. நமக்கு இட்ட வரம்பை நாம் எப்படித் தாண்ட முடியும்? இந்தத் தேகத்தில் நிற்கும்வரையில் முழுக் காட்சி முடியாத காரியம். முழுக் காட்சி நமக்கு என்னத்திற்கு? அதைக் கொண்டு என்ன செய்வோம்? நான் அடையக்கூடும் மேன்மையை உண்மை பக்தியைக் கொண்டே அடைய முடியும். நேரில் கண்டு முழுக் காட்சி அடைந்து அதற்கு மேல் நாம் அடையக்கூடியது வேறு ஏதும் இல்லை. நமக்கு வெளியேயா கடவுள் இருப்பது? வெளியே இருப்பதற்கு அல்லவோ கண் பயன்படும்? பார்ப்பவனுக்கு உள்ளேயே இருப்பதை முற்றிலும் அவன் எப்படிக் கண்ணால் காண முடியும்? இந்திரியங்களினால் கடவுளைக் காண முயல்வது வீண். உயிரைக் காண்பது உணர்ச்சி ஒன்றே. அவனைக் காண்பது அவ்வழியே. இந்திரியங்களை இழுத்து உள்ளடக்கினால்தான் அவனைப் பற்றிய உணர்வு பெறுவோம். வெளியே நிகழும் இரைச்சல்களால் உள்ளே ஒலிக்கும் சின்ன மேளம் நம் காதில் கேட்கவில்லை. அந்த உன்னத வாத்தியம் நிற்காமல் இசைத்துக் கொண்டேதான் இருக்கிறது. நாம் காதால் கேட்கும் வாத்தியங்கள் அந்த இசைக்குச் சமானம் அல்ல. ஆனால் இரைச்சலை நிறுத்த வேண்டும். ஆண்டவன் வடிவமெடுத்து நம்முன் நிற்க மாட்டான். பேராபத்துக்களினின்று தப்புகிறோமே அந்த நிகழ்ச்சிகளின் வழியாகத்தான் தன்னைக் காட்டுகிறான். (ஹரிஜன் 13-6-36)

சத்தியமே தெய்வம் என்று சொல்லி வருகிறேன். நான் சத்தியத்தின் வழியாகக் கண்டது பரம்பொருளின் பூரண ஜோதியல்ல. ஒரு கிரணமேதான். அதுவே கோடி சூரிய ஒளியாகும். இந்த சத்திய மார்க்கம் அஹிம்சை வழியாகத்தான் கடைப்பிடிக்க முடியும் என்பதை என்னுடைய சோதனைகள் அனைத்தும் ஊர்ஜிதம் செய்துள்ளன. (யங் இந்தியா 7-2-29)










கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம் வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்... நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!

கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைக்கும் கிருமிகளை 85சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றிவிடுகிறது. இத்தகைய நிரூபணத்தைப் பெற்றிருப்பது கால்கேட் ஒன்றுமே! அதன் விசேஷமிக்க பெப்பர்மின்ட் சுவையுடன்— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!



தூய்மையான இனிய மூச்சுடனே, வெண்மையான பற்களையும் பெற்றிடவே... உலகிலேயே அதிக மக்கள் மற்றெந்த பற்பசையையும் விட, கால்கேட் பற்பசையையே வாங்குகிறார்கள்!

DC.G.42TM

அத்தியாயம் 7

ரமா தன் சகோதரி காந்தியை ஆவலுடன் எதிர்நோக்கினாள். 'காந்தி தன் மனத்துக்கிசைந்தவனைக் கோடி காட்டிவிடுவாள், அப்புறம் சகோதரிகள் இருவருக்கும் சேர்ந்தே கல்யாணம் நடக்கும்!' அவள் மனம் பந்தல் போடத் தொடங்கி விட்டது.

காந்தி வந்ததும் அவள் கையில் இருந்த புகைப்படத்தை ஆவலுடன் வாங்கிப் பார்த்தாள் ரமா.

காந்தி திடுக்கிட்டாள். 'அப்பாவிடம் சொல்லி விட்டாளாமே?'

''என்ன சொன்னாய்?''

''.....வந்து....''

''சொல்லேன் ரமா!'' ரமாவின் தயக்கத்தில் காந்திக்கு ஒரு புறம் திகைப்பு. மறு பக்கம் நிம்மதியின் ஆரம்பம்.

''அப்பாவைப் பற்றி என்ன? அப்பா தடுக்கவா போகிறார்? என்னிடம் நேராகச் சொல்லாவிட்டாலும் உன் போக்கிலிருந்து நான் புரிந்துகொண்டு விட்டேன்..... வாகவாவது முன் கோபம் கொண்டவர். தம்முடைய பொருள் என்றால் மற்றவர் பார்ப்பதைக் கூட



ஏமாற்றம்! ஏமாற்றம்!

காந்தி பக்கெனச் சிரித்து விட்டாள்.

கோபத்துடன் ரமா புகைப் படத்தை மூலையில்விட்டெறிந்தாள்.

''காந்தி! எனக்கு உண்மையான போட்டோவைக் காண்பிக்கப் போகிறாயா, இல்லையா?'' எரிமலையாகச் சீறினாள் ரமா.

''ரமா, அந்தப் போட்டோ ஓர் ஆண் மகனுடையதுதான் என்று எப்படி நீ நிச்சயமாய்க் கூற முடியும்?''

ரமா கொஞ்ச நேரம் ஸ்தம்பித்து விட்டாள்.

'' என் சகோதரியின் புகைப்படத்தையோ அல்லது அப்பா அம்மாவின் புகைப்படத்தையோ கூட நான் பார்த்திருக்கலாமல்லவா?''

''இருக்கலாம். ஆனால் அப்படி இருந்தால் நீ என்னிடம் மறைத்திருக்க மாட்டாய்!'' எதிர் மடக்கில் காந்தியை மௌனியாக்கி, ''காந்தி நீ காட்டினால் என்ன, காட்டா விட்டால் என்ன? நான் அப்பாவிடம் விவரம் முழுவதும் சொல்லி விட்டேன்'', என்றாள் ரமா.

விரும்ப மாட்டார். ஆனால் அவர் நண்பர் அப்படியில்லை....''

''ஏய்....'' காந்தி 'கிறீச்'சிட்டாள்.

''......ரொம்பவும் பெருந்தன்மை உடையவர். கோபமே வராது. விட்டுக் கொடுக்கும் மனப்பாங்குகொண்டவர்.''

''ரமா! வாயை மூடப் போகிறாயா, இல்லையா?'' காந்தியே அவள் வாயைப் பொத்தினாள்.

ரமா காந்தியின் கோபத்தை இலட்சியமே செய்யவில்லை. மணப் பெண் ஒருத்தி மற்றவர்கள் பரிகசிக்கும்போது காட்டும் விளையாட்டுக் கோபம், பொய்ச் சிணுங்கல் என்றே அதை நினைத்தாள்.

'' நான் பேசினால் அப்படித்தானடி இருக்கும். இருவரும் கைகோத்து

மனையில் திரும்பும்போதல்லவா தெரியப் போகிறது. 'மிஸ்டர் ஆனந்த்! உங்கள் மனைவிக்குக் கொஞ்சம் கோபம் அதிகம். அதனால் அவளைக் கவனமாகவே வழிக்குக் கொண்டு வரணும்' என்று நான் முன்கூட்டியே அவரை எச்சரித்துவிடப் போகிறேன்!''

காந்தி கர்ஜித்தாள்: ''ஷட் அப்! கற்பனைக் குதிரையை ரொம்பவும் தட்டி விடாதே. என் மனம் எனக்குத் தெரியும். என் காதலனை எனக்குத் தெரியும். நீ யாரவள் இடையே?'' கூடை நாற்காலியை வேகமாகத் தள்ளிவிட்டு விடுவிடென்று அந்த அறையை விட்டு வெளியேறினாள் காந்தி.

ரமா வெலவெலத்துப் போய்விட்டாள். நெஞ்சோடு நெஞ்சாக நின்ற சகோதரி ஒரே நிமிடத்தில் இப்படித் தூக்கி எறிந்து விட்டாளே! 'தாயாக நிற்பேன், துயர் துடைப்பேன்' என்றவள் எல்லாவற்றையும் ஒரு நிமிடத்தில் மறந்துவிட்டுச் சூறாவளியாகச் சிதறித் தள்ளி விட்டாளே! இத்தனையும் சகோதரிக்கு நன்மை பயக்கும் எண்ணத்துடன்தானே அவள் பேசியிருக்கிறாள்! இதில் தவறு என்ன? சினிமாவுக்குப் போயிருக்கிறாள், அவளுக்குத் தெரிந்து ஒரு முறை அவனுடன். அவளுக்குத் தெரியாமல் எத்தனை முறைகளோ?

ஒருகால் காந்தி சொன்னதுபோல் சினிமாவுக்கும் கடற்கரைக்கும் செல்லும் துணையை மட்டும் மனத்தில் இருத்திக் கொண்டு காதலன் என்று நிச்சயித்துவிட முடியாதோ! ஆனால் அவள்வரைக்கும் அவள் வாசுவுடன் தானே சென்றிருக்கிறாள்!

ஆனால்... 'என் காதலனை எனக்குத் தெரியும்' என்று கூறினாளே காந்தி, அதன் பொருள்...?

அவள் யாரையோ நினைத்திருக்க, நான் வேறு யாருடனோ அவளைச் சேர்த்துக் கூறினால் கோபம் வரத்தானே செய்யும்? இதில் காந்தியின் தவறு என்ன? அவள் விரும்புபவன் ஆனந்தைக் காட்டிலும் ஒருவேளை உயர்ந்தவனாக இருக்கலாம்...

ரமா மெள்ள எழுந்திருந்தாள், கோபித்துச் சென்ற காந்தியை அப்பொழுதே சமாதானப்படுத்தும் ஆவலில்.

'சகோதரியிடம் இப்படித் தீயாகக் கக்கிவிட்டு வந்தோமே, இது நியாயமா? ஆனால் ஆனந்தை விவாகம் செய்து கொள் என்று சொல்ல இவள் யார்? இவள் தன் விருப்பப்படி வாசுவை மணக்க வேண்டும், நான் மட்டும் ஆனந்தை மணக்க வேண்டுமோ? சந்தர்ப்பச் சூழ்நிலையைக் கொண்டு அவள் அப்படி முடிவு செய்தாளே ஒழிய எல்லாம் தெரிந்தா சொன்னாள்? நான் அல்லவோ ஏமாந்து மணந்தேன், சகோதரியின் நல்வாழ்வு ஒன்றையே கருத்தில் கொண்டு! இப்போது ஒரே நிமிடத்தில் தூக்கி எறிந்து பேசி விட்டேனே! என் சுயநலத்தை என்ன வென்பது?

'இனி அது கிளைத்து விடாதபடி அழித்துவிட வேண்டும்...' பாவம் ரமா! கோபிக்கத் தெரியாதவள். யாராவது கோபித்தாலும் மருண்டு கருண்டுவிடுவாள். வாசுவோடு ஏதேனும் ஊடல் ஏற்பட்டாலும் எப்படித் தவித்துப் போய்த் தண்ணீராகி விடுகிறாள்! தவறு ரமாவினுடையது அல்ல. என்னுடையதுதான். நான்தான் அவளிடம் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும்.'

இப்படி எண்ணிக் காந்தி ரமாவைச் சந்திக்க எழுந்தபோது ரமா அவள் எதிரிலேயே நின்று கொண்டிருந்தாள்.

''ரமா!''

''காந்தி!''

யாரும் யாரிடமும் மன்னிப்புக் கேட்கவில்லை. ஒருவர் அணைப்பில் ஒருவர் சிக்கி இருவருமே கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தனர்.

* * *

“ஸார்!''

ஆனந்த் வந்தவரை அழைத்து வந்து, ''அப்பா, இவர்தான் ஸ்ரீ காந்த்'' என்றான்.

''உட்காருங்கள்! நீங்கள் எங்கள் வீடு வரை



வந்தது பற்றிச் சந்தோஷம். உங்களைப் பற்றி ஆனந்த் அடிக்கடி சொல்வதுண்டு.''

'' ஒரு சுயநலவாதி ! என்று தானே ?'' சிரித்தார் ஸ்ரீகாந்த்.

'' சுயநலமில்லாமல் இவ்வுலகில் எதுதான் நடக்கிறது? உங்கள் சுயநலம் ஆனந்தைத் தூக்கிவிட அல்லவா உதவுகிறது ?'' என்றார் சீதாபதி.

ஸ்ரீகாந்த் விளம்பரக் கம்பெனியின் முதலாளி. எத்தனையோ கண்டிராக்ட்களை எடுத்திருந்தார். கை நிறைய வரும்படி. அள்ளிக் கொடுக்கும் குணம்.

''அன்றைக்கு மகாபலிபுரச் சித்திரங்களை ஆனந்த் என்னிடம் கொண்டு வந்து கொடுத்த போதே என் மனத்தில் ஓர் எண்ணம் உருப் பெற்றது.... இந்தியாவின் இயற்கை எழில்



இணையற்றது என்பது எல்லோருக்கும் தெரியும். மேல்நாட்டில் காணும் இயற்கைக் கோலங்களையும் நேருக்கு நேர் கண்டு எழிற் சித்திரங்களாக வடிக்க வேண்டும் என்பது என் ஆசை. அதை ஆனந்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள விரும்புகிறேன்'' என்றார் ஸ்ரீகாந்த்.

சிதாபதியின் மனம் மகிழ்ச்சியில் மிதந்தது. எவ்வளவு பெரிய வாய்ப்பு! ஆனால் ஆனந்த் ஒரே ஒரு நிமிடந்தான் மகிழ்ச்சியில் திளைத்தான். அடுத்த நிமிடம் தலை குனிந்து விட்டான்.

''செலவெல்லாம் என்னைச் சேர்ந்தது. மேல் நாட்டில் இருக்கும்போது தந்தையைக் காப்பாற்றுவதற்காக மாதச் சம்பளம் ஐந்நூறு ரூபாய் தருகிறேன். அங்கிருந்து திரும்பியதும் ஆயிரம் ரூபாய் அடிப்படைச் சம்பளம் போட்டுத் தருகிறேன்.''

ஆனந்துக்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டமா? சிதாபதிக்குப் புல்லரிப்பு ஏற்பட்டது.

'''இதேதடா, இவன் இப்படி அள்ளிக் கொடுக்கிறேன் என்கிறானே, என்ன தாராள மனப்பாங்கு?' என்று என்னைப் பற்றி நீங்கள் இப்படி ஏதாவது நினைத்தால் ஏமாந்துதான் போவீர்கள்!'' ஸ்ரீகாந்த் தொடர்ந்தார்.

என்ன நிபந்தனை போடுவாரோ? சிதாபதி அவரை நோக்கினார்.

''ஆனந்த் அங்கு போய் வருவதால் அவன் சித்திரக் கலை வளரும். அந்த வளர்ச்சியில் என் தொழில் முன்னேறும். அந்த முன்னேற்றத்தில் என் கஜானா நிரம்பும். அதிலிருந்து ஒரு சிறு பங்குதான் ஆனந்துக்குச் சம்பளமாக வரும். சுயநலம் சார், சுயநலம்!''

இப்படி ஒருவர் மனம்விட்டுப் பேசுவாரோ? சிதாபதி வியந்தார்.

''ஆனால் அந்தக் கஜானா பணம் வேறு ஒரு புதிய தொழிலில் இறங்கும். அதனால் பலருக்கு வேலை கிடைக்கும். பல குடும்பங்கள் பிழைக்கும்.'' ஆனந்த் கூறினான்.

''நன்றாகப் பேசுகிறாய், ஆனந்த். சரியான நுணுக்கங்கள் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாய். சரி, புறப்படுவதற்கு எப்போது ஏற்பாடு செய்யட்டும், சொல்லு.''

''நீங்கள் என்றைக்குச் சொல்லுகிறீர்களோ, அன்றைக்கு அவன் கிளம்பி விடுவான்!'' பதில் அளித்தது சிதாபதி.

''இதென்னப்பா, இப்படிக் கூறி விட்டீர்கள்?'' என்றான் ஆனந்த் கலவரத்துடன்.

''ஏன்? கூறக் கூடாதா?''

ஆனந்த் ஸ்ரீகாந்தை நோக்கினான். ''ஸார், மன்னிக்கணும். உங்கள் கோரிக்கையை என்னால் நிறைவேற்ற முடியாது.''

ஸ்ரீகாந்தும் சிதாபதியும் அதிர்ச்சிக்குள்ளாயினர்.

''ஆனந்த்! என்ன பேசுகிறாய் நீ? அவ்வளவு பெரியவர் உனது நன்மைக்கெனக் கூறுகிறார்'' என்று சிதாபதி கூவி விட்டார்.

''அதை நான் மறுக்கவில்லை.''

''ஏன் தயக்கம் காட்டுகிறாய், ஆனந்த்?'' ஸ்ரீகாந்த் கேட்டார்.

''த...யக்க...மா...? ஸார், த..யக்கம்...'' ஆனந்தின் விழிகள் குளமாயின.

ஸ்ரீகாந்த் எழுந்து விட்டார். ''என் கஜானாவின் லட்சுமி, மகாலட்சுமியாக ஆகப் பாக்கியம் செய்யவில்லை'' என்று கூறியவர் சிதாபதியை நோக்கி, 'போய் வருகிறேன்' என்ற பாவனையில் தலையை மட்டும் ஆட்டினார்.

''ஆனந்த்! அவர் கோபித்துக் கொண்டு போகிறார் போலிருக்கிறதே!''

ஆனந்த் இவ்வுலகுக்கு வந்தான்.

''ஸார்!'' என்று கூப்பிட்டுக் கொண்டே அவரை அணுகினான்.

''என்னப்பா ஆனந்த்?'' முன்னேறிக் கொண்டே கேட்டார் அவர்.

''நீங்கள் தவறாக நினைக்கக்கூடாது!''

''அப்படி நினைக்க எனக்கு அதிகாரம் ஏது? நான்தான் சொல்லி விட்டேனே, எனக்கு அதிர்ஷ்டமில்லை.''

''நீங்கள் என் தந்தையைப் பார்த்தீர்களே, எப்படி இருக்கிறார்? நான் கல்லூரிப் படிப்பில் முதன்மையாகத் தேறியும் எங்கும் வேலைக்குப் போகாத காரணம் விளங்கவில்லையா?''

ஸ்ரீ காந்த் மெள்ள அவன் தோளைப் பற்றினார். ''ஆனந்த்....'' அவருக்கும் மேலே பேசத் தெரியவில்லை.

''ஸார், உங்களுக்குத் தெரியும். என் அப்பாவுக்கு மனைவி இல்லை. என்னைத் தவிர வேறு பிள்ளைகளும் இல்லை.''

சிதாபதியின் பாக்கியம் தான் ஸ்ரீகாந்தின் கண் முன் நின்றது. அவரால் தம் குடும்பத்தையே சரிவரக் கவனித்துக் கொள்ள முடியவில்லை! உன் தந்தையை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று ஆனந்திடம் சொல்லி விட முடியுமா?

''இடியட்! முட்டாள்.... எனக்கு இப்படி ஒருநண்பனா? பெயர் ஆனந்தாம்! பற்றிக் கொண்டு வருகிறது எனக்கு!''

வாசு பொரிந்து தள்ளிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

''வாசு...'' சிதாபதி மெள்ள அவன் பெயரைச் சொல்லி அழைத்தார்.

''நீங்கள் சும்மா இருங்கள், மாமா! என்னோடு பேசாதீர்கள். பேசினால் என்

வாயிலிருந்து வரும் திட்டுக்களெல்லாம் உங்கள் மீது விழும்....'' வாசு அறையிலேயே குறுக்கும் நெடுக்குமாக நடை போட்டான்.

''ஏன் வாசு இப்படியெல்லாம் பேசுகிறாய்? உன்னைப் போன்ற நண்பன் ஆனந்துக்குக் கிடைத்தது அவன் அதிர்ஷ்டம் அல்லவா?'' என்றார் சீதாபதி மெதுவாக.

''மாமா! நீங்கள் பேச வேண்டாம். உங்கள் மகனுக்குக் கோபுரத்தைப்பொம்மைதான் தாங்குவதாக எண்ணம்!''

சீதாபதிக்கு முழு விவரமும் புரியவில்லை. ''வாசு, கோபுரத்துக்கும் பொம்மைக்கும் இங்கு என்ன வேலை?'' என்று கேட்டார்.

''உங்களுக்கு விஷயமே தெரியாதா? ஸ்ரீகாந்த் இவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்த மேல்நாட்டுப் பயணத்தை இவன் வேண்டாம் என்று கூறி விட்டானாமே!''


''ஆமாம்...''

''என்ன மாமா, 'ஆமாம்' என்கிறீர்கள்? இவன் ஏன் வேண்டாமென்று சொன்னான், தெரியுமா? தெரியுமா என்று கேட்கிறேன்.''

சீதாபதி மகனை நோக்கினார். அவராக ஒரு காரணம் நினைத்திருந்தார். அதுவாகத்தான் இருக்கும் என்பது அவர் எண்ணம். அவர் மகனோ வாசுவை நோக்கினான், 'வேண்டாமடா, எல்லாவற்றையும் கொட்டி விடாதே. அப்பா மனம் கஷ்டப்படும்' என்று கெஞ்சும் கண்களோடு.

''அப்பாவைக் கவனிக்க வேண்டியது முக்கியம்தான். ஒப்புக் கொள்கிறேன். அதற்காக ஒரு நல்ல வாய்ப்பை விட்டுவிட முடியுமா? இந்த மாதிரி வாய்ப்புக்கு எத்தனை பேர் தவம் கிடக்கிறார்கள்?'' என்று கேட்ட வாசு, ''மாமா! நான் யார்? உங்கள் அருமை மைந்தனுக்கு நண்பன். உங்களுக்கு....? ஆனந்தைப் போல் நானும் ஒரு மைந்தன். எனக்கு இப்படி ஓர் உதவி தேவையாயிருந்தால் ஆனந்த் எனக்கு அதைச் செய்ய மாட்டானா? அவன் செய்யாவிடினும் 'இதை நீ செய்' என்று உரிமை கொண்டாடிக் கேட்க

பதினாறும் பெற்றவர்!



சென்னை வானொலி நிலையத்தில் பணிபுரியும் குமாரி எஸ். லீலா எத்திராஜ் கல்லூரியில் படித்துப் பட்டதாரியானவர்.

1959ல் ஸ்ரீமதி இந்திரா காந்தி சென்னை வந்திருந்தார். அப்போது அவர் தகவல் ஒலிபரப்பு மந்திரியாக இந்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தார்.

எத்திராஜ் கல்லூரியில் பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

ஸ்ரீமதி இந்திரா காந்தி பரிசளிக்க ஒப்புக் கொண்டு கல்லூரிக்கு விஜயம் செய்தபோது, முதன் முதலாக ஓட்டப் பந்தயத்துக்குப் பரிசு பெற்றார் குமாரி லீலா.

அதன் பிறகு அதே மேடையில் வரிசையாகப் பதினைந்து முறை லீலா வந்து கொண்டிருந்தார்!

டென்னிஸ், லாங்-ஜம்ப், ஷாட்புட், மியூஸிகல் சேர், கட்டுரை எழுதல், கதை எழுதல், பாட்டுப் போட்டி, நாடக நடிப்பு, வகுப்பில் இலக்கியப் பாடம், தமிழ்ப் பாடம், இப்படியாக மொத்தம் பதினாறு பரிசுகளை ஒரே நாளில், ஒரே மேடையில் ஸ்ரீமதி இந்திரா காந்தியிடமிருந்து பெற்றார் இவர்!

கல்லூரியை விட்டு வெளியே வந்த பிறகும் மேடை நாடகங்களில் நாட்டம் கொண்டு ஈடுபட்டு வருகிறார். 'இரு கோடுகள்' நாடகத்தின் ஐ. ஏ. எஸ். அதிகாரியாக நடிக்க மூன்றே நாட்களில் ஒத்திகை பார்த்து மேடை ஏறினார் குமாரி எஸ். லீலா.

— ஏ. சுவாமிநாதன்



"இவரும் நானும் ஆபீசில் சோபாகம் பேட் மாதிரி!"

"அப்படியென்ன?"

"இவர் ஆபீசில் உட்கார்ந்துகொண்டே தூங்குவார். நான் படுத்துக்கொண்டுதான் தூங்குவேன்!"

மாட்டேனு? அதே உரிமை என்னிடம் அவனுக்குக் கிடையாதா?.... உங்கள் மகன் ஆனந்திடம் நீங்கள் ஒரு பணியை ஏவி விடுவது போல், என்னை மைந்தனுக நினைத்து ஏவ முடியாதா? தெரியாமல்தான் கேட்கிறேன்!'' என்றுன்.

சீதாபதி வாசுவை அப்படியே அணைத்துக் கொண்டார். ''வாசு! எனக்கு இரு மைந்தர்கள் என்று இப்போது நன்ருகப் புரிந்து விட்டது'' என்றவர் ஆனந்தை நோக்கி, ''ஆனந்த்! வாசு இவ்வளவு தூரம் எடுத்துக் கூறும்போது என்னப்பா தயக்கம்?'' என்று கேட்டார்.

''அப்பா! நண்பன் என்ற முறையில் அவன் நன்ருகப் பேசி விட்டான். அந்த நண்பன் முறையை நானும் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? நான் பயணத்தை மேற்கொண்டு திரும்பி வந்தால் கை நிறையப் பணம் வாங்கப் போகிறவன் நான். அதனுல் இவனுக்கு என்ன லாபம்?'' என்றுன் ஆனந்த்.

''பார்த்தீர்களா, இவன் பேசுவதை? இரு நண்பர்களின் உள்ளம் ஒட்டிவிட்டால் என்னுடையது, உன்னுடையது என்ற பாகுபாடு ஏது? இவன் ஆயிரக்கணக்கில் சம்பாதிப்பவனுகவே இருக்கட்டும்! 'அதில் நீ கேட்டால்கூடக் கொடுக்க மாட்டேன்' என்றல்லவோ பேசுகிருன்! இவன் பணமும் வேண்டாம், இவனும் வேண்டாம். உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை நானுகவே ஏற்கிறேன். போதுமா?'' என்றுன் வாசு.

''வாசு! ஏன் இப்படிப் படபடக்கிருய்? என்னைவிட நீ என் அப்பாவை நன்ருகப் பார்த்துக் கொள்வாய் என்று எனக்குத் தெரியும். இந்தப் பொறுப்பை இப்பொழுது உனக்குக் கொடுத்தால் சுதந்திரமாகத் திரியும் பறவையைக் கூட்டில் அடைப்பது போல் ஆகி விடுமே!'' என்றுன் ஆனந்த்.

''ரமாவோடு நான் சுற்றுவதைத் தானேடா சொல்கிருய்? நீ கிளம்புவதற்குள்ளாகவே எங்கள் விவாகத்துக்கான ஏற்பாட்டைச் செய்து விடுகிறேன், போதுமா?'' என்றுன்.

ஆனந்த் தலை குனிந்து விட்டான்.

''ஆனந்த்!''

''என்ன அப்பா?''

''வாசு விவாகம் செய்து கொண்டு ரமாவை என் சேவைக்கு அர்ப்பணிப்பதைக் காட்டிலும் எனக்கென ஒரு மருமகள் வந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் எவ்வளவு நன்ருக இருக்கும்?'' என்று கேட்டார் சீதாபதி.

ஆனந்தின் நெஞ்சம் தவித்தது.

விவாகப் பேச்சை எடுத்தாலே ஆனந்தின் மனத்தில் ஏதோ வேதனை! குடியும் குடித்தனமுமாக இருக்க அவன் மட்டும் விரும்ப வில்லையா? அப்படித்தானே தனக்குள் எத்தனையோ ஆகாயக் கோட்டைகளுக்கு அடிவாரம் போட்டான்! கட்டிடத்தின் வரைகோட்டுக் காகிதமே கிழிந்து விட்டது போல், ஆதாரம் கூடக் காணுமல் அவன் கோட்டை விழுந்து விட்டது. விழுந்த இடத்தின் சிதள்கள் பழைய நினைவைக் காட்டுவதாக நெஞ்சோடு தங்கிவிட்டன. அப்பாவைக் கவனிக்கும் பொருட்டு விவாகம் வேண்டுமாம்! அது முடியுமா? அவனுல் முடியவே முடியாது. அந்தச் சிதள்களின் இடையே ஒருத்தியை நிறுத்தி அந்த விளைவுகளுக்கு மாக கற்பிக்க அவன் விரும்ப வில்லை. அதைக் காட்டிலும் தந்தைக்குச் சேவை செய்வதன் பொருட்டு எல்லாவற்றையுமே இழக்க அவன் தயார்.

''ஆனந்த்...! ஏனப்பா மௌனம்?— ஒருகால் நீ எந்தப் பெண்ணையாவது காதலித்திருக்கலாம். இப்போதும் அதே நினைவில் இருக்கலாம். அப்படியிருந்தாலும் தயங்காமல் சொல்லுடா குழந்தை. அவளை உனக்காக முழு மனத்துடன் ஆதரிக்கிறேன்.''

''ஐயோ! வேண்டாம் அப்பா, வேண்டாம். காதல் என்னும் சொல்லே என்னை ஏமாற்றி விட்டது. காதல் விஷயத்தில் நான் தோற்றுவிட்டேன்.''

சீதாபதி தவித்துவிட்டார். (தொடரும்)

இலக்கிய எரிமலை



பதின்மூன்றாவது பிராயத்திலேயே தமது மூத்த பெண் செல்வி வாலத்துக்குத் திருமணம் செய்து வைத்தார் காலம் சென்ற தேசபக்தர் திருச்சி வக்கீல் என். ஹாலாஸ்யம் அய்யர். கணவர் ஓர் இராணுவ எஞ்சினியர். ஏழாவது வகுப்போடு சிறுமி வாலத்தின் பள்ளிப் படிப்பு நின்று போயிற்று. பள்ளிப்படிப்பு தடைப்பட்டாலும் ஸ்ரீமதி வாலத்தின் கல்வி ஆர்வம் குறையவில்லை. கணவர் திரு பி. என் கிருஷ்ணசாமி இலக்கிய உள்ளம் படைத்தவர். அவர் உதவியுடன் வீட்டிலேயே மன தத்துவம், வேதாந்தம் இரு பாடங்களையும் ஆங்கிலத்தில் பயின்று பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் பரீட்சை எழுதிப் பட்டம் பெற்றார். ஹிந்தியில் பி. ஏ. ஆனர்ஸு"க்குச் சமமான 'பிரபாகர்' பட்டமும், சமஸ்கிருதத்தில் 'விசாரத' பட்டமும் பெற்ற ஸ்ரீமதி ஹா. கி. வாலம் இன்று நான்கு மொழிகளில் கவிதை புனையுமளவுக்குப் புலமை பெற்றுள்ளார்.

''வட மொழிக்கு 'டியூஷன்'. தமிழுக்கு என் தந்தை குரு. ஆங்கிலத்துக்கு என் கணவரே எனக்குக் குரு'' என்கிறார் ஸ்ரீமதி வாலம். கவிதையே இவரது மூச்சுக் காற்று. கடந்த 22 ஆண்டுகளில் இவர் எழுதிக் குவித்த இரண்டு லட்சம் வரிகளுக்கு மேற்பட்ட கவிதைகள் 18 நூல்களாக வடிவம் பெற்றுள்ளன. பெரும்பாலானவை பக்திப் பாடல்கள்.

அம்பிகையின் ஆயிரம் திருப் பெயர்கள் கொண்ட அருமறையான 'லலிதா சகஸ்ரநாமம்', ஆதிசங்கர பகவத்பாதர் அருளிய 'சௌந்தரிய லஹரி' ஆகிய இரு கிரந்தங்களையும் முறையே 'வடிவழகி திரு ஆயிரம்' 'அழகின் அலைகள்' என்ற தலைப்புக்களில், தெள்ளு தமிழ்க் கவிதைகளாக உருவாக்கியுள்ளார். வடமொழிப் புலமை மிக்கவர்களுக்கே 'சௌந்தரிய லஹரி'யின் உள்ளர்த்தம் புரிவது எளிதல்ல. அதனை வடமொழி அறியாதவர்களும் கூடப் படித்து மகிழும்வண்ணம் எவ்வளவு எளிய நடையில் கவிதையாக மொழிபெயர்த்துள்ளார் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சில வரிகள்:

அஞ்சுகமே உன் அணி முறுவல்
வஞ்சிமுக மலர்த் தேன் பருகும்
செஞ்சிவன் முக்கண்கள் கருவண்டாய்
கொஞ்சிச் சுழன்றே மெய்ம்மறக்கும்
அஞ்சொலின மயில் இஞ்சுகமே!

திருமாலின் பத்து அவதாரங்களுள் பூர்ணாவதாரம் என்று மகான்கள் பாராட்டும் கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனின் லீலைகளை எல்லாம் விளக்குவது பாகவதம் (தசம ஸ்கந்தம்). 'மோகன லீலை' என்ற தம் நூலில் அந்த நயங்களை யெல்லாம் கொஞ்சு தமிழில் கவிதையாக்கியுள்ளார் ஸ்ரீமதி ஹா. கி. வாலம். 'பஜகோவிந்தம்', 'விஷ்ணு சகஸ்ரநாமம்', 'வேங்கடேச சுப்ரபாதம்' ஆகிய துதிகளையும் தமிழில் அளித்துள்ளார் இவர்.





இதில் ஒரு விசேஷம் என்னவெனில், ஆசிரியர்கள் பெரும்பாலோர் தங்கள் நூல்கள் மூலம் பொருள் வருவாய் தேட முற்படுவார்கள் எனில் ஸ்ரீமதி வாலம் தம் நூல்களைப் பிரசுரிக்க இதுவரை ரூ. 60,000 வரை செலவு செய்துள்ளார்!

''தமிழ் இலக்கியங்களில் எவற்றை நீங்கள் பிற மொழிகளில் பெயர்த்துள்ளீர்கள்?''

''பாரதியின் பாஞ்சாலி சபதத்தை ஆங்

கிலத்தில் மொழிபெயர்த்துள்ளேன். ஆண்டாளின் வாழ்க்கை வரலாற்றினை தமிழில் 'மோஹன வதிகா' என்ற தலைப்பில் பிரசுரித்திருக்கிறேன்...''

''கவிதை எழுதும் ஆர்வம் முதன் முதலாக எப்பொழுது எழுந்தது?''

''1946ல் என் கணவர் பீரட்டில் பணியாற்றி வந்த சமயம் தரித்து — முஸ்லிம் கலவரங்கள் நாட்டில் பல இடங்களில் பரவின அல்லவா? அதன் விளைவாக, மகளிர் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்ற உணர்வு என்னுள் எழுந்தது. அக்கருத்தினை யொட்டி ஒரு கவிதை உருவாகியது. அதன்பிறகு சுமார் ஆயிரம் கவிதைகள் வரை, தேச பக்தி, இயற்கை யெழில், வேதாந்தம் இவை பற்றி இயற்றியிருக்கிறேன். தெய்விகத்தை அடிப்படையாகக் கொண்டவையே பெரும்பாலானவை.''

ஆயிரம் வரிகள் கொண்ட 'பாரத சுப்ர பாதம்' என்ற இவரது கவிதை (இன்னும் பிரசுரமாகவில்லை) பாரதத்தின் தொன்மையான கலாசாரத்தினையும் பண்பாட்டினையும் விளக்குவதாகும். இரவு பத்து மணி முதல் விடியற்காலை நான்கு மணி வரையில் இடைவிடாமல் கவிதை எழுதும் வேகம் இவருக்குண்டு. ஒரு சமயம் ஒரே நாளில் முப்பது கவிதைகள் இயற்றியுள்ளார் இவர்! கம்பன், வால்மீகி, துளசிதாஸ் ஆகியோர் இயற்றிய இராமாயண காவியங்களின் சிறப்பியல்புகளை ஒப்புநோக்கி, 'இராமாயண ரத்னாகரம்' என்ற ஆராய்ச்சி நூல் எழுதும் பணியில் தம்மை இப்பொழுது ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார் ஸ்ரீமதி வாலம்.


பிரசுரமாகவிருக்கும் இவரது கவிதைகளின் கையெழுத்துப் பிரதிகள் நேர்த்தியாக 'பைண்ட்' செய்யப்பட்டு, வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ள அலமாரி என்னைக் கவர்ந்தது. அதிலிருந்து ஒரு நோட் புத்தகத்தை எடுத்துப் பிரித்ததும் நான் வியப்பெய்தினேன். நூற்றுக்கணக்கான வரிகள் அடங்கிய அந்தப் பல்வேறு கவிதைத் தொகுப்புக்களின் கையெழுத்துப் பிரதிகளில் ஓர் அடித்தலோ, திருத்தலோ இருக்க வேண்டுமே! இல்லவே இல்லை! ''ஒரு தடவை எழுதி மீண்டும் நகல் எடுக்கப்பட்டவையா?'' என்று நான் சந்தேகத்துடன் கேட்டேன். ''முதல் தடவையாக எழுதியவைதாம் எல்லாம்'' என்று ஸ்ரீமதி வாலம் பதில் சொல்லுகிறார். வியக்காமல் இருக்க முடியுமா?

இவரது கணவர் திரு பி. எஸ். கிருஷ்ண ஸ்வாமியும் 'கடல் துளி' என்ற தலைப்பில் ஒரு கவிதைக் கொத்து வெளியிட்டுள்ளார். 'Sea Drops' என்ற தலைப்பில் அக்கவிதைகளை ஆங்கிலத்திலும் கவிதை வடிவில் எதிர் எதிர் பக்கங்களில் அளித்துள்ளார். பக்தி ரசம் ததும்பும் கவிதை நூல்களையெல்லாம் தங்கள் குழந்தைகளாகவே பேணிப் பாதுகாக்கின்றனர் இந்த இலக்கியத் தம்பதியர்.

கவிதா ரத்னம், வித்யா ரத்னம், பாஷண கேசரி என்றெல்லாம் விருதுகள் பெற்றுள்ள ஸ்ரீமதி வாலம் எழுதியுள்ள கவிதைகளையெல்லாம் படித்து முடிக்கவே நமக்கு வாழ்நாள் போதாது. 47 வயதுக்குள் இவ்வளவு வியத்தகு சாதனைகள் புரிந்திருக்கிறார் இவர்.

'இலக்கிய எரிமலை' என்று இவரை யாரோ குறிப்பிட்டார்களாம். எரிமலை கூட அவ்வப்பொழுதுதான் வெடிக்கும். இவரோ, இடைவிடாது, அல்லும் பகலும் தெய்விக மணம் கமழும் கவிதைகளாகவே பொழிந்து தள்ளி வருகிறாரே? 'பக்தி இலக்கிய அடர்மழை' என்றே குறிப்பிடலாம் அல்லவா?

- பேட்டி: **ருக்மிணி பாலகிருஷ்ணன்**



☐ வியட்நாம் போர் நடக்கும்போது குண்டு விழுவது, ஓடுவது, விமானம் பறப்பது இவற்றைப் பதிவு செய்து இசைத் தட்டுகளாக விற்பனை செய்கிறார்கள். இந்த இசைத் தட்டுகள் அமெரிக்காவில் 10 லட்சத்துக்கும் அதிகமாக விற்பனையாகி இருக்கின்றன. போரில் அமெரிக்க மக்கள் வெறுப்பு கொள்ள உதவியிருக்கின்றன.

அட்லாஸ் -- 'பாலி'

☐ ''பூகோள ஆசிரியர் வீட்டில் திருடன் புகுந்து விட்டான். அங்கிருந்த பொருட்களை எல்லாம் திருடிக்கொண்டு புறப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, உறங்கிக்கொண்டிருந்த பூகோள ஆசிரியர் எழுந்திருந்து திருடனை விரட்டத் தொடங்கினார், விடா முயற்சியுடன் எதிர்த்திசையில். எதிர்ப்பட்ட அறிவாளி ஒருவர் கேட்டார்: ''ஏனய்யா, திருடனைப் பிடிக்க எதிர்த்திசையில் ஓடுகின்றாய்'' என்று. அதற்கு ஆசிரியர் கூறினார்: ''உலகம் உருண்டை தானே, திருடன் எப்படியும் அந்தப்புறம் வரத்தானே வேண்டும்?'' இப்படித்தான் அரசாங்க அலுவலகங்கள், தேசியமயமாக்கப்பட்ட அலுவலகங்கள் பணியாற்றுகின்றன. மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பூகோள ஆசிரியரைப் போன்றவர்களைக் கண்டித்து அறிவுரை கூறுகின்றார்கள்.''

திரு டி. எஸ். ஆதிமூலம் அவர்கள், 1967-ல் நடந்த நெல்லை தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசியது.

அனுப்பியவர் : ச. அரங்கராசன்.



அத்தியாயம் 27

புனர்ஜன்மம்

மதுரை. பத்மநாபன் தாம் ரிடையராவதற்குச் சில மாதங்கள் இருக்கையிலேயே லீவு நாட்கள் தம் கணக்கில் பாக்கி இருப்பதால் ஆபீஸுக்குப் போவதை நிறுத்திக் கொள்கிறார்.

அபயம் காலமானது முதல் அவருக்கு மன நிம்மதி இல்லை. அவள் நினைவும் கடைசிக் காலத்தில் அவள் அருகில் தாம் இல்லாத குறையும் அவர் நெஞ்சைக் குடைந்தெடுக்கின்றன. அவர் க்ஷேத்திராடனம் கிளம்புவதென்று தீர்மானிக்கிறார். மகள் கோமளா எஸ். எஸ். எல். சி. முடிக்க இன்னும் ஆறு மாதங்கள் பாக்கி இருக்கின்றன. பரீட்சை எழுதியானதும் புறப்பட்டு விட வேண்டியதுதான். அதற்குள் அவர் பயணத்துக்குத் தேவையானவற்றைக் கவனிக்கிறார்.

உத்தியோகத்திலிருந்து ரிடையரானதும் அவருக்கு மொத்தமாக ஒரு தொகை கிடைக்கிறது. அதையெல்லாம் ரொக்கமாக்கிக் கொள்கிறார். பூட்டிக் கிடக்கப் போகிற வீட்டுக்கு வாடகை கொடுத்துக் கொண்டிருப்பானேன் என்று சாமான்கள் பலவற்றை விற்று விடுகிறார்; விற்கக் கூடாத சில அத்தியாவசியப் பொருள்களை ஒரு பெரிய கள்ளிப் பெட்டி தயார் செய்து அதில் வைத்துப் பூட்டுகிறார். கள்ளிப் பெட்டியை ஒரு நண்பர் வீட்டில் போட்டு விட்டுப் போக அனுமதி கோரிப் பெறுகிறார். வீட்டைப் பத்மநாபன் காலி செய்யப் போகிறார் என்று தெரிந்ததும் கடன் கொடுத்தவர்கள் பயந்து போய் அவரை முற்றுகையிடுகின்றனர். வட்டியும் முதலுமாகக் கொடுத்துக் கணக்குத் தீர்த்த பிறகு கையிருப்பு கணிசமாகக் குறைந்து போயிருக்கக் காண்கிறார். எதிர்காலம் பற்றிய சிந்தனை இன்றி, இருப்பதை க்ஷேத்திராடனத்துக்குப் பயன்படுத்தி விடத் தீர்மானிக்கிறார். அருமை மகள் பரீட்சை எழுதி முடிக்கக் காத்திருக்கிறார்.

கல்யாணமாகி ரொம்பக் காலத்துக்குப் பிறகு பிறந்தவள் கோமளா. செல்லமாக வளர்ந்தவள். கடுசொல்லையே பெற்றோரிடம் கேட்டறியாத அவள் உள்ளம் தாய், மரணத் தறுவாயில் திட்டியதைப் பொறுக்க முடியாமல் இன்றளவும் துடித்துக் கொண்டிருக்கிறது. அடிக்கடி அந்த நாளை நினைத்துக் கொண்டு அழும் அவளுக்குத் தந்தை கூறும் ஒரே ஆறுதல் மொழி: ''கவலைப்படாதே! எல்லாம் நான் செய்த பாபம். க்ஷேத்திராடனம் போய் எல்லாப் பாபத்தையும் துடைத்து விட்டு வந்து விடலாம்!'' ஆறு வயது முதலே இதைக் கேட்டுக் கேட்டுப் பழகிய கோமளா, ஆறுதல் அடையாவிட்டாலும் ஸ்தல யாத்திரையை ஆர்வத்துடன் எதிர்பார்க்கத் தொடங்குகிறாள். அப்புறம் 'நாம் எங்கே போகப் போகிறோம்' என்று அலுத்துக் கொள்ளும் நிலைக்கும் வந்து விடுகிறாள். இப்படிப்பட்ட சமயத்தில் நிஜமாகவே தகப்பனார் க்ஷேத்திராடனம் போக ஏற்பாடுகளைக் கவனிப்பதைக் கண்டதும் கோமளாவின் மனம் குதூகலத்தால் ததும்பி நிற்கிறது.

சாருலதா

கி. ராஜேந்திரன்



பரீட்சை எப்படி எழுதினாய் என்று கூடப் பத்மநாபன் கேட்கவில்லை. புறப்படப் பறக்கிறார். அபயத்தின் மறைவுக்குப் பிறகு அவருக்கு எதிலுமே சிரத்தையோ பற்றுதலோ இல்லை. மதுரையிலிருந்து, அபயத்தின் வேதனைக் குரல் ஒலித்த அந்த வீட்டிலிருந்து கிளம்பித் துன்ப நினைவுகளுக்கு மாற்றுக் காணத்



துடிக்கிறார். காரியாலயத்துக்குப் போய் வந்து கொண்டிருந்த வரை அடங்கிக் கிடந்த ஆர்வம், வீட்டில் சும்மா இருக்கையில் கட்டுக்கடங்காமல் பெருகி அவரை ஆட்டிப் படைக்கிறது.

சிறிதும் பெரிதுமாகப் பலப் பல ஸ்தலங்களுக்குப் போகிறார்கள். ஆரம்பத்தில் ஊர் ஊராகப் போவது கோமளாவுக்கும் தம்பி குமரேசனுக்கும் வேடிக்கையாகவும் உற்சாகமாகவும் இருக்கிறது. மாதக்கணக்கில் சுற்றிய பிறகு சலிப்புத் தட்டுகிறது. 'எப்போ வீட்டுக்குப் போவோம்?' என்று கேட்கிறான் குமரேசன்.


வீடு என்று ஒன்றிருந்தால் அல்லவா பத்மநாபனுக்கு அந்த நினைவு வரும்? அவர்தாம் வீட்டையே காலி செய்து விட்டுக் கிளம்பியிருக்கிறாரே! பழனிக்குப் போனால், 'சுவாமிமலைக்குப் போக வேண்டாமா' என்று அங்கே சிலர் கேட்கிறார்கள். ஸ்ரீரங்கத்தில், 'திருவனந்தபுரம் பத்மநாப ஸ்வாமியைத் தரிசிக்க வேண்டும்' என்று சிலர் யோசனை சொல்கிறார்கள்.

'காஞ்சி காமாட்சியைக் கண் குளிரப் பார்த்த கண்கள் காசி விசாலாட்சியையும் கண்டு களிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே' என்று சிலர் ஆசையைத் தூண்டுகிறார்கள்.

இப்படிப் போகுமிடங்களிலெல்லாம் புதிது புதிதாக க்ஷேத்திர மகிமைகளைத் தெரிந்துகொண்டு அடுத்தது, அதற்கடுத்தது என்று பிரயாணத்தைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறார் பத்மநாபன்.

கிட்டத்தட்ட ஒரு வருஷ காலம் நிதானமாகப் பல ஸ்தலங்களுக்கும் போய்க் கையிலிருந்த பணமெல்லாம் அநேகமாகக் கரைந்துவிட்ட நிலையில் அவர்கள் காசிக்கு வந்து சேருகிறார்கள்.

அங்கேதான் கோமளாவின் வாழ்க்கையில் எதிர்பாராத ஒரு திருப்பம் ஏற்படுகிறது. கங்கையில் நீராடிப் பாபங்களைத் தொலைத்து விட்டுக் கரையேறிய மங்கக்காள் கலகலவென்ற சிரிப்பொலி கேட்டுத் திரும்புகிறார். தம்பி குமரேசன் நீரைக் கரங்களால் மோதி அடிக்கப் படித்துறையில் அமர்ந்திருந்த அக்கா கோமளா, அந்தத் தண்ணீர்த் தாக்குதலில் சிக்குண்டு சிரித்துக் கொண்டிருக்கிறாள். நனைந்த உடை, நாணமற்ற உவகைச் சிரிப்பு, நளினமான உடல். உல்லாசத்தைத் தவிர வேறு எதையும் அந்தச் சமயத்தில் உணரும் சக்தியற்ற ஓர் எழிலுருவம். பால் வடியும் வதனம், பருவப் பூரிப்பு, நதிப் பிரவாகத்தை அளையும் பட்டுப் பாதங்கள். அவள் மேனியில் முத்து முத்தாக நின்ற நீர்த் துளிகள், அவள் சிரித்தபோது முத்து முத்தாகப் பளிச்சிட்ட பற்கள், அள்ளியெடுத்த நன்முத்துக்களைச் சிதற விட்டாற் போன்ற அவள் உற்சாகம் எல்லாம் சேர்ந்து மங்கக்காளைக் கிறங்க வைக்



உங்கள் குழந்தையின் வளர்ச்சிவேகத்திலே பரிபூரணமான திருப்தி காண்கிறீர்களா?



சுயேச்சையான டாக்டர்கள் தரும் இந்த அறிக்கையைப் படியுங்கள்

'எல்லாக் குழந்தைகளுக்கும் லீவர்ஸ் குழந்தை உணவு தரப்பட்டது...நம்மவர் குழந்தைகள், ஐரோப்பிய, அமெரிக்கக் குழந்தை-களுக்கு ஈடான வளர்ச்சியை நிரூபித்தன... 5-6 மாதங்களிலே எடை இரு மடங்குக்கு மேலாகியது. ஒரு வயதிற்குள் மும் மடங்கை மிஞ்சிவிட்டது.

பாரத நாட்டுக் குழந்தைகளுக்-கென்றே ஆக்கம்பெற்றது லீவர்ஸ் குழந்தை உணவு.

*அறிக்கையின் ஒரு பகுதியே இது. முழு அறிக்கையின் இலவசப் பிரதிக்கு எழுதுங்கள் : நியூ ஃபுட்ஸ், இந்துஸ்தான் லீவர் லிமிடெட்., போஸ்ட் பாக்ஸ் 995, பம்பாய்-1.

லீவர்ஸ் குழந்தை உணவு

தலைசிறந்த டாக்டர்களால் தகுதி நிரூபணம் பெற்ற பாலுணவு

லின்டாஸ்-LF,14-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

கின்றன. அவர் மனம் நழுவுகிறது. அந்தத் தடுமாற்றத்தில் காலும் வழுக்கி விடுகிறது. பொதேலென்று அவர் கங்கையில் விழுகிறார். கரையோரம் ஆழம் அதிகமில்லைதான். ஆனால் கோமளா பருமனான சரீரத்துடன் வயதான ஒருவர் விழுந்ததைப் பார்த்ததும் சற்றும் யோசியாமல் ஆபத்துக்கு உதவக் கை நீட்டுகிறாள். கண்ணால் தீண்டிய அவளை அதற்குள் மெய்யாலும் தீண்டும் வாய்ப்புக் கிட்டும் என்று மன்சுக்லால் எதிர் பார்க்கவேயில்லை. உதவி தேவையில்லை என்ற உண்மையை மறைத்து அவர் அவள் கரங்களைப் பூப்போலக் கருதிப் பற்றிக் கரையேறுகிறார். குளிரால் அவர் நடுங்குவதாக மற்றவர் நினைக்கையில் அவர் மெய் சிலிர்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆசை அவர் மனத்தில் விசுவரூபமெடுக்கிறது. 'இப்போது உள்ளது போல் இந்தப் பெண்ணை எப்போதுமே தம் பக்கத்தில் வைத்துக் கொள்ள முடியுமானால்?...' நன்றி கூறும் அவர், பேச்சை வளர்க்கிறார். பத்மநாபனிடம் வலியச் சென்று அறிமுகம் செய்து கொண்டு அன்பாகப் பழகுகிறார். பேச்சினிடையே பத்மநாபன் கையில் இருந்த நூற்றைம்பது ரூபாய் தவிர அவருக்கு வேறு சொத்து ஏதுமில்லை என்று தெரிந்து கொள்கிறார். இதனால் அவருக்கு நம்பிக்கை பிறக்கிறது. இரண்டு நாட்களில் காசியை விட்டுக் கிளம்பிவிட நினைத்திருந்த பத்மநாபனை நாலு நாட்கள் தாமதிக்கச் செய்கிறார் மன்சுக்லால். விருந்து வைக்கிறார்; கோமளாவுக்கு வெகுமதிகளை வாங்கிக் கொடுக்கிறார். 'என் உயிரைக் காத்தவள்' என்று சொல்லி. பிறகு வெட்கத்தை விட்டுத் தம் விருப்பத்தையும் தெரியப்படுத்தி விடுகிறார்.

பத்மநாபனின் முகத்தில் புயல் வீசுகிறது. மின்னல் பார்வை, பெருமூச்சு, துடிக்கும் கன்னங்கள், நெரிந்த புருவங்கள். இடிமுழக்கக் குரலில், "என்ன தைரியம் உனக்கு?" என்று கேட்கிறார்

"கல்யாண வயதில் பெண்ணை வைத்துக் கொண்டு கையில் நூற்றைம்பது ரூபாய் ரொக்கத்தைத் தவிர வேறு ஏதும் இல்லாமல் இருக்கிறாயே, அந்தத் தைரியத்தை விடவா ?" என்று திருப்பிக் கேட்கிறார் மன்சுக்லால். "கல்யாணத்தை நடத்தக் கடன் வாங்குவாயா ? கிழவனான உன்னை நம்பி எவன் கடன் கொடுப்பான் ?"

"அதற்காக? பூதாகாரமான உன் தோற்றத்தை நீயே பார்த்துக் கொள் ! கோமளாவுக்கு ஏற்றவன்தானா நீ ?"

"பருமனாயிருந்தால் என்ன? நான் ஐந்து லட்சத்துக்கு அதிபதி" என்கிறார் மன்சுக்லால் அமைதியாக.

" நான் ஒன்றும் அப்படி மானங்கெட்ட நிலைக்கு வந்து விடவில்லை" என்று சீறுகிறார் பத்மநாபன்.

" எனக்கு நெருங்கிய பந்துக்கள் யாரும் கிடையாது. என் சொத்து முழுவதையும் கோமளாவுக்கே எழுதி வைத்து விடுகிறேன்" என்று ஆசை காட்டுகிறார் மன்சுக்லால்.

"கிட்டத்தட்ட என் வயது இருக்குமே உனக்கு ?" என்று பரிகசிக்கிறார் பத்மநாபன்.

"அதனால்தான் சிசுருஷை செய்ய ஒரு மனைவி வேண்டும் என்று நினைக்கிறேன்" என்கிறார் மற்றவர் விட்டுக் கொடுக்காமல்.

"பேச்சை வளர்க்காதே. இது ஒரு நாளும் நடக்காது" என்று பத்மநாபன் வைத்த முற்றுப்புள்ளியை அழித்து விட்டு, "எதற்கும் உன் மகளையும், கேட்டுக் கொண்டு வந்து சொல்லு" என்று 'தொடரும்' போடுகிறார் மன்சுக்லால்.

'இதில் கேட்பதற்கு என்ன இருக்கிறது' என்று நினைத்தபடியே ஆனால் அவர் தொந்தரவு செய்ததன் காரணமாகக் கோமளாவிடம் செல்கிறார் பத்மநாபன்.

"நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன், அப்பா!" என்கிறாள் பக்கத்து அறையில் இருக்கும் அவள்.

"பைத்தியம் ஏதோ உளறுகிறது ; நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே!" என்கிறார் தந்தை.

"இல்லை, அப்பா ! அவர் உளறவில்லை ; நல்லெண்ணத்துடன்தான், பேசுகிறார். நான் அவரைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்" என்கிறாள் கோமளா.

வானமே இடிந்து விழுந்திருந்தால் கூட அத்தனை அதிர்ச்சி ஏற்பட்டிராது பத்மநாபனுக்கு. "அசடு ! என்ன பிதற்றுகிறாய்?" என்று கோபித்துக் கொள்கிறார். கதைகளில் மகளின் விருப்பத்துக்கு விரோதமாக அவளை இரண்டாந்தாரமாகத் தள்ளிவிட்ட தந்தையைப் பற்றி அவர் படித்ததுண்டு. இங்கே அதற்கு நேர்விரோதமாக அல்லவா இருக்கிறது?

"பிதற்றலா ? பாங்குப் பாஸ் புத்தகத்தை என்னிடம் அவர் காட்டினார். நானே என் கண்ணால் பார்த்தேன். இரண்டு லட்சத்து எண்பதாயிரம் கையிருப்பு என்று போட்டிருக்கிறது" என்கிறாள் கோமளா.

பத்மநாபனுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக இருக்கிறது. காதல் குடிபுக வேண்டிய கோமளமான இதயத்தினைப் பணத்தாசை ஆக்கிரமிப்பதென்பதும் உண்டா? கேள்விப்பட்டதே இல்லையே! வாயடைத்துப் போகிறார் அவர்.

கோமளா போட்ட கணக்கு அவருக்குத் தெரியாததால் அதன் விடையும் அவருக்குப் புரியவில்லை. தாயார் காலமான நாள் முதலே பிரசவம் என்ற நினைவே அவளைக் கதி கலங்க வைக்கிறது. என்றைக்கு எவனுக்குக் கழுத்தை நீட்டி இந்தச் சரீரத்தை அடிமைப்படுத்தப் போகிறேமோ என்ற பீதி வயதாக ஆக வளர்ந்து கொண்டே போகிறது. மன்சுக்லாலை மணந்து கொள்வதன் மூலம் இந்தப் பிரச்னைக்குச் சுலபமான விடை காணலாம் என்று அவளுக்குத் தோன்றுகிறது. அவருடைய அடிமையாகத் தான் இருப்பதற்குப் பதில் தன்னுடைய அடிமையாக அவர் விளங்குவார் என்பது புரிகிறது. மேலும் பெண்ணாகப் பிறந்தவள் என்றாவது ஒருநாள் எவனுக்காவது வாழ்க்கைப்பட்டுத்தானே ஆக வேண்டும்? சீதனம் ஏதும் இல்லாத தன்னை எந்த ராஜகுமாரன் வந்து பாணிக் கிரஹணம் செய்து கொள்ளப் போகிறான்? வறுமைப் பேயையும் சேர்த்துக் கல்யாணம் செய்துகொண்டதாகத்தான் தன் கதை முடியும். குழந்தைகள் பிறப்பதையும் தவிர்க்க முடியாது. அதற்கு இது எவ்வளவோ தேவலாம்; தம்பியையும் படிக்க வைக்கலாம்; அப்பாவுக்கும் கவலையில்லாத நிம்மதியான வாழ்க்கை...

மகள் அழுத்தம் திருத்தமாக இந்தத் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்துவிட்ட பிறகு, பத்மநாபனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'எல்லாம் தெய்வ சங்கல்பம்; இல்லாவிட்டால் க்ஷேத்திராடனம் செய்து கொண்டிருக்கும்போது இப்படி ஒரு சந்திப்பு நிகழ்வானேன்?' என்று எண்ணித் தம்மைத் தாமே சமாதானப் படுத்திக் கொள்கிறார்.


வாரணாசியிலேயே கல்யாணத்தை முடித்துக் கொண்டு அவர்கள் அலகாபாத்துக்கு வந்து சேருகிறார்கள். தானாகவே விரும்பி மணந்துகொண்ட கணவனுக்கு வஞ்சனையில்லாமல் பணிவிடைகள் செய்கிறாள் கோமளா. மன்சுக்லாலின் மனம் பேரானந்தத்தில் திளைக்கிறது. கண்ணுக்கினிய மனைவி, அவளது மனப்பூர்வமான பணிவிடை, மதுரமான சங்கீதம், ருசியான உணவு எல்லாவற்றையும் ஐந்து வருஷங்கள் ஆனந்தமாக அனுபவிக்கிறார். ஏற்கெனவே பருமனான சரீரம் மேலும் பூரிக்கிறது. அத்தனை பெரிய பரப்புள்ள உடலின் எல்லாப் பாகங்களுக்கும் ரத்தத்தைப் பாய்ச்ச அவரது இருதயம் அதிகமாகச் சிரமப்பட்டு உழைக்கிறது. கடைசியில் ஒருநாள் வேலைச் சுமை தாங்க முடியாமல், பொக்கென்று 'ஸ்ட்ரைக்' செய்து விடுகிறது.

மன்சுக்லாலின் மரணத்துக்குப் பிறகு எதிர் காலம் பற்றித் தந்தையும் மகளும் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கவில்லை. என்னென்ன செய்ய வேண்டும் என்று மகள் தந்தைக்கு உத்தரவிடுகிறாள். மன்சுக்லால் வட்டிக்குப் பணம் கொடுத்துப் பணக்காரரானவர். அவருடைய வீட்டையும் பலசரக்குக் கடை ஒன்றையும் விற்கிறார்கள். அதுடன் பாங்கில் இருந்த பணத்தையும் சேர்த்துப் பார்த்தபோது நாலு லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. வசூலாக வேண்டிய கடன் பாக்கி பத்தாயிரம் இருந்ததையும் பொருட்படுத்தாமல் மூவரும் ரயிலேறிச் சென்னைக்கு வந்து சேருகிறார்கள்.

குடும்பத் தலைவியாகிவிட்ட கோமளாவும் அவள் தம்பியும் தந்தையும் சென்னையில் புது வாழ்வு தொடங்குகிறார்கள். கடந்த காலத்தை யெல்லாம் அடியோடு மறந்துவிடத் தீர்மானிக்கிறாள் கோமளா. அதற்காக வர்த்தகத் துறையில் ஈடுபட நினைக்கிறாள். முழுமூச்சுடன் வியாபாரத்தில் ஈடுபட்டு வெற்றி காண முயன்றால் பழைய நினைவுகள் எழாது.

புனர்ஜன்மம் எடுத்தது போன்ற இந்த வாழ்வில் நினைவின் நிழல் நீளக் கூடாது என்பதற்காக மட்டுமின்றி வியாபார நோக்கில் பார்க்கும்போது கூடப் பெயர்மாற்றம் செய்துகொள்வது நல்லதென்று தோன்றுகிறது. அதன்படி குமரேசன் குணசீலன் ஆகிறான். பத்மநாபன் பெருமாளாகிறார். கோமளாவின் பெயர் சாருலதா என்று மாறுவதுடன் அவள் தோற்றமே பெயருக்கேற்ப 'மாடர்'னாக மாறுகிறது. தான் ஒரு விதவை என்பதை இருட்டடிப்புச் செய்துவிட வேண்டும், தன் அழகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டும், பழகும் விதத்தால் 'கிளாமர் கேர்ல்' என்று பட்டப் பெயர் பெற வேண்டும்— இவற்றைச் செய்தால் வர்த்தகத் துறை வெற்றிகள் சுலபமாகும் என்பதை எளிதில் புரிந்து கொள்ளுகிறாள் சாருலதா. பணம் தரும் பகட்டும் தன்னம்பிக்கையும் சேர்ந்து கொள்ளுகின்

நீங்கள் எங்கிருந்தாலும் நம்பகமான மோட்டார் உறுப்புகளை டிவிஎஸ்ஸின் 16 ஆபீஸ்கள், 1000க்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் மூலமாகப் பெறலாம்



இந்தியாவில் நாமுள்ள மோட்டார் உறுப்புகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்கள் தங்கள் சாமான்களை டிவிஎஸ் மூலம் விநியோகிப்பதற்கு இதுவே காரணம்.

தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களிலும் பரவலாக 16 ஆபீஸ்களும், 1000க்கு மேற்பட்ட விற்பனையாளர்களும் சிறந்த முறையில் எல்லா இடங்களிலும் மோட்டார் உறுப்புகள் கிடைக்கும்படி விநியோகிக்கின்றனர்.

முதல்தரமான மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் நியாயமான விலைக்குக் கிடைக்கும்.

இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மோட்டார் உறுப்புகள் எப்பொழுதும் கைவசம் உள்ளன.

டிவிஎஸ் விநியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் உறுதியானவை, தரமானவை, நம்பிக்கையானவை. தடங்கல் இல்லாமல் கிடைக்கும் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

டி.வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்-எர்ணாகுளம்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டினம்

மதராஸ் ஆட்டோ சர்விஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ் - பங்களூர் - விஜயவாடா

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அக்ஸெஸரீஸ் லிமிடெட், மதராஸ்

TVS 5279

றனை. நானாவட்டத்தில் பல தொழில்களையும் தொடங்குகிறாள். பகுத்தறிவு, ஆற்றல், அதிருஷ்டம், அனுபவம், விடாமுயற்சி, ஆர்வம் எல்லாம் கூடி வந்ததால் மன்கக்லாலின் நாலு லட்சம் இன்று ஐந்து கோடி மதிப்புள்ள சாருலதா எண்டர்பிரைஸஸ்ஸாக விரிவடைந்திருக்கிறது.

* * *

வேகம் ஆற்றலைத் திரும்பப் பெற்றதும், ''சாரு! இது என்ன வேஷம்?'' என்று கேட்டான் வேணுகோபால்.

சாருலதா அமைதியாகச் சிரித்தாள். ''இதுதான் சாருலதாவின் உண்மையான கோலம்; இதுவரை நீங்கள் பார்த்துப் பேசிப் பழகி வந்தீர்களே, அந்தச் சாருலதாதான் வேஷமணிந்து எல்லாரையும் ஏமாற்றிக் கொண்டிருந்தவள்!''

''சாரு! உனக்கா இந்தக் கதி?'' என்று கண் கலங்கினான் அவன்.

''ஏன்? நம்புவது கஷ்டமாக இருக்கிறதா? அல்லது பார்ப்பதற்கு வெறுப்பாயிருக்கிறதா?'' இப்படி அவள் கேட்ட போது குரலில் ஏளனம் தொனித்தது.

'வெறுப்பளிக்கிறதா? இந்தத் தோற்றத்தை எனக்குப் பிடிக்கவில்லையா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு சாருலதாவை உன்னிப்பாய் நோக்கினான் வேணுகோபால்.

வெள்ளை வெளேரென்று ஒரு புடவை. ஒரு சின்ன எம்ப்ராய்டரி வேலைப்பாடு கூட இல்லாத அது, அவள் உடலைச் சுற்றி வளைத்ததுடன் தலையையும் முக்காடிட்டு மறைத்தது. தலைப்பை முன்புறம் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தாள் அவள். முழங்கைவரை நீண்ட கையுடன், வெள்ளை ரவிக்கை. 'தூய்மையானது என்று கருதப்படும் வெள்ளை நிறத்துக்கு இத்தனை கொடுமை எங்கிருந்து வந்து சேர்ந்தது?'

சூன்யமான கழுத்து, சூனியமான காதுகள், கரங்கள்; பாழும் நெற்றி, நீர் படர்ந்த கண்கள். மேக்-அப் இல்லாத முகத்தில் கண்களின் ஓரத்தில் தெரிந்த சில சுருக்கங்கள், முப்பத்திரண்டு வயதுக்குக் குறைவில்லை என்பதை எடுத்துக் காட்டின. வேலைச் சுமையாலும் மனக் கவலையாலும் ஏற்பட்ட சில வெள்ளி இழைகள், 'ஹேர் டை'யினால் கருமையாக்கப்படாமல் எட்டிப் பார்த்தன.

இப்படிப்பட்ட ஒரு சோகச் சித்திரமாக அவள் காட்சி அளித்தாலும் அதிலும் அலாதியான, அமைதியான ஓர் அழகு இல்லாமல் போகவில்லை. 'மைக்கேலான் ஜெலோ வடித்த பளிங்குச் சிலை போல' என்று எண்ணினான் வேணுகோபால். 'முன்பு நான் பார்த்திருக்கும் சாருலதாவின் அழகு நுங்கும் நுரையுமாகப் புது வெள்ளத்துடன் சுழித்தோடும் ஆற்றின் அகங்கார அழகு! இவளுடைய இந்த அழகு இரவு நேரத்தில் தோற்றம் அளிக்கும் அல்லிக் குளத்தின் அடக்கமான அழகு! இதை அழகு இல்லை என்று சொல்லிவிட முடியுமா?'

சாருலதா வேணுகோபாலுக்கு எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள். ''இந்தக் கோலத்தில் என்னைப் பார்த்தபடியே நான் சொல்லப் போகும் என் கதையைக் கேட்க வேண்டும் நீங்கள். அவ்விதம் கேட்டபிறகு உங்களுக்கு என்மீதுள்ள காதல், தப்பித்தோம், பிழைத்தோம் என்று தலை தெறிக்க ஓடி விடும் பாருங்கள்!'' என்றாள்.

வேணுகோபால் பரிவும் அநுதாபமும் மிக அவள் கூறிய கதை முழுவதையும் கேட்டான். (தொடரும்)

கணவன் : பையனை எங்கே காணோம்...

மனைவி : நான்தான் அவனைப் பொருட்காட்சி ஆபீசுக்குப் போய் அப்பா, அம்மாவைக் கூட்டத்திலே தவற விட்டு விட்டேன்னு சொல்லச் சொல்லி இருக்கிறேன்.

கணவன் : எதற்காக?

மனைவி : பின்னே நாம் எக்ஸிபிஷனுக்கு வந்திருப்பது நாலு பேருக்குத் தெரிய வேண்டாமா?





இன்னொரு மகனா?
போதும் ஐயா

மூணுக்குப் பிறகு
போதும் ஐயா



davp 69/470



பாராட்டு விழா

சரசன்

(பிரபல நகைச்சுவை எழுத்தாளர் 'பூ' அவர்கள் எழுதித் தயாரித்த "பகலில் பங்களூர்" என்ற நகைச்சுவை நாடகத்தின் ஐம்பதாவது தினத்தை முன்னிட்டு, அந்நாடக ஆசிரியருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தி அவரைக் கௌரவிக்க, - அரோகரா அமெச்சூர் நாடக மன்றத்தின் நிர்வாகிகள் ஒரு கூட்டம் நடத்துகிறார்கள். அந்த விழாவுக்குத் தலைமை தாங்க யாரை அழைப்பது என்பது குறித்து பூர்வாங்க ஆலோசனை நடக்கிறது.)

செயலாளர் சங்கரன்: இந்த விழா பிரமாதமாய் அமைய வேண்டுமானால், ஒரு பிரபல சினிமா நடிகரைத் தலைவராகப் போட வேண்டும். தலைவர் சார், என்ன சொல்கிறீர்?

தலைவர் தர்மப் பிரபு: நானும் அப்படித்தான் நினைக்கிறேன். தோழர் திலகம் எஸ். பி. எஸ்.ஸை அழைக்கலாமே!

செயலாளர்: நானும் அவரைத்தான் குறி வைத்தேன்.

பொக்கிஷதார் பூதலிங்கம்: வைத்த குறி தப்பி விட்டதோ?

செய: அது ஒன்றுமில்லை. அவருக்கு ஒரு மாதத்துக்கு வெளியூர் ஷூட்டிங்கிருக்கிறதே.

பொக்கிஷதார் பூதலிங்கம்: எனக்கு என்ன தோன்றுகிறது என்றால்....

சுப்புடு: தெரியுமே, நீ என்ன சொல்லப் போகிறாய் என்று! யாரும் தலைமை வேண்டாம். தலைமைக்கு ஆளைக் கொண்டு வந்தால் அநாவசியமான செலவு என்று ஒரு குரல் அழப் போகிறாய்!

நித்தியானந்தம்: அட, பூதம்! நீ ஒரு கஞ்சன் ஆச்சே!

தலைவர்: நம் பூதலிங்கம் ஒன்றும் கஞ்சன் இல்லை. சட்டியில் இருந்தால் அல்லவா அகப்பையிலே வரும்? நம் மன்றத்தின் செல்வ நிலை குறித்து அப்படிச் சொல்கிறார்.

பொக்கிஷ: நன்றாய்ச் சொன்னீர்கள் பிரசிடென்ட் சார்! நமது பாங்குக் கணக்கில் இருப்பு என்ன தெரியுமோ?

செய: ஏன் தெரியாது? ஐந்து ரூபாய் பதினேழு காசுகள்! அது போகட்டும். நமது 'பூ' அவர்கள் தம் நாடகத்தின் மூலம் கொஞ்சம் வசூல் செய்து நமது மன்றத்துக்கு உதவியிருக்கிறார். ஆகையால், அவரைப் பாராட்டிக் கௌரவிக்க இது ஓர் அரிய வாய்ப்பு.

தலைவர்: உண்மை. அப்போது இந்த விழாவுக்குத் தலைமை வகிக்க ஏன் நமது முதலமைச்சரை அழைக்கக் கூடாது?

நித்தியானந்தம்: அது நடக்காத காரியம் தலைவர் சார்!

தலைவர்: ஏன் அப்படிச் சொல்கிறாய் நித்யா? அவர் ஒரு சிறந்த ரசிகர் ஆயிற்றே! இம்மாதிரி விழாக்கள் அவருக்கு மிகவும் பிடிக்குமே!

நித்தியா: அது உண்மைதான் சார்! ஆனால் நமது 'பூ' அவர்கள் தம் நாடகம் ஒன்றில் முதலமைச்சரின் கட்சியைக் கேலி செய்திருக்கிறார். அதற்காக அந்த நாடகத்துக்குத் தடை உத்தரவுகூடப் போட முதலமைச்சர் எண்ணியிருந்தாராம். அதனால் முதல் அமைச்சருக்கு நம் 'பூ'வின் மீது ஆத்திரம் இருக்கிறதாம். நாம் அழைத்து விடலாம். அமைச்சரும் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் அவர் ஏதாவது நம் 'பூ'வைத் தாக்கிப் பேசிவிட்டால்? விரசமாயிருக்குமே!

குருநாதன்: அப்போது ஒன்று செய்வோம். நமது கவர்னரையே அழைக்கலாமே! நான் ஏற்பாடு செய்கிறேன். கவர்னருடைய பி. ஏ. எனக்கு மிகவும் வேண்டியவர்.

தலைவர்: கவர்னரை அழைப்பது நமக்கெல்லாம் பெருமை தரக் கூடியதுதான். சந்தேகமில்லை.

பாஸ்கரன்: அதைவிடப் பெருமை ஒன்று உண்டு சார்.

தலைவர்: என்ன அது பாஸ்கர்!

பாஸ்கரன்: கவர்னர் தலைமை தாங்க ஒப்புக் கொள்வது....!

தலைவர்: நம் குருநாதன் முயற்சியினால் கவர்னர் ஒப்புக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனால் ஏற்படக் கூடிய செலவுக்குப் பணம்?

சேகர்: என்ன செலவு? கவர்னர் தான் காரில் வரப் போகிறார். நமக்கு டாக்ஸி செலவுகூட மிச்சம்!

செய: அது சரி! கவர்னர் வந்தால் நான்கு போலீஸ்காரர்கள் வருவார்கள். அவர்களை வெறுங் கையுடன் அனுப்பலாமா? அது மரியாதையாகுமா?

தலைவர்: அது மட்டுமா? கவர்னருக்கு ஒரு ரோஜாப்பூ மாலை போடலாமா? ஒரு ஜரிகை மாலை வேண்டாமா?

பூதலிங்கம்: கவர்னருக்கு மட்டும் ஜரிகை மாலை போட்டால் போதுமா? நமது 'பூ' அவர்களுக்கும் ஒன்று வேண்டாமா? ஒரே செலவு, இப்பொழுதே பாராட்டைக் காட்டலாமா?

விட்டல் ராவ் (மெதுவாய்): டேய் பூதலிங்கம்! நம் தலைவர் இருபத்தைந்து ரூபாய் நன்கொடை தருவதாகச் சொன்னாரே, கொடுத்து

விட்டாரா ? அதை வசூலிக்க வேண்டியது உன் பொறுப்பல்லவா ? என்ன பொக்கிஷதார் நீ ?

சீனு: கொண்டு வாருங்கள், ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம்? நம் பொக்கிஷதார் மீது !

பானு: அட! நீ ஒன்று! நம்பிக்கையில்லாத் தீர்மானம் பெரிய இடத்திலே பெரியவர்கள் செய்யும் காரியம். நமக்கு எதற்கு?

பூதலிங்கம் (மெதுவாய்): பேசாமலிரு. ஏதோ தலைவர் என்று கௌரவமாய் இருக்கிறார் மனிதர். நாம் நன்கொடையைப் பற்றிக் கேட்டால் உடனே அவர் ராஜிநாமாச் செய்து விடுவார். அந்த இடத்துக்கு மறு நபரைத் தேடிப் பிடிப்பது அத்தனை சுலபமானதல்ல.

தலைவர்: என்ன ஏதோ முணுமுணுக்கிறீர்கள்? சிரிக்கிறீர்கள் ?

பூதலிங்கம்: ஒன்றுமில்லை சார்! வந்து.... கவர்னர் வரவழைக்கப்பட்டால், அதனால் ஏற்படக்கூடிய செலவை யார் ஏற்பது? முதலில் அதை முடிவு செய்யுங்கள். நம் பொருளாதார நிலையை நான் சொல்லி விட்டேன்.

விட்டல்: எல்லோரும் சற்று இருங்கள். ஒரு சுவையான செய்தியைப் படிக்கிறேன்.

(படிக்கிறான்)

"நமது கவர்னர் உடல்நலமின்மையினால், ஒரு மாதத்துக்குத் தம் அலுவல்களையெல்லாம் ரத்து செய்துவிட்டார்."

பூதலிங்கம்: அப்பாடா ! ஒரு கவலை விட்டது. சரி ! அடுத்தபடி வேறு யார் அழைக்கப்படலாம் ?

செயலாளர்: ஆ ! எனக்கு ஓர் அபாரமான யோசனை தோன்றுகிறது.

தலைவர்: யாரை அழைக்கலாம்?

செய : சங்கர் மோட்டார்ஸ் அதிபர் சாரங்கனை அழைக்கலாம். ஏதாவது நன்கொடை கிடைக்கும். அவர் நல்ல தாராள மனமுடையவர். அள்ளிக் கொடுக்கக் கூடியவர். பெரிய கொடை வள்ளல் !

பூதலிங்கம்: அட, நீ ஒன்று ! அவர் தம் மனைவியைப் பறி கொடுத்து இன்னும் பதினைந்து நாட்கள் ஆகவில்லை. மனிதர் துக்கத்திலேயே இருக்கிறார். சரி. கப்புணி, நீ என்ன சொல்கிறாய் ?

கப்புணி: உங்களுக்குக் கவலை வேண்டாம். நான் ஏற்பாடு செய்கிறேன். ஒரு நல்ல நபரை ?

தலைவர்: யாரை ?

கப்புணி: 'சொல்லின் செல்வர்' சீதாபதியை அழைத்து வருகிறேன். நகைச்சுவையுடன் பேசி நம்மையெல்லாம் மகிழ்விப்பார். பொருத்தமான ஆசாமி அவர் !

தலைவர்: கப்புணி, உனக்கு அவரைத் தெரிந்திருக்கலாம். ஆனால் அவரைப் பற்றித் தெரிந்திருக்காது.

கப்புணி: என்ன எனக்குத் தெரியாது என்கிறீர்கள் சார்?

தலைவர்: அவர் எந்தக் கூட்டத்துக்கும் சும்மா வருவது கிடையாது. ஐம்பது ரூபாயாவது கொடுத்தாக வேண்டும் என்று ஒரு நிபந்தனை போடுகிறார். இந்த விஷயத்தில் மிகவும் கண்டிப்புக்காரராம்!

கப்புணி: உமக்கேன் அந்தக் கவலை? நான் பைசா செலவில்லாமல் அவரைப் புக் செய்து விடுகிறேன். என்ன தருகிறீர்?

தலைவர்: நமது பொக்கிஷதாரிடம் கூறி உனது ஆறு மாதச் சந்தா பாக்கியை வஜா செய்து விடுகிறேன், போதுமா?

நாகபூஷணம்: வஜா கப்புணிக்கு மட்டும் தானா சார்? எனக்கு இல்லையா?

செயலாளர்: நீ என்ன செய்தாய்?

நாகபூஷணம்: நமது மன்றத்தின் கொட்டகையில் அன்று அடுத்த வீட்டுப் பால்காரர் தம் ஒன்பது எருமைகளையும் கட்டிவிட்டாரே, அப்போது நான் அவருடன் சண்டை போட்டு எருமைகளை அப்புறப்படுத்தவில்லையா?

தலைவர்: சரி! வஜா செய்யப்பட்டுவிட்டது. இன்னும் யார் வஜா கோருகிறீர்கள்? சீக்கிரம் உம்!

பூதலிங்கம்: இப்படி ஒவ்வொருவருக்கும் வஜா செய்து கொண்டே போனால் பொக்கிஷதார் என்ற பதவியையும் வஜா செய்துவிடலாமே! (நகைப்பு)

தலைவர்: போதும் நகைச்சுவை. விஷயத்துக்கு வாருங்கள். நமது விழாவுக்குச் 'சொல்லின் செல்வர்' சீதாபதியைத் தலைமை தாங்க அழைத்து வரும் பொறுப்பு நம் கப்புணியினுடையது. என்னப்பா கப்புணி?

கப்புணி: ஓ. கே.!

காட்சி 2

(சொல்லின் செல்வரின் வீடு.)

கப்புணி: வணக்கம் சார்!

சொ. செ.: வாருங்கள் கப்புணி ஐயா! சுகந்தானே?

கப்புணி: சுகந்தான். ஒரு வேண்டுகோள். நமது நாடக மன்றத்தின் சார்பில் நகைச்சுவையாளர் 'பூ' அவர்களைப் பாராட்ட ஒரு விழா நடத்தத் தீர்மானித்திருக்கிறோம்.

சொ. செ.: மகிழ்ச்சி.

கப்புணி: அந்த விழாவுக்குத் தாங்கள் தலைமை தாங்கி நடத்தித் தரவேண்டும்.

சொ. செ.: தேதி?

கப்புணி: இம்மாதம் பதினைந்தாம் தேதி

சொ. செ.: ஒரு விஷயம். இம்மாதிரிக் கூட்டங்களுக்கு நான் வருவதானால் ஒரு நிபந்தனை உண்டு.

கப்புணி: எனக்குத் தெரியும் சார்! ஐம்பது தானே? சம்மதம்.

சொ. செ.: ஏது? தெரிந்து கொண்டீர்களே! சரி! நான் சம்மதிக்கிறேன்.

காட்சி 3

[நகைச்சுவையாளர் 'பூ' அவர்களுக்குப் பாராட்டு விழா கோலாகலத்துடன் 'சொல்லின் செல்வர்' சீதாபதி அவர்களுடைய தலைமையில் இனிது நடந்தேறுகிறது.]

தலைவர்: ஆகா! என்ன அழகாகப் பேசினார் சொல்லின் செல்வர்!

செயலாளர்: நமது 'பூ' அவர்களை குலுங்கக் குலுங்கச் சிரித்து விட்டாரே!

விட்டல் ராவ்: நமது விழா இத்தனை சிறப்புடன் நடக்கக் காரணமாயிருந்த நமது கப்புணிக்குத்தான் நன்றி கூறவேண்டும்.

(அச்சமயம் கப்புணியிடம் யாரோ ஒருவர் ஐம்பது ரூபாய் பணத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறார்.)



நியூட்ரின்
வழங்கும்
4
புதிய விருந்துகள்
லாக்டோ நாவல்டீஸ் — பாலும் மால்டும் தேனும் நிறைந்த புதுமைப் படைப்பு
ஆரஞ்சு காண்டீஸ் — கதிரவன் கொஞ்சிக் கனியவைத்த ஆரஞ்சுச் சாற்றின் ருசி.
பைனாப்பிள் டா:ஃபி ரோல்ஸ் — கனியின் மணமும் குணமும் கூடிக் கமழ்ந்திடும் இனியதொரு மிட்டாய்.
கோகோனட் பான் பான் — பிரசித்திபெற்ற எமது லாக்டோ பான் பான் மிட்டாய்க்கு இனியதொரு மாற்று இது.
ஆரஞ்சு காண்டீஸ்
கோகோனட் பான் பான்ஸ்
பைனாப்பிள் டா:ஃபி ரோல்ஸ்
லாக்டோ நாவல்டீஸ்
nutrine
NCMSTAM
தின்னத் தின்ன, திகட்டாத மிட்டாய்
நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட், பலமனேர் சாலை, சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்).

தலைவர்: இது என்ன ரூபாய்?

கப்புணி: பிறகு சொல்கிறேன்.

செயலாளர்: கப்புணி! அதோ சொல்லின் செல்வர் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார், உன்னைக் கூப்பிடுகிறார் பார்.

கப்புணி (சொல்லின் செல்வரிடம் சென்று) சார்! மிகவும் நன்றி. நீங்கள் இவ்வளவு தூரம் சிரமத்தைப் பாராமல் வந்து எங்கள் விழாவைச் சிறப்பாக நடத்திக் கொடுத்ததற்காக நான் தனிப்பட்ட முறையில் நன்றி செலுத்துகிறேன்.

சொல்லின் செல்வர் (கப்புணியின் கையில் உள்ள பணத்தைப் பார்த்துக் கொண்டே): சரி, நான் விடைபெற்றுக் கொள்ளட்டுமா? மிஸ்டர் கப்புணி!

கப்புணி: சரி, டாக்ஸி வரவழைக்கட்டுமா?

சொ. செ.: எதற்கு சார்? நான் பஸ்ஸிலேயே போகிறேன். அடடா! சொன்னபடி பணத்தைத் தயாராய் வைத்திருக்கிறீர்களே! **(கையை நீட்டுகிறார்.)**

கப்புணி: என்ன பணமா?

சொ. செ.: ஆம். இதோ உமது கையில் வைத்திருப்பது எனக்குத்தானே கப்புணி? கொடுங்கள்!

கப்புணி: இது வேறொருவருடைய பணம் சார்!

சொ. செ.: பணத்தைப் பற்றி அன்று நான் கூறினேனே, ஐயா! நீரும் ஒப்புக்கொண்டீரே! என்ன, விளையாடுகிறீரா?

கப்புணி: ஐயோ! நிஜமாத்தான் சார் சொல்கிறேன். நீங்கள் பணத்தைப் பற்றிப் பேசவும் இல்லை, நான் ஒப்புக்கொள்ளவும் இல்லையே சார்!

சொ. செ.: அடாவடி செய்யாதீர்கள். என் நிபந்தனையைப் பற்றி நான் குறிப்பிட்டேனு? நீங்கள் 'தெரியும் ஐம்பதுதானே? சம்மதம்' என்றீர்களே? அதன் பொருள் என்ன?

கப்புணி: அதுவா? நீங்கள் எந்தக் கூட்டத்துக்குச் சென்றாலும் குறைந்தது ஐம்பது பேராவது 'ஆடியன்ஸ்' இருக்க வேண்டும் என்று நிபந்தனை போடுவதாய்த்தான் நான் கேள்விப்பட்டிருந்தேன். அதனால்தான் அப்படிச் சொன்னேன்! இன்று ஆடியன்ஸ் எத்தனை பேர் தெரியுமா? ஐம்பத்தேழு பேர்! அத்தனை பேரும் அபாரமான ரசிகர்கள்! சார், உங்கள் பஸ் அதோ வருகிறது! போய் வருகிறீர்களா? டேய், விட்டல்! சாரை பஸ் ஏற்றி விட்டு வா!

சொ. செ. (முணுமுணுத்துக் கொள்கிறார்) ஹூம்! பணத்தைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிடாததனால் வந்த வினை இது.

(பஸ்ஸைப் பிடிக்க முகத்தில் ஈயாடாமல் ஓடுகிறார், பாவம்! அவர் சென்றதும்.)

கப்புணி: தலைவர் சார்! எப்படி?

தலைவர்: அடா! நீ பெரிய ஆளப்பா! உன்னையிலே இப்போது உனக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் போட்டாக வேண்டும். பைசா செலவில்லாமல் இந்த விழாவை நடத்திய பெருமை உன்னுடையது.

செயலாளர்: தலைவர் சொல்லின் செல்வர் தம் மாலையை எடுத்துப் போக மறந்துவிட்டார், அவருக்கு ஏற்பட்ட ஷாக்கிலே! அந்த மாலையை நம் கப்புணிக்கு அணிவிப்போம்!

(கரகோஷம்)

மஹா சிவராத்திரி



6–3–1970 வெள்ளிக்கிழமையன்று வரும் ஸ்ரீ மஹா சிவராத்திரியை முன்னிட்டு, கீழ்க்கண்ட அறிக்கையை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் வெளியிட்டிருக்கிறார் :

1. மஹாசிவராத்திரியன்று 'சிவபுராணம்' பாராயணம் செய்ய விரும்புபவர்களுக்கு விநியோகிக்க ஆலய நிர்வாகிகளாவது அல்லது ஆதி சைவ சிவாசார்யர்களாவது கீழ்க்கண்ட நிபந்தனைகளை ஒட்டி விநியோகம் செய்ய விரும்புபவர்களுக்கு மேற்படி புத்தகங்கள் அனுப்பப்படும்.
2. இந்தப் புத்தகங்களைப் புத்தகம் ஒன்றுக்கு மூன்று பைசா வீதம் விற்று அந்தத் தொகையைக் கொண்டு அன்றைய தினம் கடைசி கால பூஜை அபிஷேகத்துக்கு உபயோகிக்கலாம்.
3. எவ்வளவு புத்தகங்கள் வேண்டும் என்ற விவரம் எழுதுவதுடன் மேற்படி புத்தகங்கள் அனுப்புவதற்குச் செலவையும் சௌகரியப்பட்டால் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படியாகக் கோரப்படுகிறது.

விண்ணப்பம் செய்ய வேண்டிய விலாசம்:

ஸ்ரீ மானேஜர்,

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் மடம்
1, சாலைத் தெரு, காஞ்சீபுரம்–2.

என் நிலையில் நீ இருந்தால்...

கே. ஜெயலக்ஷ்மி

மோரில் ஊறப் போட்டிருந்த பச்சை மிளகாயை ஜாடியிலிருந்து எடுத்து வெய்யிலில் உலர்த்தியபடியே, ''யார் எழுதியிருக்கா?'' என்று விசாரித்தாள் விசாலம்.

''சென்னை மனநோய் மருத்துவ மனையிலிருந்து வந்திருக்கிறது. பத்மாவுக்கு உடம்பு நன்றாகக் குணமாகி விட்டதாம். வந்து அழைத்துக் கொண்டு போகும்படி எழுதி யிருக்கிறார்கள்.'' நிறுத்தி நிதானமாகக் கூறினான் நீலகண்டன்.

''நிஜந்தானா?'' வியப்புத் தாங்கவில்லை, விசாலத்துக்கு.

''பொய்யா சொல்வேன்?''


''நம்பவே முடியவில்லையே!..எட்டு வருஷங்கள் ஆகிவிட்டதே! இந்த மாதிரி உடம்புக்கு வந்து குணமானதாக நான் கேள்விப்பட்டதே யில்லை. நீ காத்திருந்தது வீண் போகவில்லை நீலா! வீண் போகவில்லை.'' உற்சாகம் கரை தத்தி வழிந்தோடியது விசாலத்தினிடம்.

''எப்ப போகப் போகிறாய், பட்டணத்துக்கு?''

''பார்க்கலாம்...'' என்று மழுப்பி விட்டு எழுந்து வெளியே சென்றான் நீலகண்டன்.

விக்கித்துப்போய்நின்றாள்விசாலம்.

மகனின் மனநிலை அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது. பத்மாவுக்கு உடம்புக்கு வந்ததும் அவன் என்ன துடிதுடித்தான்? அதைக் குணமாக்கவும்தான் அவன் காசை எப்படித் தண்ணீராகச் செலவழித்தான்? சென்னையில் உள்ள மனநோய் மருத்துவ மனைக்குத்தான் அவன் எத்தனை தடவைகள் போய் வந்திருப்பான்! எத்தனை எத்தனை மனத்தத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டிருப்பான்! அப்படியெல்லாம் பதறித் துடித்தவனுக்கு இப்போது என்ன வந்து விட்டது? காத்திருந்த காலம் கண் முன்னால் வந்து கைநீட்டி அழைக்கிறபோது முகத்தைச் சுளிக்கிறானே என்ன? இளமை உள்ளத்தின் ஆசைக் கனவுகளை யெல்லாம் வைராக்கிய சித்தத்தில் சிறைப்படுத்திக் கொண்டு நம்பிக்கையோடு நல்ல காலத்தை எதிர்நோக்கித் தீரத்துடன் நின்றிருந்தவன் இன்று காலம்



கைகூடி வந்து அழைக்கும்போது ஒளி குன்றிப் போவானேன்? என்ன யோசித்தும் அவளுக்கு அவளுடைய மனத் தொய்வுக் கான காரணம் புலப்படவில்லை.

"பாட்டி! ஒரு சந்தோஷ சமாசாரம். காலாண்டுத் தேர்வில் நான் முதல் ராங்க்!" குதித்துக் கொண்டே ஓடி வந்தாள் உஷா.

"உஷாக் கண்ணு! நானும் உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன், என்ன தெரியுமா?" என்று பேத்தியிடம் திருப்பிக் கேட்டாள் பாட்டி.

"சொன்னால்தானே தெரியும்?" பனி படர்ந்த விழிகளில் கெஞ்சும் பாவனை.

"உன் அம்மா வரப் போகிறாள். அவளுக்கு உடம்பு நன்றாகத் தேவலையாகிவிட்டது."

"நிசம்மாவா?"


"ஆமாம்."

உஷாவின் பார்வை சுவரில் மாட்டியிருந்த தன் தாயாரின் படத்தின் மீது போய்ப் படிகிறது. அதைப் பார்க்கும்போதெல்லாம் விழிகளில் பிரதிபலிக்கும் வழக்கமான ஏக்கத்தின் சாயலே இப்போது காணோம். இருந்தது வேறுவிதமான ஒரு நிழலாட்டம். அது என்னவென்பதைப் புரிந்து கொள்ளும் சக்தி விசாலத்துக்கு இல்லையோ?

இந்த உஷாதான் தன் அம்மாவைப் பற்றிப் பாட்டியிடம் எத்தனை கேள்விகள் கேட்டிருப்பாள்? தாயன்புக்காக அந்தப் பிஞ்சு உள்ளம் எப்படியெல்லாம் ஏங்கியிருக்கும்? அதற்கெல்லாம் முடிவு கட்டிவிட்ட இந்தச் சுப வேளையில் முகம் பூவாய்ச் சிரிக்காதோ? இல்லையோ... ஏன்?

விசாலத்தின் சிந்தனை முழுதும் வினாக் குறியே வியாபித்து நின்றது.

நீலகண்டனின் சொந்த அத்தை மகள்தான் பத்மா. பெரியோர்களின் பேராதரவும் இளம் உள்ளங்களின் ஏகோபித்த இணைப்பும் சேர்ந்துதான் நீலகண்டன் — பத்மா திருமணம் நடந்தது. இருவரும் புது மண வாழ்வு தரும் புத்தின்பத்தில் மூழ்கி உற்சாக உலகில் சிறகடித்துப் பறந்தார்கள். ஓராண்டு காலம் ஓடி மறைந்தது. சுவை மிகு பாதாம் அல்வாவின் நடுவே முந்திரிப்பருப்பு தட்டுப்படுவது போல் ஒரு சுவை மாற்றம், உஷாவின் உதயம். இன்பம் என்னும் முதலுக்குக்கிடைத்த வட்டியாகத்தான் தோன்றியது அவர்களுக்கு.



ஒரு வருடம் தான் முடிந்தது. பத்மா மீண்டும் தாய்மை அடைந்தாள். பிரசவத்தில் ஏதோ கோளாறு. குழந்தை வயிற்றிலேயே இறந்து விட்டது. அதை வெளிக்கொணரும் முயற்சியில் விதிக்கும் மனிதத் திறமைக்கும் நடந்த பலத்த போட்டியில் மனிதத் திறமை வென்றது. பத்மா பிழைத்துக் கொண்டாள். இருந்தாலும் தோல்வியைத் தழுவிய விதியின் கடைசிச் சீற்றமாக அந்தத் துர்ப்பாக்கியம் நிகழ்ந்து விட்டது. பத்மாவுக்குச் சித்தப் பிரமை ஏற்பட்டு விட்டது.

எத்தனை எத்தனையோ வைத்தியங்கள்... மந்திர ஸ்நானங்கள் — வழிபாடுகள் எல்லாம் செய்து பார்த்து விட்டான் நீலகண்டன். ஒன்றும் பலனளிக்கவில்லை. மூன்று வருடங்கள் பத்மாவை வீட்டில் வைத்துக்

கொண்டு சொல்லொணுத் துன்பங்களுக்கு ஆளானுன். பிறகே பொறுமை இழந்து போய்ச் சென்னையில் உள்ள மனநோய் மருத்துவ மனையில் கொண்டு போய்ச் சேர்த்தான். 'ஸ்பெஷல் வார்டு'வில் சேர்த்து நன்ருகக் கவனித்துக் கொள்ளவும் ஏற்பாடு செய்தான். கேள்விப்பட்டிருந்த மனத் தத்துவ நிபுணர்களை யெல்லாம் அழைத்துப் போய்க் காட்டினுன். மாதம் தவருமல் சென்னைக்குப் போய்ப் பார்த்துவிட்டு வருவான்.

அவனுடைய அவஸ்தைகளை யெல்லாம் காணப் பொறுக்காமல் விசாலம் அவனை மறு மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தி வந்தாள். அதன் மூலமாகத் தானும் குடும்பப் பொறுப்பிலிருந்து விடுதலை பெறலாமே என்பது அவளது அந்தரங்க ஆசையாகவும் இருந்தது. ஆனுல் நீலகண்டன் ஒரே பிடிவாதமாக இருந்து விட்டான். அதுவும் இப்போது நல்லதாகத்தானே அமைந்து விட்டது!

நீலகண்டனின் நம்பிக்கை வீண் போகவில்லை. கொஞ்சம் காலதாமதம் ஆனுலும் அது நல்ல பலனையே தந்திருக்கிறது. அப்படியிருந்தும் அவன் மகிழ்ச்சியில் முழுமை இல்லாதது போலத் தோன்றுவானேன்? ஒருகால் அது வெறும் பிரமையாக இருக்கலாமோ? அப்படித்தான் இருக்க வேண்டும் என்றே எண்ணினுள் விசாலம்.

அலுவலகத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை வாங்கிக் கொண்டு போய்ப் பத்மாவை அழைத்து வந்துவிட்டான் நீலகண்டன்.

தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்த பத்மாவை வாய் நிறைந்த அன்பின் புன்னகையுடன், ''வா, பத்மா! வா. தைரியமாக வா!'' என்று அழைத்தாள் விசாலம்.

மெள்ள நடந்து வந்து மாமியாரை நமஸ்கரித்தாள் பத்மா.

''மகராஜியா இரும்மா'' என்று ஆசிர்வதித்தாள் விசாலம்.

பத்மாவின் பார்வை முன் அறையில் ஒரு வட்டம் போட்டது. பிறகு அறையின் ஒரு மூலையில் மிரட்சியான பார்வையுடன் நின்று கொண்டிருந்த உஷாவின் மேல் போய்ப் படிந்து நின்றது.

''அம்மா கிட்டக்க வாயேன் உஷா'' என்றுள் விசாலம்.

ஊஹூம். உஷா அசைந்து கூடக் கொடுக்கவில்லை.

''உஷா! வாயேன்...'' இரு கைகளையும் நீட்டி அழைத்தாள் பத்மா.

வரவில்லை உஷா.

பத்மா மெதுவாக மகளை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தாள். உடனே உஷா இரண்டடி எடுத்து வைத்து விட்டாள்,—முன்னேக்கி யல்ல. பின்னேக்கித்தான்.

சடக்கென்று நின்று விட்டாள் பத்மா.

''போகப் போக எல்லாம் சரியாகிவிடும். வா, குளித்து விட்டுச் சாப்பிடலாம்'' என்று அழைத்து நிலைமையைச் சமப்படுத்தினுள் விசாலம்.

சாப்பிட்டு விட்டுச் சற்று ஓய்வாக அமர்ந்திருந்தான் நீலகண்டன். வெற்றிலைத் தட்டுடன் அவன் அருகில் வந்தாள் பத்மா.

நகை சிந்தும் முகமும், மலர் சூடிய கூந்தலும், மெட்டியின் மெல்லிய மங்கல ஒலியுமாகச் சிரிக்கும் விழிகளுடன் பலமுறை கண்டிருந்த பத்மாவின் பூர்வீகத் தோற்றத்தை அவனுல் இப்போது காண முடியவில்லை.

பரட்டைத் தலையும் சம்பந்தா சம்பந்தமில்லாத சிரிப்பும், அலை பாயும் விழிகளும் ஏடாகூடமான செய்கைகளுமான பத்மாவின் இடைக்காலத் தோற்றம்தான் அவன் முன் தோன்றியது. நிகழ்கால இனிமையை மறந்து போனுன். உடம்பு ஏனே நடுங்கியது. எந்தச் சமயம் எந்தப் பொருளை எடுத்து அவன் மீது அவள் வீசிவிடுவாளோ என்று பயப்பட்ட நிலையின் நிழலா?

''இந்தாருங்கள்!'' சுண்ணும்பு தடவிய மடித்த வெற்றிலைச் சுருளை அவனிடம் நீட்டினுள் பத்மா.

''வேண்டாம்!'' அவனுக்கு வாய் குழறியது.

''ஏன்?''

''போட்டுக் கொள்வதை விட்டுவிட்டேன்.''

''இனிமேல் போட்டுக் கொள்ளுங்கள்... ம்...'' நீட்டிய கரத்தை அவள் மடக்கவே இல்லை.

வேறு வழியில்லாமல் அந்த வெற்றிலைச் சுருளை வாங்கிக் கொண்டான் அவன். ஆனுல் அதை வாயில் போட்டுக் கொள்ளவில்லை.

''வாயில் போட்டுக் கொள்ளுங்களேன்.''

அதற்கு அவனுக்குத் துணிவில்லை. முன்பொரு சமயம் அவள் சுருட்டிக் கொடுத்த வெற்றிலைச் சுருளை அவன் அப்படியே வாங்கி வாயில் போட்டுக் கொண்டதும் அதில் பத்மா சுண்டைக்காய் அளவு சுண்ணும்பை அப்பி வைத்திருந்ததால் வாய் வெந்து போய் அவஸ்தைப்பட்டதுதான் அவனுக்கு இப்போது நினைவுக்கு வந்தது. வெற்றிலை பீடா கட்டுவதில் பத்மா மிகுந்த கெட்டிக்காரி என்பதெல்லாம் இப்போது அவனுக்கு நினைவுக்கு வர மறுத்தது.

அவனுக்கு அவளுடன் தனியாக அந்த அறையில் இருக்கவே எப்படியோ இருந்தது. எழுந்து வேகமாக வெளியேறினுன்.

பத்மாவின் முகம் சூம்பியதை அவன் பொருட்படுத்தவேயில்லை.


அன்று சனிக்கிழமை. நீலகண்டன் எண்ணெய் தேய்த்துக் குளித்துக் கொண்டிருந்தான் அறைக்குள்.


''அம்மா! கொஞ்சம் முதுகு தேய்த்து விட்டுப் போகிறயா?'' என்று அறைக்குள் இருந்தவாறே குரல் கொடுத்தான் நீலகண்டன்.

''நான் தேய்த்து விடுகிறேனே...'' என்றவாறே உள்ளே வர முயன்றுள் பத்மா.

''வேண்டாம்....'' என்று சொல்லிக் கொண்டே பட்டென்று கதவை மூடித் தாழிட்டுக் கொண்டான் அவன்.

ஒரு சமயம் அவன் குளித்துக் கொண்டிருந்தபோது திடுதிப்பென்று உள்ளே புகுந்து விட்ட பத்மா, அடுப்பில் பொங்கிக்கொண்டிருந்த வெந்நீரை மொண்டு அவனுடைய முதுகில் கொட்டிவிட்டு ஓடியதும், அவன் எரிச்சல் தாங்காமல் அலறியதும்தான் நினைவுக்கு வந்தது இப்போது அவனுக்கு. மனை


ஒவ்வொரு குடும்பமும் காண வேண்டிய படம்!
ஒவ்வொரு குழந்தையும் கற்க வேண்டிய பாடம்!!
விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்
நம்ம குழந்தைகள்
தயாரிப்பு: D.ராமாநாயுடு
டைரக்ஷன்: ஸ்ரீகாந்த்
வசனம்:
துறையூர் K.மூர்த்தி
பாடல்கள்
கண்ணதாசன்
இசை:
M.S.விஸ்வநாதன்




mcm/app/1

மான புதிதில் அவன்தான் முதுகு தேய்த்துவிட வேண்டும் என்று காத்திருந்ததும், அப்படி அவள் அறைக்குள் வந்ததும் அவளுடன் வம்பு செய்து மகிழ்ந்ததும் அவன் நினைவில் தோன்றவில்லை.

பாட்டிக்குப் பக்கத்தில் படுத்திருந்தாள் உஷா.

''என் பக்கத்தில் படுத்துக் கொள்ள மாட்டாயா உஷா?'' என்று ஆசையோடு வினவியவாறே அவள் அருகில் வந்து படுத்துக்கொண்டாள், பத்மா. அவ்வளவுதான்.

''பாட்டி!'' என்று அலறியவாறே எழுந்து அப்பால் ஓடி விட்டாள் உஷா.



''மேஜை மேலே வைச்சிருந்த சாக்பீஸ் எங்கே?''

''இப்பதான் அதை அரைச்சுப் பவுடராக்கிப் பூசிக்கிட்டேன். என் முகம் நல்லா இருக்கா மச்சர்?''

பத்மாவுக்கு எப்படி இருந்ததோ! சடக்கென்று எழுந்து விட்டாள்.

என்ன முயன்றும் நீலகண்டனும் பத்மாவைப் பழைய பத்மாவாகக் கருதி சகஜமாக அவளுடன் பழக முடியவில்லை. அவள் அவனிடம் நெருங்கி நெருங்கி வந்தாள். அவனோ விலகி விலகிப் போனான். அவள் குணமாகி விட்டாள் என்பதை அவனால் நம்ப முடியவில்லையா? மணமான புதிதில் அவளிடம் காணப்பட்ட இளமையின் துடிப்பை இப்போது காணவில்லை. என்றாலும் அவள் முன்போலவேதான் இருந்தாள். அவளிடம் எந்த விதமான அசட்டுத்தனமான செயலும் இப்போது இல்லை. இருந்த போதிலும் அவனால் அவளோடு உரிமையோடு உல்லாசமாக நடந்துகொள்ள முடியவில்லை.

ஒரு மாதம் விரைந்து சென்றது.

நீலகண்டனுக்குப் பத்மாவுடன் ஒட்டாமல் பழகுவதும், விலகி நிற்பதும் ரொம்பவும் சிரமமாக இருந்தது. தன்மீதே அவனுக்கு வெறுப்பும் உண்டாயிற்று. இது பற்றித் தன் குடும்ப டாக்டரிடம் ஆலோசனை கேட்க எண்ணிச் சென்றான்.

பொன்னம்மாவின் பின் மண்டையிலிருந்த பலத்த காயத்துக்குக் கட்டுப் போட்டு முடித்ததும் டாக்டர் சொன்னார்:

''இதோ பார், பொன்னம்மா! இனிமேல் நீ இந்த மாதிரி காயங்களுடன் அடிக்கடி என்னிடம் வரவேண்டியிருக்காது.''

''மெய்யாகவா சொல்றீங்க? அவருக்கு உடம்பு சொணமாயிடும்னு சொல்றீங்களா டாக்டரய்யா!'' ஆவாசத்துடனும் உற்சாகத்துடனும் கேட்டாள் பொன்னம்மா.

''நாச்சியப்பனைப் பட்டணத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடப் போகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து விட்டேன்.''

''வேண்டாம், டாக்டரையா. வேண்டாமுங்க. இனிமேலுக்கு நான் காயம் பட்டுக்கிட்டா கட்டுப் போட்டுக்க இங்கே வர மாட்டேன். அப்படி ஏதாச்சும் செய்துடாதீங்க'' என்று அழாக் குறையாகக் கெஞ்சினாள் பொன்னம்மா.

''முடியாதம்மா. இனி மேலும் நான் உன்பேச்சைக் கேட்க முடியாது. நீ ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு அங்கமாக உடைத்துக் கொண்டு வருவதே உனக்குத் தொழிலாகப் போய் விட்டது. போன மாதம் ஒரு குழந்தையையே கொன்று விட்டான் உன்னுடைய புருஷன். இப்படியே விட்டுக் கொண்டிருந்தால் உன் வீட்டிலே யாருமே மிஞ்ச மாட்டார்கள்.''

''உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டுங்க. ஆசுபத்திரியிலே சேர்க்கிற பேச்சை மட்டும் வேண்டாங்க. அவங்க எங்களைப் போல ஏழைங்களைச் சரியாக் கவனிக்க மாட்டாங்க. சாக அடிச்சுப்புடுவாங்க. அடிச்சாலும் உதைச்சாலும் அவரு எம் புருஷருங்க. எப்படி இருந்தாலும் உசிரோட உலாத்திக்கிட்டு இருக்கட்டுமுங்க. எம் மஞ்சளை அழிச்சுப்புடாதீங்க. இனிமேலுக்கு நான் என்ன ஆபத்து வந்தாலும் இந்தப் பக்கம் தலையைக் காட்டவே மாட்டேனுங்க. என்னை நம்புங்க'' என்று புலம்பிக் கொண்டிருந்தாள் பொன்னம்மா.

அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பி விட்டு டாக்டர் நீலகண்டனிடம் வந்தார்.

''நீலகண்டா! பார்த்தாயா நம் பெண்களின் மனோபாவத்தை! புருஷனால் எத்தகைய ஆபத்துக்குள்ளானாலும் சரி. அவன் எப்படியாவது உயிரோடு இருந்தால் போதும் என்று கூறினாள் நம் பொன்னம்மா. இதுவே வேறொரு நாட்டுப் பெண்ணாக இருந்திருந்தால் இப்படியோர் அசாதாரணப் பொறுமையை — தன்னலம் கருதாமையை எதிர் பார்க்க முடியுமா?'' என்று வியப்பும் திகைப்பும் நிறைந்த குரலில் வினவினார்.

''ஆச்சரியப்பட வேண்டிய விஷயம்தான், டாக்டர்! பொன்னம்மா கூலை சரியில்லாத தன் கணவனுடன் பயமில்லாமல் நெருங்கிப் பழகுகிறளா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டான் நீலகண்டன்.

''அதை ஏன் கேட்கிறாய் போ! அவனுக்கு வாரம் தவறாமல் உட்கார வைத்து எண்ணெய் தேய்த்து விடுகிறாள். குளிப்பாட்டி விடுகிறாள். உட்கார்ந்து ஆசையாகப் பேசிப் பார்க்கிறாள். ஒழுங்காகச் சாப்பிடாதபோது பொறுமையாக அவனிடம் அடியும் உதையும் வாங்கிக் கொண்டு வாயில் சோறு ஊட்டி விடுகிறாள். யார் யார் என்னென்ன வைத்தியம் சொல்லுகிறார்களோ அதையெல்லாம் தாங்கொணாத் துன்பங்களுடன் அவனுக்குச் செய்து பார்க்கிறாள்....'' டாக்டர் சொல்லி நிறுத்தினார்.

வாயடைத்து உட்கார்ந்திருந்தான் நீலகண்டன். அவன் வந்த காரணத்தைக் கேட்டார் அவர்.

''யாருக்கும் எந்த விதமான உடம்புமில்லை டாக்டர். நான்தான் என்னுள்ளே

இருந்த சிறிது மனநோயுடன் இங்கே வந்தேன். பொன்னம்மா அதைக் குணப்படுத்தி விட்டாள். இன்னொரு சமயம் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு எழுந்தான் நீலகண்டன்.

நீலகண்டன் வீட்டினுள்ளே நுழைந்ததுமே, ''நீலா! பத்மாவைக் காணோமடா'' என்றலறியபடி எதிரே ஓடி வந்தாள் விசாலம்.

''என்னம்மா உளறுகிறாய்?'' என்று பதறினான்.

''இதோ பார், அவள் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிற கடுதாசியை'' என்று கூறி ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்தாள் விசாலம். அதை வாங்கிப் படித்தான் நீலகண்டன்.

''என் அன்புத் தெய்வத்துக்கு.

கோடானுகோடி நமஸ்காரங்கள். நான் உடம்பு குணமாகிக் கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆன பின்பும் கூட அதை உறுதிப்படுத்துவதற்காக என்னை மருத்துவ மனையிலேயே வைத்திருந்தார்கள். நான்கு வருடங்கள் விருப்பு வெறுப்புகளின்றி — நல்லது கெட்டது தெரியாமல் அந்த ஆஸ்பத்திரியில் வாழ்ந்திருந்த எனக்கு உடம்பு குணமான பிறகு ஒரு வருடம் அங்கே இருந்தது நரக வஸ்தையாகத்தான் இருந்தது. இருப்பினும் பொறுமையாக அந்த நாட்களை எப்படியோ கழித்து விட்டேன்.

ஆனால் இங்கே வந்து ஒரு மாதம்தான் ஆகிறது. ஆனால் இதற்குமேல் பொறுமையாக என்னால் இங்கிருக்க முடியவில்லை. மாமியும் உஷாவும் — ஏன் நீங்களும்தான் என்னை இன்னமும் பைத்தியக்காரியாகவேதான் கருதுகிறீர்கள்! அதன் காரணமாக நான் எவ்வளவுதான் உங்களிடம் நெருங்கி நெருங்கி வந்தாலும் நீங்கள் அனைவரும் நடுங்கி நடுங்கி ஓடி ஒளிகிறீர்கள்! இது அவசியந்தானா?

குணமடைந்துவிட்ட ஒருத்தியாக — உங்களில் ஒருத்தியாக என்னை உங்கள் மூவராலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். உங்களுடன் கலந்து வாழ முடியாத நிலையில் — ஒதுங்கித்தான் வாழ வேண்டும் என்றால் அதற்கு வீடு எதற்கு? ஒரு வருட காலத்துக்குள் ஏதேனும் என்னிடம் விகற்பமான செயல்கள் ஏற்பட்டால் மறுபடியும் என்னைச் சென்னை மனநோய் மருத்துவ மனைக்கே அனுப்பிவிடுகிற நிபந்தனையிருப்பது எனக்குத் தெரியும். அதனால் நான் மறுபடியும் அங்கேயே சென்று விடுகிறேன். அதனால் துன்பப்படப் போவது நான் ஒருத்தி மட்டும்தான். நான் இங்கேயே இருந்தாலோ மூவருக்குத் துன்பம். என்னால் அது இருக்க வேண்டாம். விடைபெறுகிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. தாங்கள் இனியும் மறுமணம் செய்து கொள்ளாமல் இருப்பதில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நம் குடும்பத்தினரைப் பற்றிய வரையில் நான் இருந்தும் இறந்தவளாகி விட்டேன். ஆகையால் வீண் பெருமிதப் போர்வையைக் களைந்தெறிந்து விட்டு மறுமணம் செய்து கொள்ளவும். அதற்கு நான் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய எப்போதும் சித்தமாயிருக்கிறேன். என் இருப்பிடம் தான் தங்களுக்குத் தெரியுமே!

பத்மா.''



''குறட்டை விடாமல் தூங்குங்களேன்! வசனம் காதுலே விழலே!''

''பட்டணத்துக்குப் போக இப்போது ரயில் ஏதுடா? நீ வேண்டுமானால் போய்ப் பாரேன். பாவம், அவளை நாம்ப யாரும் புரிஞ்சுக்கலே'' என்று விம்மினாள் விசாலம்.

கடிதத்தைக் கீழே போட்டுவிட்டு ஓடினான் நீலகண்டன்.

எழும்பூர் ரயில் நிலையத்தினின்றும் வெளியே வந்த பத்மா, ஒரு வாடகைக் காரை அழைத்தாள்.

அதில் அவள் ஏறி உட்கார்ந்ததும் கதவை மூட முயன்றார் டிரைவர்.

''பத்மா, நில்!'' என்று உரக்கக் குரல் கொடுத்தபடியே அதனருகில் ஓடி வந்தான் நீலகண்டன். கதவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''நீங்களா?'' என்றாள் பத்மா பிடிப்பற்ற குரலில்.

''நான்தான். கீழே இறங்கு பத்மா. நாம் திரும்பி ஊருக்கே போய் விடலாம்.''

''வேண்டாம். என் இருப்பிடம் இனிமேல் மனநோய் மருத்துவ நிலையந்தான்.''

''அதுதான் இல்லை'' என்று நீலகண்டன் காருக்குள்ளேயிருந்த பத்மாவின் கையைப் பற்றி வெளியே இழுத்துக் கொண்டான். பிறகு டாக்ஸிக்காரரைப் பார்த்து, ''நீ போப்பா!'' என்று கூறினான்.

டாக்ஸி நகர்ந்ததும், ''உனக்கே இது நன்றாக இருக்கிறதா பத்மா? எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கக் கூடாதா?'' என்று கனிவுடன் கேட்டான் பத்மாவிடம்.

ஒருகணம் வைத்த கண் வாங்காமல் கணவனின் முகத்தையே உற்று நோக்கினாள் பத்மா. பிறகு உள்ளார்ந்த தொனியில், ''என் நிலைமையில் நீங்கள் இருந்திருந்தால் மட்டுமே என்னை உங்களால் புரிந்து கொள்ள முடியும்'' என்றாள். இதற்குள் அவளுடைய கண்கள் நிறைந்து விட்டன.

''அப்படி நினைத்துப் பார்ப்பதைவிட என் நிலையில் நீ இருந்திருந்தால் என்று எண்ணிப் பார்ப்பது எனக்கு எளிதாக இருந்தது பத்மா. என்னை மன்னித்து விடு. வா, போகலாம்'' என்று அவளுடைய கையைப் பற்றிக் கொண்டான் நீலகண்டன். இப்போது அதில் நடுக்கமில்லை. அதை அவளும் நன்கு புரிந்து கொண்டாள்.

இணைந்த கரங்களுடனேயே இருவரும் மறுபடியும் எழும்பூர் ரயில் நிலையத்தினுள்ளே சென்றார்கள்.

காந்தி: ஒரு குழந்தை!

ஒரு முறை காந்திஜி சாபர்மதி ஆசிரமத்தில் ஒரு அறையில் அமர்ந்து 'நவஜீவன்' பத்திரிகைக்கு ஒரு முக்கியமான கட்டுரை எழுதிக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆசிரமத்துச் சிறுவர்கள் சிலர் அவரெதிரே வந்து நின்றார்கள். பத்து முதல் பதினைந்து வயது வரை இருக்கலாம் அவர்களுக்கு. அவர்களைப் பார்த்ததும் காந்தியடிகள், "இன்று பொழுது விடிந்ததும் விடியாததுமாக வானர சேனை என் அறைக்குள் படையெடுத்துள்ள காரணம் என்னவோ?" என்று வேடிக்கையாகக் கேட்டார்.

அப்படைக்குத் தலைவன், "இன்று நீங்கள் எங்களோடு சாபர்மதி ஆற்றுக்குக் குளிக்க வர வேண்டும், தெரியுமா?" என்றான்.

"இன்றைக்கு உங்கள் ஆசையை நிறைவேற்ற எனக்கு நேரம் இல்லை. இன்னொரு நாள் பார்ப்போம்!" என்றார் காந்திஜி.

"உங்களுக்கு எப்பொழுதுதான் நேரம் இருக்கிறது? எப்பொழுது பார்த்தாலும் எதாவது ஒரு வேலையில் மூழ்கியிருக்கிறீர்கள்!" என்றான் இன்னொரு துணிச்சல்காரப் பையன்.

அவன் துணிச்சல் மற்றவர்களுக்கும் துணிவைக் கொடுத்தது. "'குழந்தைகள் விளையாட்டில் பெரியவர்கள் கலந்து கொள்ளக் கூடாது' என்று நினைக்கிறீர்களா, பாபுஜி?" என்று கேட்டான்.

"இல்லை, இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை!"

"பாபுஜி! நீங்கள் சொல்லுகிற எத்தனை பேச்சுக்களை நாங்கள் கேட்கிறோம்? ஆனால் நாங்கள் சொல்லுகிற ஒன்றைக்கூட நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்களே. இது நியாயமா? இன்று நீங்கள் எங்கள் சொல்லைக் கேட்டு ஆற்றுக்குக் குளிக்க வரத்தான் வேண்டும்!" எல்லோருமே அடம் பிடித்தனர்.

ஒருவன் ஓடிச் சென்று அன்னை கஸ்தூரிபாவிடமிருந்து வேட்டியும் துண்டும் வாங்கி வந்தான். இன்னொருவன் காந்திஜியின் செருப்புக்களைக் கொண்டு வந்தான்.

காந்திஜிக்கு வேறு வழி தோன்றவில்லை. தமது வேலைகளை மூட்டை கட்டி வைத்து விட்டு எழுந்தார். குழந்தைகளுக்கு ஒரே குஷி. ஆசிரமமே அமளி துமளிப்பட்டது.

"ஆனால், இதோ பார்! ஒரே ஒரு நிபந்தனை!" என்றார் காந்தியடிகள்.

"என்ன பாபுஜி?" எல்லாக் குழந்தைகளும் ஆவலுடன் காந்திஜியின் முகத்தைப் பார்த்தனர்.

"நீங்கள் ஒருவருக்கொருவர் கோபித்துக் கொண்டு சண்டை போடுகிறீர்கள்; ஒருவரையொருவர் திட்டிக் கொள்ளுகிறீர்கள். சில சமயம் அடித்துக் கொள்ளக் கூடச் செய்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் எனக்கு ஒரு வாக்குக் கொடுத்தால் நான் உங்களோடு வருகிறேன். அதாவது இனிமேல் நீங்கள் சண்டை போடுவதில்லை, திட்டிக் கொள்வதில்லை, அடித்துக் கொள்வதில்லை. அன்பாக நடந்து கொள்ளுகிறோம் என்று சொல்ல வேண்டும். என்ன?" என்றார்.

எல்லாக் குழந்தைகளும் மகிழ்ச்சியோடு வாக்களித்தனர். காந்தியடிகள் அவர்களோடு சாபர்மதிக்குக் குளிக்கச் சென்றார்.

ஆற்றங்கரைக்குச் சென்று எல்லோருடைய உடைகளையும் ஒரு புறம் சுத்தமாகத் துவைத்து வைக்கச் சொன்னார். பிறகு உடம்பை நன்றாகத் தேய்த்து அழுக்குப் போகக் குளிக்கச் சொன்னார். கடைசியாக எல்லோருக்கும் நீந்தக் கற்றுக் கொடுத்தார்.

"பாபுஜி! உங்களுக்கு நீந்தத் தெரியுமா? அப்படியானால் எங்களுக்கும் நீந்திக் காட்டுங்களேன்!" என்றார்கள் பையன்கள்.

காந்தியடிகளுக்கு உற்சாகம் பிறந்தது. வேட்டியை ஏகக்கச்சமாக வரிந்து கட்டிக் கொண்டு நீந்தத் தொடங்கினார். ஆற்றில் சில கஜ தூரம் நீந்திப் போயிருப்பார். குழந்தைகள் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. பொழுது போனதே தெரியாமல் காந்தியடிகள் குழந்தைகளோடு குழந்தையாகி மகிழ்ந்தார்.

குளித்துக் கரையேறித் திரும்பும்போது ஒரு பையன், "என் பாபுஜி! சோப்புத் தேய்த்துக் குளித்தும் ஒரு முறை உங்களுக்குத் தேமல் வந்துவிட்டது என்று சொன்னீர்களே. முன்பொரு சமயம்! அந்தக் கதையை முழுதும் சொல்லுங்களேன்!" என்றான்.

"ஆமாமா? அப்பொழுது எனக்குப் பதினெட்டு, பத்தொன்பது வயதிருக்கும். கப்பலில் ஏறி பாரிஸ்டருக்குப் படிப்பதற்காக நான் வெளிநாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். நான் சோப்பு போட்டுக் குளிப்பதைப் பெருமையாகவும் நாகரிகமாகவும் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் கப்பலில் கடலின் உப்பு நீரிலும் குளிக்க வேண்டியிருந்தது. உப்புநீர் காரணமாகக் குழைத்துத் தேய்த்த சோப்பு நுரை முழுவதும் போகவில்லை. அதனால்தான் தேமல் வந்துவிட்டது!"

"ஆமாம். அப்புறம் அந்தத் தேமல் எப்படிப் போயிற்று?" என்று கேட்டான் ஒரு பையன்.

"ஒரு டாக்டர் தோலுக்குப் போட ஒரு மருந்து கொடுத்தார். அதைப் போட்டுக் கொண்டால் ஒரே எரிச்சலாக எரியும். நான் அழுது விடுவேன்!" என்றார் காந்திஜி.

"எங்களைப் போலவா பாபுஜி?" எல்லாக் குழந்தைகளும் வியப்புடன் கேட்டார்கள்.

"உங்களுக்கு நம்பத் தோன்றவில்லையல்லவா? ஆனால் நானும் உங்களைப் போலக் குழந்தையாக இருந்தவன்தானே?" — அப்பொழுது காந்தியடிகள் அழுது காட்டவில்லை. லேசாகப் புன்னகை பூத்தார்.

ரா. வீ.



ஒரு கவியின் மரணம்

வங்காளி மூலம் — ஸ்ரீ அஜித் கிருஷ்ணபாசு (அக்ருப)

தமிழாக்கம் — சு. கிருஷ்ணமூர்த்தி

கவி சிசிர் ராய் இறந்து விட்டார். அவருடைய மரணச் செய்தி பத்திரிகைகளில் வெளியாகவில்லை. அது குறித்து இரங்கற் கூட்டம் எதுவும் நடக்கவில்லை. அவருடைய மரணத்தின் நினைவில் எனக்குத்தான் துக்கம் தொண்டையை அடைக்கிறது.

முதலிலிருந்து சொன்னால்தான் உங்களுக்குப் புரியும். இது பல ஆண்டுகளுக்கு முந்தைய கதை. நான் அப்போதுதான் பி.ஏ. பட்டம் பெற்று வேலை தேடும் படலத்தைத் தொடங்கி யிருந்தேன். வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. வயிற்றுப் பாட்டைக் கவனித்துக் கொள்ள ஏதாவது டியூஷனாவது கிடைக்காதா என்று தவித்துக் கொண்டிருந்தேன்.

என் அதிர்ஷ்டம், விரைவிலேயே ஒரு நல்ல டியூஷன் கிடைத்தது.

பிரபல சாராய வியாபாரி ஆலோக் சௌதுரியின் புதல்வன் நவகாந்தன் பல வருஷங்களாக மெட்ரிக் வகுப்பை விட்டு நகராமல் இருந்தான். அவனுக்கு எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொடுத்து அவனை எப்படியாவது அந்த வகுப்பிலிருந்து கிளப்பிவிட வேண்டும். டியூஷன் உபாத்தியாயருக்கு இருக்க இடம் கொடுத்து, சாப்பாடும் போட்டுச் சம்பளமாக ஐம்பது ரூபாயும் கொடுப்பார்கள். இவ்வளவு நல்ல டியூஷன் எளிதில் கிடைக்கக் கூடியதா ?

நவகாந்தனுக்குப் பாடம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். ஆரம்பித்த சில நாட்களிலேயே அவனுடைய பழைய உபாத்தியாயர்கள் வேலையைவிட்டுவிட்டு ஓடிய காரணம் எனக்குத் தெளிவாகப் புரிந்தது. அவனுடைய மூளை 'அசாதாரண'மானதுதான் ! அந்த மூளையை வைத்துக் கொண்டு அவன் எப்படித்தான் மெட்ரிக் வகுப்பை எட்டினான் என்பது எனக்குப் பெரிய புதிராக இருந்தது. நடூவே இந்தப் புதிரை விடுவித்தான். நடு படித்தது ஒரு தனியார் பள்ளியில். ஆலோக் பாபு தன் காலமான மனைவியின் நினைவாக அந்தப் பள்ளிக்கு ஒரு பெரிய தொகை நன்கொடையாக அளித்துத் தன் பையன் வருஷம் தவறாமல் பரீட்சையில் தேற ஏற்பாடு செய்து விட்டாராம் !


நான் என்ன முட்டிக் கொண்டும் நடூவுக்குப் படிப்பு மூளையில் ஏற வில்லை. இருந்தாலும் நான் என் முயற்சியைக் கைவிடவில்லை! இந்த வேலையையும் விட்டு விட்டால் பிழைப்புக்கு என்ன செய்வது ?

என் விடாமுயற்சியைக் கண்ட நடூவுக்கு என் மேல் அனுதாபம் ஏற்பட்டது. அவன் சொன்னான்: ''நீங்கள் ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறீர்கள், மாஸ்டர் பாபு? எனக்குச் சுட்டுப் போட்டாலும் படிப்பு வராது. அதைப் பற்றி நானே கவலைப்படாத போது நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான் படித்து என்ன ஆக வேண்டும்? அப்பாதான் எனக்கு நிறைய சேர்த்து சேர்த்து வைத்திருக்கிறார்! அந்தச் சொத்தைச் செலவழிக்கத் தெரிந்தாலே எனக்குப் போதும். செக்கில் கையெழுத்துப் போடத் தெரியும் எனக்கு. வேறு என்ன தெரிந்து கொள்ள வேண்டும்? ஆகையால் நீங்கள் அதிகம் சிரமப்படாதீர்கள். ஏதோ கற்றுக் கொடுப்பதாகப் பாவனை செய்யுங்கள்; நானும் படிப்பதாகப் பாவனை செய்கிறேன். உங்கள் வேலைக்கு ஆபத்து ஏற்படாது. அதற்கு நான் பொறுப்பு!''

அவன் யோசனை எனக்குப் பிடித்திருந்தது. வேலை நிலைக்க வேண்டும் என்பதுதானே என்னுடைய கவலை!...

நடூதான் என்னிடம் சிசிர் ராயைப் பற்றிச் சொன்னான். சிசிர் நடூவின் நெருங்கிய நண்பன். அவனுக்குத் தாய் தந்தையர் இல்லை. அவன் தன் ஒன்றுவிட்ட மாமா நிருதாந்த சென்னின் வீட்டில்தான் வளர்ந்து பெரியவனானான். அவனுக்குப் படிப்பில் ஈடுபாடு இல்லை. அவனுக்குப் பிடித்தவை இசையும் கவிதையும்தான். ஆகையால் அவன் மெட்ரிகுலேஷனுடன் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டிலிருந்து கொண்டு கவிதைகள் இயற்றத் தொடங்கினான்.

அவனுடைய மாமா இரண்டு தாரங்களை இழந்து மூன்றாம் தாரம் மணந்தவர். சிசிரின் பழைய மாமிகள் இருவரும் அவனை எப்படியோ பொறுத்துக் கொண்டார்கள். ஆனால் மூன்றாம் மாமிக்கு அவனுக்கு



வெட்டிச் சோறு போடுவது கட்டோடு பிடிக்க வில்லை.

தம் கிழ வயதில் மணந்துகொண்ட இளம் மனைவியின் வார்த்தையை அவரால் அலட்சியம் செய்ய முடியுமா? அவருடைய நண்பர் ஒருவர் ஒரு பெரிய செருப்புக் கம்பெனியில் உயர்ந்த பதவியில் இருந்தார். அவர் மூலம் சிசிருக்கு அந்தக் கம்பெனியில் ஒரு குமாஸ்தா உத்தியோகம் வாங்கிக் கொடுத்து விட்டார் சிசிரின் மாமா. வெளியூரில் வேலை. சிசிரும் வேலை பார்க்க வெளியூர் போய் விட்டான்.

இவ்வளவு விவரங்களையும் தெரிவித்து விட்டு நடூ என்னிடம் சொன்னான்: "மாஸ்டர் பாபு! நான் சொல்கிறேன் பாருங்கள்! சிசிர் வெகு நாட்கள் இந்த வேலையில் நிலைத்திருக்க மாட்டான். அவன் கவி. செருப்புக் கம்பெனியில் கணக்கெழுதப் பிறக்கவில்லை அவன். ஒரு நாள் அந்த வேலையை விட்டுவிட்டு ஓடி வந்துவிடுவான், பாருங்கள்!"

நடூவுக்குச் சிசிரிடம் ரொம்பப் பிரியம்; அவனுடைய கவிதைத் திறமையைப் பற்றிப் பெருமையும்கூட. அவன் அடிக்கடி சிசிரைப் பற்றிப் பெருமையாகப் பேசுவான்.

நடூ சொல்லியபடியே நடந்தது. ஒரு நாள் அவன் சொன்னான்: "மாஸ்டர் பாபு, சிசிர் கடிதம் எழுதியிருக்கிறான். வேலையை விட்டு விட்டானாம். அடுத்த வாரம் இங்கே திரும்பி வருகிறானாம்... அவன் மாமா நல்ல மனிதர் தான். ஆனால் மாமி ராக்ஷசி. அவள் என்ன செய்யப் போகிறாளோ?"

அடுத்த வாரம் சிசிர் நடூவைப் பார்க்க வந்தான். நடூ என்னை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

சிசிருக்கு நீண்டு மெலிந்த உடல் வாகு. களையான முகத்தில் பெண்மைக்குரிய நளினம் இருந்தது. தன்னை ஒரு முறை பார்ப்பவர்களை மறுபடியும் பார்க்கத் தூண்டும் கவர்ச்சி இருந்தது அவனிடம்.

எனக்கு அவனைக் கண்டதுமே பிடித்துப் போயிற்று. முதல் சந்திப்பிலேயே அவனுடன் நெடு நாட்கள் நெருங்கிப் பழகிய உணர்வு ஏற்பட்டது எனக்கு. உலகம் தெரியாத அந்த அப்பாவிப் பையனிடம் அனுதாபமும் பரிவும் பிறந்தன.

நடூ, சிசிர் இருவருக்குமே இசையில் மிகுந்த ஈடுபாடு இருந்தது. நடூ நிறையக் கிராமபோன் ரிக்கார்டுகள் வாங்கி வைத்திருந்தான். அப்துல் கரீம்கானின் பிரசித்திபெற்ற 'யமுனா கே தீர்' என்ற பாடலைச் சிசிர் கிராமபோனில் வைத்தான். இசையின் மாயத்தால் அந்த அறையின் சூழ்நிலையே உருக்கம் நிறைந்ததாக ஆகிவிட்டது. கவி சிசிர் கண்களை மூடியவாறே இசையை அனுபவிக்கத் தொடங்கினான். அவன் சிலைபோல் அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவனது கண்களிலிருந்து



கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. பாட்டு முடிந்து கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அவன் தன் நினைவு பெற்றுக் கண்களைத் திறந்து சற்று வெட்கத்துடன் கண்ணீரைத் துடைத்தவாறு சொன்னான்: "இசைத் தட்டுக்குள் இசை சிறைப்பட்டுக் கிடக்கிறது. கிராமபோனின் ஊசி அதன் இதயத்தைக் குத்திக் கிளறும்போது அது வெளியிடும் ஓலந்தான் தன் உருக்கம் நிறைந்த இனிமையில் நம்மை மூழ்கடிக்கிறது.... என் போன்ற கவிஞரும் கிராமபோன் ரிக்கார்டைப் போலத்தான். உலகத்தின் துக்கங்களையும் வேதனைகளையும் நாங்கள் முழுமையான உணர்வுடன் உணர்கிறோம். இசை எங்களுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறது. வாழ்க்கையின் கொடுமைகளும், இன்னல்களும் எங்களைக் குத்திக் கிளறும் போது அந்த இசை உருக்கம் நிறைந்த கவிதையாக உருவெடுக்கிறது....."

இவ்வாறு முதல் சந்திப்பிலேயே எனக்குக் கவி சிசிர் ராயுடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. அவனது அசாதாரணமான கவியுள்ளம் என்னைக் கவர்ந்தது. அதைப் புரிந்து கொள்ள முடியாத மற்றவர்கள் அவனைப் பைத்தியக்காரன் என்று எண்ணியதில் வியப்பில்லை. வெளஉலக அறிவே இல்லாத அவனுடைய அப்பாவித்தனத்தைக் குறித்து எனக்கு அவனிடம் அநுதாபமும் ஏற்பட்டது.

சிசிர் வேலையை விட்டு வந்ததில் அவன் மாமிக்கு மிகவும் கோபம். இந்தத் தடவை அவள் தெளிவாகச் சொல்லி விட்டாள், "இனிமேல் இங்கே உனக்குத் தண்டச் சோறு கிடைக்காது! உன் வயிற்றுப்பாட்டுக்கு நீயே சம்பாதித்துக் கொள்" என்று.

சிசிர் ஒரு கையில் சூட்கேசும் ஒரு கையில் படுக்கையுமாக நடூவின் முன்னால் ஆஜரானான். அவன் வந்ததில் நடூவுக்கு மகிழ்ச்சி. "நீ என்னுடனேயே இருந்துவிடு, சிசிர்!" என்றான்.

"பார்க்கலாம்" என்று சுரத்தில்லாமல் பதில் சொன்னான் சிசிர்.

தன்மான உணர்வு மிகுந்த அவனுக்குத் தன் நண்பனின் ஆதரவில் நிரந்தரமாக வாழ விருப்பமில்லை என்பது எனக்குப் புரிந்தது.

சிசிர் நடூவின் வீட்டுக்கு வந்த சில நாட்களுக்குப் பிறகு திடீரென்று ஒரு நாள் அவனைக் காணோம். அவனுடைய கட்டிலுக்கு அருகில் ஒரு கட்டுக் காகிதங்கள் எரிந்த சாம்பற் குவியலும் ஒரு கடிதமும் இருந்தன.

சிசிர் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்: "நடூ! நான் கௌரவமாக வாழ வழி செய்யாத கவிதை, எனக்குப் பிறருடைய அலட்சியத்தையோ அல்லது அனுதாபத்தை மட்டுமோ சம்பாதித்துக் கொடுக்கும் கவிதை எனக்குத் தேவையில்லை. அதை எரித்துச் சாம்பலாக்கி விட்டேன். இன்று முதல் நான் கவி சிசிர் அல்ல; வேறு புதிய மனிதன்!... நான் யாருக்கும் பாரமாக வாழ விரும்பவில்லை...நான் போய் வருகிறேன்...உன் அன்பையும் ஆதரவையும் மறக்க மாட்டேன்..."

பத்து வருடங்கள் கழிந்துவிட்டன. இதற்கிடையில் ஆலோக் சௌதுரி மரணமடைந்து விட்டார். நடூ தந்தையின் வியாபாரப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான், ஆனால் அவன் சாராயத்தைப் பிறருக்கு விற்பதை விடத் தான் குடிப்பதையே அதிகம் விரும்பியதால் விரைவிலேயே பெருங் குடியனாக மாறி அதன் விளைவாக இறந்தும் போனான்.

நான் பல இடங்களில் பல வேலைகள் பார்த்தபிறகு கடைசியில் எங்கெங்கோ சிபாரிசு பிடித்து ஒரு பாங்கியில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தேன். ஒரு நாள் கணக்குப் புத்தகத்தில் சிசிர் ராய் என்ற பெயர் கண்ணில் பட்டது. அந்தக் கணக்கில் பல ஆயிரம் ரூபாய்கள் புரண்டு கொண்டிருந்தன.

எனக்குக் கவி சிசிரின் நினைவு வந்தது. எவ்வளவு அசாதாரணமான கவி அவன்! அவன் என்ன ஆனானோ?

ஒரு நாள் திடீரென்று கவி சிசிர் என் முன்னால் வந்து நின்றான். என்னால் என் கண்களையே நம்ப முடியவில்லை! நான் முன்பு கவனித்த பாங்குக் கணக்கு அவனுடையதுதானாம்!

சிசிருக்கு என்னை அங்கே காண ஆச்சரியம் ஏற்பட்டது. "மாஸ்டர் பாபு! நீங்களா? உங்களை இங்கே...." என்று இழுத்தான்.

"எதிர்பார்க்கவில்லை; இல்லையா? நானுந்தான் உன்னை இந்த நிலையில் எதிர்பார்க்கவில்லை" என்றேன் சிரித்துக் கொண்டே.

"மாஸ்டர் பாபு, உங்களுடன் சாவகாசமாகப் பழைய கதைகளெல்லாம் பேச வேண்டும். இப்போது எனக்குப் பேச நேரமில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு வாருங்களேன்! இந்தாருங்கள் என் விலாசம்" என்று சொல்லிச் சிசிர் என்னிடம் தன் விசிடிங் கார்டைக் கொடுத்தான்.

அதில் அச்சிடப்பட்டிருந்தது: "சிசிர் ராய், புரொப்ரைட்டர், பெங்கால் டிம்பர் ஒர்க்ஸ், 15, ரீஜண்ட் பார்க், கல்கத்தா—33"

ஒரு நாள் அவன் வீட்டுக்குப் போனேன். பிரும்மாண்டமான மூன்று மாடிக் கட்டடம். கீழே கேரேஜில் இரு பெரிய படகுக் கார்கள்.

அவ்வளவு பெரிய பங்களாவுக்குள் நுழையத் தயக்கமாக இருந்தது எனக்கு. நல்ல வேளையாக அப்போதுதான் உள்ளிருந்து வந்த சிசிர் என்னைக் கவனித்து உள்ளே அழைத்துச் சென்றான். தன் மனைவிக்கும் என்னை அறிமுகம் செய்து வைத்தான். "இது யார் தெரியுமா, பிமல்! நான் என் நண்பன் நடூவைப் பற்றி அடிக்கடி சொல்வேனல்லவா? அவனுடைய மாஸ்டர் இவர். எனக்கு ரொம்ப வேண்டியவர். இப்போது நம் பாங்கியில் வேலை பார்க்கிறார்...." என்று உற்சாகத்துடன் பேசிக் கொண்டே போனான் சிசிர்.

தன் கணவன் கேவலம் ஒரு பாங்கிக் குமாஸ்தாவைத் தலை மேல் வைத்துக் கொண்டு கூத்தாடுவது திருமதி ராய்க்குக் கட்டோடு பிடிக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. நான் பாங்கியில் என்ன வேலை பார்க்கிறேன் என்பதைச் சிசிர் தெளிவாகச் சொல்லா விட்டாலும் எனக்குக் குமாஸ்தாப் பிழைப்பு என்பதுதான் என் நடையிலும் உடையிலும் எழுதப்பட்டிருந்ததே! அவள் அலட்சிய பாவத்துடன் தலையைச் சற்றே அசைத்து எனக்கு வணக்கம் தெரிவித்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

சிசிர் என்னிடம் பிரியமாக இருந்தான், மனம் விட்டுப் பழைய நாட்களைப் பற்றியும் நடூவைப் பற்றியும் பேசினான், ஆனால் மற்ற

ரூ 5 மாத்திர சீட்டு
இரண்டு
சேருகிறவர்களுக்கு
உடனே..

எவர் சில்வர் டபரா டம்ளர் இலவசம்!

.....ஒரு சீட்டு........
சேருகிறவர்களுக்கு
எவர்சில்வர் டம்ளர்
.....இலவசமாக
கொடுக்கப்படும்!....



ரத்னா ஸ்டோர்ஸ்

போன்
3/78, பாண்டி பஜார் — 442942
80 ராஜகுருனா தெரு — 442968
தி. நகர், சென்னை-17

எங்கள் அங்கீகாரம் பெற்ற சந்தா வசூலிப்பவரிடம் உள்ளூர் அங்கத்தினர்கள் நேரிடையாக சந்தா செலுத்தலாம். வெளியூர் சேமிப்புச் சீட்டுகள் M. O. மூலம் சேர்த்துக் கொள்ளப்படும்.

சேர்ந்து விட்டீர்களா J. P. சிட் பண்டில்?

நன்றி அறிவிப்பு

பேரன்புடையீர்,

எங்கள் அழைப்புதனை ஏற்று கடந்த 9-2-70 அன்று மாலை 6-30 மணி யளவில் திரு உட்லண்ட்ஸ் ஹோட்டலில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ம. முத்துசாமி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட **J. P. சிட் பண்ட்** கம்பெனியின் ஆரம்ப விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த அதிகாரிகள், திரைப்படத் துறையினர், வியாபாரத் துறையினர் மற்றும் வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எங்களின் ஸ்தாபன வளர்ச்சிக்கு உங்கள் ஆதரவு என்றும் தேவையென வேண்டுகிறோம்.

J. பரமானந்தம்
J. P. பில்டர்ஸ்
J. P. சிட் பண்ட்

39, கங்காதீஸ்வரர் கோவில் தெரு, சென்னை-7 போன்: 61617


MARS

பலத்திற்கும் ஆரோக்கியத்திற்கும்
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

1898 முதல் பிரசித்தி பெற்றது!

ஆயுர்வேதாஸ்ரமம்
[illegible]
சென்னை-17.


துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட
ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!
ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!
பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரீஸ் தயாரிப்பு!
Cadbury's
Bournvita
the ideal food drink for strength and vigour
450g
சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சுவைக்கும்
காட்பரீஸ் போர்ன்விடா.
Bensons/1039/TAM

படி. அவன் முற்றிலும் மாறித்தான் போயிருந்தான். பத்து ஆண்டுகளுக்கு முற்பட்ட கவி சிசிரை அவனிடம் அடையாளம் காண முடியவில்லை என்றால். இப்போது என் முன் உட்கார்ந்திருந்தவன் ஒரு காலத்தில் கவிதையிலும் கற்பனைகளிலும் தன்னை மறந்து மூழ்கித் திளைத்த கவியல்ல; உலகத்தின் சூதுவாதுகளுடைய கறைபடாத, தூய எண்ணங்களும் இலட்சிய வேட்கையும் கொண்ட அப்பாவி இளைஞனல்ல. நான் இப்போது கண்ட வியாபாரி சிசிர் ராயிடம் அபரிமிதமான தன்னம்பிக்கை, தொழில் துறையின் நெளிவு சுளிவுகளில் நுழைந்து வெற்றியுடன் வரும் திறமை, சுயநலங்களும் மோசடிகளும் மலிந்த வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி காண எந்த முறையையும் தயக்கமின்றிக் கையாளும் துணிவு இவையெல்லாம் ஒருங்கே உருவெடுத்திருந்தன. கவி சிசிரின் இலட்சியக் கனவுகள் மர வியாபாரி சிசிரின் தொழில் அநுபவங்களுக்கடியில் நசுங்கிச் செத்தன....

சிசிர் தன் பத்தாண்டு வரலாற்றை விவரமாகக் கூறினான். கேட்பதற்குப் பழங் காலத்துத் தேவதைக் கதை போல் இருந்தது அது...

நடூவின் வீட்டை விட்டுப் புறப்பட்ட பிறகு அவன் பல இடங்களில் வேலைக்காக அலைந்தான். கடைசியில் அவனுக்கு ஒரு மர வியாபாரக் கம்பெனியில் வேலை கிடைத்தது. அவனுடைய வேலைத் திறமை முதலாளிக்குப் பிடித்திருந்தது. அது மட்டுமல்ல, முதலாளியின் ஏகபுத்திரி அவனுடைய அழகில் சொக்கிப் போய் விட்டாள். அவளைக் கல்யாணம் செய்து கொண்டு எல்லாச் சொத்துக்கும் வாரிசாகி விட்டான் சிசிர்.

“நீ முன்பெல்லாம் கவிதை எழுதுவாயே, சிசிர்?” என்று ஆரம்பித்தேன்.

‘கவிதை’ என்ற வார்த்தையைக் கேட்டதுமே அவன் முகத்தில் ஓர் அலட்சியச் சிரிப்பு தோன்றியது. அந்தக் கால நினைவில் அவனுக்குச் சற்று வெட்கமும் ஏற்பட்டது. “இப்போது உனக்குப் புரிகிற, எனக்குப் பிடிக்கிற, ஒரே கவிதை என்ன தெரியுமா? பணத்தின் கவிதைதான்! அந்தக் காலத்தில் கவிதை இயற்றிக் கொண்டு அதன் வார்த்தைகளின் ஒலியில் மயங்கிக் கிடந்தேன் நான். இப்போது எனக்கு விருப்பமான ஒலி கல்லாப் பெட்டியில் பணம் விழும்போது உண்டாகும் ‘கலகல’ ஒலிதான்!

“ஒரு சமயம் நானும் நடூவும் சுந்தரவனத்துக்குப் போய் அங்கேயே ஒரு வாரம் தங்கியிருந்தோம். வானளாவ உயர்ந்த மரங்கள், விதம் விதமான செடி கொடிகள், மலர்கள்! இயற்கையின் கவிதையாக மலர்ந்திருந்த அந்தக் காட்சியைக் காணக் காண என்னுள்ளும் கவிதையூற்றுப் பெருகியது. அது அந்தக் காலம்! இப்போதெல்லாம் பெரிய மரங்களைப் பார்க்கும் போது எனக்கு என்ன தோன்றுகிறது, தெரியுமா? ‘அந்த மரங்களைக் கொண்டு எவ்வளவு பலகைகள் செய்யலாம், என்ன விலைக்கு விற்கலாம், எவ்வளவு லாபம் வரும்...’ என்ற எண்ணம் தான். காட்டில் வளரும் மரங்களெல்லாம் மர வியாபாரி சிசிர் ராய் பலகைகளாக்கி விற்று லாபம் அடைவதற்காகவே இருக்கின்றன என்று தோன்றுகிறது!.....”

மர வியாபாரத்தைப் பற்றிப் பேசப் பேசச் சிசிரின் உற்சாகம் கரைபுரண்டோடியது.

எனக்கோ கவி சிசிரின் மரணத்தை நினைக்க நினைக்கத் துக்கம் தொண்டையை அடைத்தது......

அட்டைப்பட விளக்கம்

மறத்தியோ என் நெஞ்சே?

அவன் அவளிடம் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தான். அவளைச் சந்தித்து அளவளாவும்போதெல்லாம், “இனி உன்னை ஒரு கணமும் பிரியேன்” என்று சொல்லிப் பசப்புவான். கடைசியில் பிரியும் தருணத்தில், எப்படியோ இனிய வார்த்தைகளைக் கூறி அவளை ஏமாற்றி விட்டுப் போய் விடுவான். அது மட்டுமா? குறித்த நாளில், குறித்த வேளையில் வராமல் அவளை அலைக்கழிப்பான். அந்நிலையிலும் அவள் வெண்மதி விரித்த தண்ணிலாவையும், சிற்றலைகள் உந்தும் ஏரியையும் கனவுக் காட்சியாகக் கண்டு கொண்டிருப்பாள். நாளாக ஆக அவள் இன்பக் கனவு கலைந்துவிடும். பிரிவுத் துயர் ஒருபுறமாக அவன் மீது கோபம் ஒரு புறமும், அவனது ஆசை வார்த்தைகளில் மயங்கிப் போகும் தன்மீதே ஆத்திரம் ஒரு புறமும் வாட்டியெடுக்க, “இன்று அவர் வரட்டும். சிரித்துப் பேசுகிறேனா பார். இன்முகம் காட்டி வரவேற்கிறேனா பார். என் அலட்சியத்தைக் கண்டு அவர் துடித்துப் போவார்” என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டேயிருப்பாள்.

ஆனால் பிறகு நடந்ததென்ன?

அவன் வந்தான். “தேன்மொழி, மீன்விழி” என்று அன்பு பொங்க ஆசை வார்த்தைகள் பேசி அவளை அணைத்துக்கொண்டான். தான் திட்டமிட்டது போல் அவனைக் கண்டதும் அப்பூங்கொடி முகத்தைத் திருப்பிக்கொள்ளவில்லை. தேனாய், தீம்பாகாய், கற்கண்டாய் இனித்த அவன் பேச்சில் மயங்கிப் போய், அவனது அரவணைப்பில் துவண்டாள் தன்னை மறந்து. அவனிடமிருந்து விடுபட்டதும் சற்று முன் இருந்த அவள் மனநிலை நினைவுக்கு வந்தது.

“ஏ, மூட மனமே! உனக்கு எத்தனை முறை சொல்லியிருந்தும், அவர் வரும்போது வெறுப்பு உணர்ச்சியைக் காட்ட மறந்து விடுகிறாயே!” என்று செல்லமாகத் தன் மனத்தைக் கடிந்து கொண்டாள்.

சங்ககாலப் புலவர் அம்மூவன் இயற்றியுள்ள குறுந்தொகைப் பாடலின் விளக்கமாக இவ்விதழ் அட்டைப் படம் அமைந்திருக்கிறது.

“மெல்லிய, இனிய, மேவருதகுந,
இவை மொழியாம், எனச் சொல்லினும்
அவை நீ
மறத்தியோ வாழி என் நெஞ்சே, பலவுடன்
காமர் மாஅத்துத் தாது அமர் பூவின்
வண்டு வீழ்பு அயரும் கானல் -
தெண்கடல் சேர்ப்பனைக் கண்ட பின்னே?”



விரைவில் வெளி வருகிறது!
முருகப் பெருமானின் திரு அவதார
மகிமையை விளக்கும் புராணப் படம்
நீலா புரொடக்ஷன்ஸ்
குமார
சம்பவம்
ஈஸ்ட்மென் கலர்
டைரக்ஷன்
சுப்பிரமணியம்
சங்கீதம்
தேவராஜன்
ஸ்டூடியோ
மெரிலாண்ட்
• ஜெமினி கணேஷ்
• பத்மினி
• ராஜஸ்ரீ. வித்யா
• ஸ்ரீதேவி. பாலச்சந்தர்
இதர விவரங்களுக்கு:
ஸிட்டி தியேட்டர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
திருவனந்தபுரம்-14




விவசாயத்தில் இன்று...

விவசாயத் தொழிலாளர்கள் பணி

விவசாயத்தில் இன்று மிராசுதாரர்களுக்குள்ள ஒரு பெரும் பிரச்னை என்று எடுத்துக் கொண்டால் அது தொழிலாளர்கள் பிரச்னை தான். விவசாயத்தில் அதிக ஊக்கம் காட்ட வேண்டிய நிலச்சுவான்தார்கள் விவசாயத்துக்காக என்று நவீன கருவிகளிலும், புதிய இயந்திரங்களிலும் தங்களது பணத்தை முதலீடு செய்ய அஞ்சுகின்றனர். ஏனெனில், சென்ற ஆண்டுத் தொடக்கத்தில் நடந்த தகராறுகளை அவர்கள் மறக்கவில்லை. உழுதின்ற வயல், நன்முறையில் விளைய வேண்டும் என்ற கவலை போய்த் தகராறு இல்லாமல் இவ்வருடம் அறுவடை நடக்க வேண்டுமே என்ற கவலைக்கு ஆளாகி விட்டனர்.

'விவசாயத்தில் இன்று' அதிக முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறதென்றால் அதற்குக் காரணம் விவசாயத் தொழிலாளர்கள்தான். இன்னும் அதிகமாக அவர்களுக்கு ஊக்கம் அளிக்க மிராசுதாரர்கள் தயாராக இருக்கிறார்கள். அதை நல்வழியில் தொழி



லாளர்கள் பயன்படுத்திக் கொண்டு, மேலும் உற்பத்தி செய்வது அவர்களுடைய கைகளில் தான் இருக்கிறது. ஆக்கப் பணியில் ஊக்கமுடன் செயல் புரிய வேண்டிய விவசாயத் தொழிலாளர்கள், தீய வழிகளில் செல்லாதிருக்க வேண்டும்.

மிராசுதாரர்கள், குறிப்பாகக் கீழத் தஞ்சைக்காரர்கள் சென்ற ஆண்டு விவசாயத்தில் மிக்க அதிருப்தி அடைந்து விட்டார்கள். அது போன்ற அதிருப்திகளுக்கு இடம் கொடுக்காது, நன்முறையில் தங்களது பிரச்னைகளுக்கு விடை கண்டு, மிராசுதாரர்கள், தொழிலாளர்கள் என்ற பேதம் இன்றி, அவசிய மற்றவைகளைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளாமல், தங்கள் உறவை நல்லுறவாக்கி நாட்டை வளம் அடையச் செய்ய வேண்டும்.

நாக்பூர்—1 கூகர் எஸ். சங்கரன்

பயிர் இன்ஷ்யூரன்ஸ் தேவை

சுமார் இருபது ஏக்கர் நிலம். ஒரு டிராக்டர், 4 மோட்டார் பம்பு செட்டுகளுடன் பண்ணை நடத்தும் விவசாயியாகிய நான் போகத்துக்குப் போகம் சிறப்பாகச் சாகுபடி செய்தும், செலவு கழித்து நிகரம் பார்த்தால் சொற்ப லாபம் அல்லது சில சமயம் நஷ்டமும் ஏற்படும். வறட்சி ஏற்பட்டால் கேட்கவே வேண்டாம். நான் ஒவ்வொரு முறையும் சர்க்கார் சொற்படி அதிக விளைச்சல் தரும் நெல் வித்துக்களையும், ரசாயன உரங்களையும், பூச்சி நாசினிகளையும், யந்திர சாதனங்களையும் நல்ல நீர் வளத்தையும் உபயோகித்து உணவுப் பொருள் விளைவிப்பதில் நல்ல மகசூல் பெற்றும் நஷ்டத்தையே அடைந்து வருகிறேன். காரணம், சர்க்கார் நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலை மிகவும் குறைவானது. எல்லாப் பொருள்களின் விலையும் ஏகத்தாறுக ஏறி வரும் இந்நாளில் விவசாயிகளின் வாழ்க்கைப் பண்டமாகிய நெல்லை மட்டும் அரசாங்கம் தன் கட்டுப்பாட்டுக்குக் கீழ் வைத்துக் கொண்டால் அந்த வருமானத்தில் விவசாயி எப்படித் தனது தொன்றுதொட்டு வரும் பாரம்பரியத்தைக் காப்பாற்றுவது? பசுமைப் புரட்சி ஏற்பட வேண்டும் என்று கூறும் அரசாங்கம், ஏன் குறுகிய காலத்தில் முன்னேறிய ஜப்பான் நாட்டைப் போல் விவசாய விளைச்சலுக்கு அதிக விலை கொடுத்துப் புத்துயிர் அளிக்கக் கூடாது? மேலும் பூச்சியினாலோ, இதர வறட்சியினாலோ நெற்பயிருக்கு ஏற்படும் நஷ்டத்தைப் போக்கக் கொஞ்சமும் காலதாமதமின்றிப் பயிர் இன்ஷ்யூரன்ஸ் முறையையும் கொண்டு வரலாமே! அதோடு வறட்சிக் காலத்தில் ஏற்படும் கடன்களை



மான்யங்களாக மாற்றவும் சர்க்கார் முன் வர வேண்டும்.

சர்க்கார் தற்போது கட்டுப்பாட்டை நீக்கி இருப்பினும் சர்க்கார் நிர்ணயித்துள்ள விலை மிகவும் குறைவு. தற்போதுள்ள கொள்முதல் விலையை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையில் உயர்த்திப் பொதுமார்க்கெட்டில் அந்த விலைக்கு இறங்காமல் சர்க்கார் பாதுகாப்புக் கொடுக்கவும் வேண்டும்.

முருக்கம்பாக்கம் வி. சுப்பிரமணியரெட்டியார்

வட்டமேஜை

பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது

ராஜாஜியின் 1967ம் வருஷ செயல் திறன் கொஞ்சம் கொஞ்சமாகப் பாமர மக்களுக்கும் படித்த மக்களுக்கும் புரிகிறது. உணவு கண்ட்ரோல் நீக்கம் அதில் அருமையானதாகும். திரு மு. க. சடாரென்று ரேடியோவில் சொல்லியிருந்தால் ராஜாஜி வழியைப் பின்பற்றியிருந்தால் — மிகச் சிறப்பாயிருந்திருக்கும். திரு ஷண்முகம் கொஞ்ச காலமாகவே கோடி காட்டி விட்டதால் கண்ட்ரோல் நீக்கம் எதிர்பார்த்த ஒன்றாகி விட்டது.

விட்டலாபுரம்,
10-2-70 வேங்கடாச்சாரி

கல்கத்தாவில் ஃப்ரெஞ்சு கான்ஸல் ஜெனரல் மனைவியார், அவர்கள் இல்லத்திலேயே குத்திக் கொலை செய்யப்பட்டதையும் அவரது கணவரும், மகனும் படுகாயங்களுக்கு ஆளாகி, ஆஸ்பத்திரியில் கிடப்பதையும் செய்திப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். அஹிம்ஸா மூர்த்தி, அண்ணல் காந்தி பிறந்த மண்ணிலா இப்படியொரு கொடுஞ் செயல்?

இந்த நிகழ்ச்சி, நாட்டில் தருமம் குலைந்து வருவதையும், அராஜகம் மலிந்து வருவதையும்தான் உணர்த்துகிறது. அந்நிய நாட்டினரிடையே பாரதத்துக்கு இருந்து வந்த பெருமைக்கு 'மாசு' ஏற்பட்டு விட்டது. அந்நிய நாட்டினருக்கு, அதுவும் பொறுப்புள்ள பதவியில் இருப்பவருக்கு நமது அரசு அளிக்கும் பாதுகாப்பு இவ்வளவுதானா?

மேற்கு வங்க அரசின் கையாலாகாத்தனத்தை இந்திய அரசுதான் வெறுமனே பார்த்துக் கொண்டு கைகட்டி நிற்கிறது; ஏன்?

சென்னை-33
9-2-70 எம். ஆர். ராஜன்

திருவள்ளுவர், பல வகையான அறங்களுள் ஒன்று ''சூது ஒழிப்பு''. வெற்றியே பெறுவதானாலும் சூதினை விரும்பக் கூடாது என்கிறார். மேலும் அவர் அச்சூதினால் வரும் பொருள் கட்டாயமாக அறத்தைத் தராது; இன்பத்தையும் தராது என அடித்துக் கூறுகிறார்.

இவ்வாறு இருக்க அரசாங்கமே இதனை ஏற்று நடத்துவது மிகவும் வருந்துதற்குரிய விஷயம். வள்ளுவரையும் அவரது குறளையும் இன்றும் பாராட்டி வருவதாகக் கூறும் தமிழக அரசே இதனை ஏற்று நடத்துவதன் மூலம் தாங்கள் செய்கின்ற நற்தொண்டை எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக்குவதைக் காண்கிறோம்.

சமீபத்தில் வெளிவந்துள்ள ஒரு விளம்பரத்தில் ஒரு குழந்தை மற்றொரு குழந்தைக்குத் தான் ஒரு டிக்கட்டு வாங்கியுள்ளதாயும் அதனால் அது ஓர் இலட்சாதிபதியாகப் போவதாகவும் கூறுகிறது. குழந்தைகளின் மனத்தில் இப்படிப்பட்ட மோசமான எண்ணங்களைத் தோற்றுவிக்கலாமா? அவர்கள் எதிர்காலம் என்ன ஆவது?

தஞ்சை,
7-2-70 ந. கல்யாணசுந்தரம்

அதிக விளைச்சலைப் பெருக்குவதற்காகத் தற்போது பயிரிடப்படும் 'ஐ. ஆர். 8' நெல் ரசாயன உரம் பெருமளவில் போட்டுப் பயிரிடப்படுகிறது. அதனால் ஓரளவு அதிக விளைச்சலைப் பெற்றாலும், அந்த அரிசியைச் சாப்பிடும் அநேக பேர்களுக்கு ஒத்துக் கொள்வதில்லை. வயிற்றுக் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதனால் இந்த அரிசிச் சோற்றைச் சாப்பிடுவதற்குப் பலர் பயப்படுகிறார்கள். விவசாயிகளும் வெறுக்கின்றனர். காரணம், ''கரணம் தப்பினால் மரணம்'' என்பதைப் போல், கவனம் சிறிது தவறினாலோ, சிறிது உரம் குறைந்து விட்டாலோ பூச்சிகள் வெகு விரைவாகப் பற்றிக்கொண்டு பயிர்களை எளிதாக அழித்து விடுகின்றன. எல்லாவற்றிலும் பிழைத்து விட்டாலும் அரிசியை எடை போட்டுக் கொடுக்கும் போது மிகவும் எடை குறைவாக இருக்கிறது. இதனாலும் விவசாயிகள் இதனைப் பயிரிடப் பயப்படுவதுடன் வெறுக்கவும் செய்கிறார்கள்.


அதிராம்பட்டினம்
10-2-70 மு.சா. அப்துல் கரீம்

பெரும்பாலான சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் மிகுந்த அலட்சியத்துடன் நடத்தப்படுகிறார்கள். ஏழைகள் பொருள் வசதி இல்லாத காரணத்தால்தான் சர்க்கார் ஆஸ்பத்திரிகளுக்கு வருகிறார்கள். இங்கும் பணம் கொடுத்தால்தான் காரியம் நடக்கும் என்ற நிலை மிகவும் வருந்தத் தக்கது. மருத்துவத் துறையில் இருப்பவர்கள் மற்றவர்களை விடச் சேவை உணர்ச்சியும், பொறுமையும் நிறைந்தவர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆனால் நோயாளிகள் விரோதிகள் போலல்லவா விரட்டப்படுகிறார்கள்!

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் கொடுக்கப்படும் மருந்துகள் எந்த வியாதியையும் எளிதில் குணப்படுத்துவதில்லை என்பது உலகப் பிரசித்தம்! மருத்துவத் துறைக்குக் கூடுதலான நிதி உதவிகளை ஒதுக்குவதால் மட்டும் பயனில்லை. அளிக்கப்படும் நிதி உதவிகள் உரிய முறையில் பயன்படுகின்றனவா என்பதையும் அரசினர் அடிக்கடி கண்காணிக்க வேண்டும். மருந்துகளின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எந்த வியாதிக்கும் ஒரே விதக் கலர்த் தண்ணீர்தானா என்று நோயாளிகள் முணுமுணுப்பது அரசினரின் செவிகளுக்கு எட்டாதிருக்க நியாயமில்லை.

திண்டுக்கல், 6-2-70 இராம. சுப்பையா

பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப்பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற்கேற்ற முறையில் செய்யப்பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்குகிறது. தயாரிப்பவர்கள்: கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்பதில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடையவர்கள்.

4 அளவுகள் :
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ்

பாலுசேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1947)

"வீணு விகார்" — 17-A, டிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்-22. D. D.
டெலிபோன்: 471455
தபால் பெட்டி 6759 :: தந்தி: "GROWRICH"

மார்ச் 1970க்குரிய கீழ்க்கண்ட புதிய குருப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன

ஏலம் கேட்ட பிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட குருப்புகள்

குறுகிய காலம்: 25 மாதங்கள்			நீண்ட காலம்: 40 மாதங்கள்		
சேருவதற்கு கடைசி தேதி: 7-3-1970			சேருவதற்கு கடைசி தேதி: 28-3-1970		
முதல் ஏலத் தேதி: 8-3-1970			முதல் ஏலத் தேதி: 29-3-1970		
வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
B	100/-	2,500/-	E	500/-	20,000/-
C	50/-	1,250/-	F	250/-	10,000/-
F	25/-	625/-	G	125/-	5,000/-
G	20/-	500/-			

நீண்ட காலம்: 50 மாதங்கள் - ஏலம் எடுக்காத சீட்டுதாரர்களுக்கு மட்டும் டிவிடெண்டு உண்டு.

சேருவதற்கு கடைசி தேதி: 14-3-1970 – முதல் ஏலத் தேதி: 15-3-1970

வகுப்பு	தவணை ரூ.	சீட்டுத் தொகை ரூ.
LTA	100/-	5,000/-
LTB	50/-	2,500/-
LTD	20/-	1,000/-

வேலை நேரம்: காலை 8 மணி முதல் 10-30 மணி வரை
மாலை 4 மணி முதல் 7-30 மணி வரை

வார விடுமுறை: திங்கட்கிழமை

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
"பாலுசேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, தபால் பெட்டி 414, சென்னை–5

கிளைகள்: பெங்களூர் – கல்கத்தா – புது டெல்லி

இலவச பிரசுரத்திற்கு எழுதுங்கள்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

BBC - Kalki 1002'70


ஐந்தே காசு போதும்

உங்கள்

குடும்பம்

பெருகாமல்

தடுக்க!



நிரோத் உபயோகியுங்கள். ஆண்கள் சுலபமாக உபயோகிக்கக்கூடிய உயர்தர ரப்பரினாலான இக் கருத் தடைச் சாதனம் எளிமையானது, தீமையற்றது. நிரோத் இப்பொழுது நாடெங்கிலும் கிடைக்கிறது.

உங்கள் குடும்பம் பெருகாமல் தடுக்கும் சக்தி உங்களிடமே இருக்கிறது.

இப்பொழுது நாடெங்கிலும் கிடைக்கிறது

15 காசுக்கு 3

அரசாங்க ஆதரவிலும் குறைந்த விலை

நிரோத்

உபயோகியுங்கள்

உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம் ஆண்களுக்கானது

வீட்டுச் சாமான்கள், மருந்து, சிகரெட் விற்கும் கடைகளில் கிடைக்கும்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

தாயிடமிருந்து மகளுக்கு வரும்
உட்வர்ட்ஸ் அறிவுரை

உங்கள் குழந்தையை ஆரோக்கியமுடன் குதூகலமாக வைத்திருக்க உறுதுணை

உட்வர்ட்ஸ்

கிரைப் வாட்டர்

தலைமுறை தலைமுறையாக புத்திசாலித் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து வருவது உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர். குடல் வலி, புளிப்பு, உப்புசம், பல்முளைப்புக் கோளாறுகள் ஆகியவற்றுக்கு உடனடி நிவாரணம் தருவது உட்வர்ட்ஸ்.



காத்தும் கொள்வீர்
கண்டிப்புடனே.
எப்போதும் ஒரு புட்டி
உங்கள் கைவசமிருக்கட்டும்



உட்வர்ஸ் கிரைப் வாட்டர்
நூறு ஆண்டுகளுக்கு மேலாக
புத்திசாலித் தாய்மார்களால்
உபயோகிக்கப் பட்டு வருகிறது.

AT. 30 TM

REGISTERED No. M. 4399

Registered as a Newspaper in Ceylon